
தர்மசக்கரம்



துன்மதி ௵ கார்த்திகை ௴ சககரம் 30 ஆரம் 11

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா



தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30 | துன்மதி ௵ கார்த்திகை ௴ | ஆரம் 11

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலாதவர்கள் ரூபாய் எட்டு மட்டும் அனுப்பலாம். பாக்கி நான்கு ரூபாயைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யி னின்று ஈடு செய்து கொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

வெளிநாடு சந்தா: நாங்கள் ஏற்கனவே தங்களுக்கு அனுப்பி வந்த இதழ்களுக்கு 80 பைசா ஸ்டாம்பு ஒட்டி அனுப்பிக்கொண்டு இருந்தோம். 1—7—1981 முதல் வெளிநாடு தபால் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. ஆதலால் இதழ் ஒன்றுக்கு ரூ. 1-40 பைசாவுக்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டியுள்ளது. எனவே இனி வெளிநாடு ஆண்டு சந்தா ரூ. 35/-ஐ அனுப்பி வைத்து சந்தா பதிந்து கொள்ளக்கோருகிறோம்.

உள்நாடு வருட சந்தா ரூ. 12-00 வெளிநாடு வருட சந்தா ரூ. 35-00

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 22—11—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத்சுவாமி போதானந்தர்

திருச்சி ஜில்லா—தாத்தய்யங்கார் பேட்டையில் 28—11—81 சனிக்கிழமை

இடம்: கன்னிகா பரமேஸ்வரி பஜனைமடம்
நேரம்: மாலை 5-30 மணிமுதல் இரவு 7-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலம் ஜில்லா—ராசிபுரத்தில் 29—11—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
நேரம்: காலை 10-மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 6—12—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

சேலம் ஜில்லா—கனககிரியில் 6—12—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு வேலாயுத சுவாமி தேவஸ்தானம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—சிவகிரியில் 6—12—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: நடுநிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

சேலம் ஜில்லா—சேந்தமங்கலத்தில் 12—12—81 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி அம்மன்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலம் ஜில்லா—வளவாசியில் 14—12—81 திங்கட்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தவ இல்லம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—குமரன்குன்று ஆலயத்தில் 20—12—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு ஸ்ரீ கல்யாண சுப்ரமணிய சுவாமி ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 30 | துன்மதி ஞூ கார்த்திகை மீ | ஆரம் 11

பிரார்த்தனை

ननु प्रपन्नः सकृदेव नाथ तवाहमस्मीति च याचमानः ।
तवानुकम्प्यः स्मर तत्प्रतिज्ञां मदेकवर्ज्यं किमिदं व्रतं ते ॥

— यमुनाचार्य

நனு ப்ரபன்ன: ஸக்ருதேவ நாத
தவாஹமஸ்மீதி ச யாசமான: ।
தவானுகம்ப்ய: ஸ்மர தத்ப்ரதிக்ஞாம்
மதேகவஜ்யம் கிமிதம் வ்ரதம் தே ॥

— யமுனாச்சார்யர்

"நான் உனக்குரியவன்" என்று இயம்பி உன்னைச் சரணடைபவனைக் காத்தருள்வேன் என்று நீ கூறியுள்ளாய். இக்கூற்றுக்கு நான் ஒருவன் மட்டும் இலக்கோ பகர்ந்தருள்வாய்.

நேரே நினதுஅருள்என் நெஞ்சைக் கவரின்ஒன்றும்
பாரேன் சுகமும் படைப்பேன் பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

சினத்தை அகற்றவல்லது அன்பு.

பொய்யைப் போக்கவல்லது மெய்ம்மை.

துன்பத்தைத் துடைக்கவல்லது அனுதாபம்.

நெறி வழுவியவனையும் நெறிநிற்பவனுக்க வல்லது அன்பு.

அறநெறியில் நிலைத்திருப்பவன் நிறைவாழ்வு வாழ்கிறான்.

சுயநலத் தியாகத்திற்கேற்ப மனிதனிடத்து ஆத்மசக்தி ஓங்குகிறது.

பரிபூரணத்தை எட்டும் வரையில் உன் முயற்சியை நிறுத்திவிடாதே.

மனம் தூயதாவதற்கேற்பப் பிரபஞ்சத்தில் மனிதன் தூய்மையைக் காண்கிறான்.

நெறிபிறழ்கிறவன் அஞ்சுகிறான்; நெறிநிற்பவன் அச்சத்தை வெல்லுகிறான்.

அரும்பெரும் செயல்கள் அகங்காரமற்ற நிலையில் இனிது நிகழ்வனவாகின்றன.

உண்ணுதிருப்பதும், இறைவணக்கமும் ஒன்றையொன்று சார்ந்து இருத்தல் வேண்டும்.

மனதில் உதிக்கிற எண்ணங்கள் யாவும் சொல்லாக வடிவெடுக்க வேண்டிய அவசியமில்லை.

தீமையைக் கொண்டு தீமையை அகற்ற முடியாது; நலன் ஒன்றே தீமையை அகற்றவல்லது.

மனதை நடுநிலையில் வைத்திருப்பவன் முறையாகப் பேசவும், செயல் புரியவும் வல்லவனுகிறான்.

தன்னால் ஆகக்கூடிய காரியத்தை மனிதன் பிறரிடமிருந்து எதிர்பார்க்கும் அளவுக்கு அவன் கீழ்மையுறுகிறான்.

நீ எப்படி இருந்தாய் என்பதை மறந்துவிடு; எப்படி இருக்கவேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.

பரமஹம்சர் புகட்டிய
பெருநெறி விளக்கம்

தக்ஷிணேசுவர ஆலயத்திலே பரமஹம்ச தேவர் அறையில் பரமஹம்சதேவரும் மகேந்திரரும் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது குளிர்ந்த மாலைநேரம். பக்தர்கள் ஆலயத்தின் பூங்காவில் இங்குமங்கும் உலாவிக் கொண்டிருந்தார்கள். பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் அடங்கிய குரலிலே கூறியதாவது: "அன்பர்கள் எல்லாரும் தாங்கள் நன்கு தியானம் பண்ணுவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் பால்து மட்டும் தனக்குத் தியானம் பண்ண இயலுவதில்லை என்று முறையிடுகின்றானே, அதற்குக்காரணம்யாதோ? நரேந்திரனைப்பற்றி நீ என்ன நினைக்கின்றாய்? அவன் நேர்மையே வடிவெடுத்தவன்; உடல் உணர்வைத் தாண்டியவன். ஆயினும் அவனுக்கு இப்பொழுது குடும்பத் தொல்லைகள் பல வந்து வாய்த்துள்ளன. அவற்றை முன்னிட்டுச் சாதனத் துறையில் அவனுடைய முன்னேற்றம் சிறிது தடைப்படுகிறது. ஆயினும் இந்த இக்கட்டை அவன் அதிவிரைவில் மீள வல்லவனாவான்."

அறைக்கு வெளியே திண்ணையில் அமர்ந்து கொண்டு நரேந்திரன் ஒரு வேதாந்தியோடு பேசிக்கொண்டு இருந்தான். இடையிடையே பரமஹம்சதேவர் வெளியே எட்டிப் பார்த்து அப்படிப் பேசிக்கொண்டிருந்தவர்கள்மீது தம் கருத்தைச் செலுத்தினர். இதற்கிடையில் வெளியே உலாவிக்கொண்டிருந்த பக்தர்கள் பலர் பரமஹம்சதேவருடைய அறைக்குள் வந்து அமர்ந்தனர். அவர்களுக்கிடையில் மகிமசரணும் இருந்தான். பாடல் ஒன்று பாடும்படி அந்த மகிமசரணைப் பரமஹம்சர் வேண்டினர். அவர் வேண்டுதலுக்கு இணங்கி அவனும் மஹாநிர்வாண தந்த்ரம் என்னும் நூலில் அடங்கியிருந்த கருத்து ஒன்றைப் பற்றிப் பாடினான்.

ஹ்ருதயகமலத்திலே வீற்றிருக்கும் பேரறிவுப் பரம்பொருளாகிய பிரம்மசைதன்யத்தை நாம் வழுத்துகிறோம். நிர்விகாரமாயிருப்பது பெரிய பொருள். ஹரியும் ஹரனும் பிரம்மதேவனும் ஆகிய மும்மூர்த்திகள் அந்த அகண்ட வஸ்துவைப் போற்றுகின்றனர்.

இதே பாங்கில் இன்னும் சில பாடல்களை மஹிமசரண் பாடினான். அதன் பிறகு அவன் சங்கராச்சாரியார் திருவாய் மலர்ந்தருளியிருந்த சிவனைப் பற்றிய ஸ்தோத்திரம் ஒன்றைப் பாடினான். அதில் அடங்கியிருந்த கருத்தாவது:

"ஓ மஹாதேவா, நீ மங்களமே வடிவெடுத்தவன். நீ சந்திரனைச் சூடாமணியாக வைத்திருக்கின்றாய். மன்மதனைத்தகனம் பண்ணியவன் நீ. திரிசூலத்தை நீ கையில் ஏந்தியிருக்கின்றாய். யாண்டும் நலமாயிருக்கின்றாய். ஹிமாசலத்திற்கு அதிபதியாயிருப்பவன் நீயே. அம்பிகையின் சமேதா, ஜீவகோடிகள் அனைத்துக்கும் தலைவா, அஞ்சி உன்னை வந்து அடைந்தவர்களுடைய துயரத்தைத் துடைத்தவா, இப்பிரபஞ்சமானது பாதையில்லாப் பேர் அடவியாக அமைந்திருக்கிறது. இதனுள் அகப்பட்டுக் கொள்ளுகிறவர்களனைவரும் துயரத்துக்கு ஆளாகிறார்கள். ஆதரவற்றவனாக நானும் இதனுள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என்னை நீ காப்பாற்றுவாயாக. பார்வதி தேவியின் ஹ்ருதய கமலத்தைக் கொள்ளை கொண்டு போனவனே, சந்திரசேகரனே, பசுபதியே, பைரவர்களுக்கு அதிபதியே, பார்வதி மணாளா, வாமதேவா, சொரூபத்தில் தன்னில் தானாகத் திளைத்திருப்பவனே, ருத்ர மூர்த்தியே, பினாகம் என்னும் வில்லைப் படைத்திருப்பவனே, துக்கத்திற்கு இருப்பிடமாகிய பிரபஞ்சம் என்னும் பாதையற்ற பேர் அடவியிலே ஆதரவற்றவனாக அகப்பட்டுக் கொண்டிருக்கும் என்னைக் காத்தருள்வாயாக. நீலகண்டனே, சிவா, ரிஷபக்கொடியானே, பஞ்சாக்ஷரனே, விஸ்வநாதனே, பன்னக பூஷணனே யாண்டும் மங்கள வடிவினனே, நலனுக்கு இருப்பிடமே, உயிர்களனைத்துக்கும் இறைவா, பார்வதி நாதனே, துன்பமே வடிவெடுத்துள்ள மண்ணுலகம் என்னும் பாதையற்ற வனாந்தரத்தினின்று ஆதரவற்ற என்னைக் காத்தருள் வாயாக."

"அண்டங்களனைத்துக்கும் இறைவா, ஓ சிவ

சங்கரா, ஓ தேவாதி தேவா, ஜடாபாரத்தினுள் கங்கையைத் தாங்கியிருப்பவனே, பிரமனுக்கும், நந்திகனுக்கும் தலைவா, ஓ ஹரனே, உலகனைத்துக்கும் இறைவா, துன்பத்திற்கு இருப்பிடமாகிய இவ்வையக வாழ்வு என்னும் பாதையற்ற வனாந்தரத்தினின்று ஆதரவற்ற என்னைக் காத்தருள்வாயாக. ஓ காசி நாதனே, மணிகர்ணிக கட்டத்தில் இலங்கும் ஸ்மசானத்திற்கு இறைவா, வீராதி வீரா, தக்ஷப்பிரஜாபதியினுடைய பொருளற்ற வேள்வியைத் தகர்த்தருளியவனே, நீக்கமற எங்கும் நிறைந்திருப்பவனே, பூதகணங்களுக்கு இறைவனே, அனைத்தையும் ஓதாது உணர்ந்தவனே, ஜீவகோடிகள் அனைத்து அகத்தும் யாண்டும் பிரியாது வீற்றிருப்பவனே, ஓ இறைவா, துன்பம் நிறைந்துள்ள இவ்வையக வாழ்வு என்னும் பாதையில்லா அடவியினின்று காப்பாரற்றுக் கிடக்கும் என்னைக் காத்தருள்வாயாக. ஓ மஹாதேவா, அடியவர்களுக்கு எளியவனே, கேடு ஒன்றும் இல்லாதவனே, நலனனைத்திற்கும் இருப்பிடமே, ஓ வ்யோமகேசா, நீலகண்டனே,உயிர்களனைத்திற்கும் இறைவா, மேனி முழுதும் சுடலைப் பொடியைப் பூசியிருப்பவனே, கபாலங்களைக் கோர்த்து மாலையாக அணிந்திருப்பவனே, துன்பங்கள் அனைத்துக்கும் உறைவிடமாகிய இவ்வையக வாழ்வு என்னும் வழியற்ற வனாந்தரத்தினின்று காப்பாரின்றிக் கதறிக்கிடக்கும் என்னைக் காத்தருள்வாயாக. கயிலாயகிரி வாசனே, ரிஷபத்தை வாகனமாக உடைத்திருப்பவனே, கூற்றுவனைக் காலால் உதைத்துத் தள்ளியவனே, ஓ முக்கண்ணனே, மூவுலகுக்கும் வேந்தனே, நாராயணனுக்கு இனியவனே, காமனைக் காய்ந்தவனே, சக்தி தேவிக்குத் தலைவனே, துன்பக் கடலாகத் திகழும் மண்ணுலக வாழ்வு என்னும் பாதையில்லா அடவியினின்று காப்பாரற்றுக் கிடக்கும் என்னைக் காத்தருள்வாயாக. ஓ விசுவநாதனே, அண்டங்களனைத்துக்கும் அடைக்கலமே, எண்ணிக்கையிலடங்காத அனந்தங்கோடி வடிவங்களில் இலங்குபவனே, அகிலாண்டத்துக்கும் ஆருயிரே, அகிலாண்டம் எங்குமுள்ள எண்ணிக்கையிலடங்காத நல்லொழுக்கங்களுக்கு உறைவிடமே, ஜீவகோடிகள் அனைத்தாலும் ஆராதிக்கப்படுபவனே, தீனதயாளுவே,எளியவர்களின் மித்திரனே, இவ்வையக வாழ்வு என்னும் வியாதி மயமாயிருக்கும்பாதையில்லா வனாந்தரத்தினின்று ஆதரவற்று அவதிப்பட்டுக் கிடக்கும் என்னை ஆண்டருள்வாயாக."

இங்ஙனம் பக்திபூர்வமாக மகிமசரண் சிவனைப் பற்றிப் பாடி முடித்தான்.

பரமஹம்சதேவர் மகிமசரணிடம் கேள்வி ஒன்றைக் கிளப்பினார். "இவ்வையக வாழ்வை ஆழ்ந்த கிணறு என்றோ, வழியற்ற வனாந்தரம் என்றோ நீ பகருவானேன்? ஆத்ம சாதகன் ஒருவன் ஆரம்பதசையில் அத்தகைய எண்ணத்தோடு வாழ்வைத் துவக்கலாம். ஆனால் சாதனத்தில் சிறிதளவாவது முன்னேற்றமடைந்து இறைவனுடைய திருவடியை உறுதியாகப் பற்றிப் பிடித்துக்கொண்டவனுக்குப் பயம் எங்கிருந்து எப்படி வரும்? அன்னவனுடைய மனப்பான்மையோ அறவே மாறியமைகிறது. அவன் இவ்வையகத்தை இன்ப மாளிகையாகப் பொருள்படுத்துகிறான். ஈண்டு இறைவனுடைய சந்நிதியிலே நான் உணவு உண்டு நீர்பருகி இன்புற்று இருக்கிறேன் என்னும் எண்ணம் அவனுக்கு வருகிறது."

"அச்சத்துக்கு ஈண்டு இடமேது? இறைவனை உறுதியாகப் பற்றிப் பிடித்துக்கொள். இந்த மண்ணுலக வாழ்வு முட்கள் நிறைந்துள்ள வனாந்தரமாக இருப்பினும் நாம் அதைப் பற்றிக் கவலைப்படுவானேன்? பக்தி என்னும் பாதரக்ஷையை அணிந்து கொண்டு முட்களின் மீது தங்குதடையின்றி நடக்கலாம். யாரைக் குறித்து நீ அஞ்சுகின்றாய்? இறைவன் என்னும் தோழனை நீ உறுதியாகப் பற்றிப் பிடித்துக்கொண்டால் பிறகு வனாந்தரத்தில் எந்தத் திருடனைக் குறித்தும் நீ அஞ்சவேண்டியது அவசியமில்லை.

"ஜனக மகாராஜனிடத்து இரண்டு வாள்கள் இருந்தன. ஞானமென்பது ஒரு வாள். பற்றற்ற பணிவிடை என்பது அடுத்த வாள். இரண்டு கரங்களில் அந்த இரண்டு வாள்களை உறுதியாகப் பிடித்துக்கொண்டு வையக வாழ்வு என்னும் விளையாட்டில் அவர் தீவிரமாக இறங்கினார். அவருக்கு அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. அத்தகைய திறமை நிறைந்த வையக விளையாட்டு வேந்தனாக அவர் இருந்

தார்."

(மகேந்திரரைப் பார்த்து) "இந்த மகிமசரண் பாடிய பாடலில் என் மனது இன்னும் ஊறிக் கிடக்கிறது." நாபாய்ச் சைதன்யனும் மற்றப் பக்தர்களும் ஒன்று சேர்ந்து இப்போது பாட லாயினர். பரமஹம்ச தேவரும் அவர்களோடு சேர்ந்துகொண்டார். அதுமட்டுமன்று.பிரேமை பக்தி என்னும் மதுபானம் பண்ணிய பாங் கில் அவர் ஆனந்தத்தாண்டவம் ஆடினர். அதன் பிறகு அவர் இயம்பியதாவது: "இக் காலத்துக்குத் தேவையாயிருப்பது இது ஒன்றே. இறைவனுடைய திருநாமத்தைப் பக்திபூர்வமாக ஓதுவது சாலச் சிறந்தது. ஏனைய யாவையும் ஒதுக்கித் தள்ளிவிடலாம். பக்தியும் அனுராகமும் ஆத்மசாதகனை மெய்ப் பொருளிடத்து எடுத்துச் செல்ல வல்லவை களாம். பக்தியில் ஊறியிருக்கின்றவனுக்கு வேறு ஏது இருக்கிறது, அல்லது இல்லை என் னும் கவலை கிடையாது." சிறிது நேரத்திற்குப் பிறகு பரமஹம்சதேவர் எழுந்திருந்து பஞ்ச வடிப்பக்கம் சென்றார். அவரோடு மகேந்திர ரும் பின் தொடர்ந்து போனர். வினோத் என் பவன் மகேந்திரருடைய பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த மாணக்கன் ஆவான். அவனுடைய நலனைக் குறித்துப் பரமஹம்ச தேவர் மகேந்திரரிடம் கேட்டார். அந்த மாணக்கன் இடையிடையே தக்ஷிணேசுவர ஆலயத்துக்குப் போவதுண்டு. கடவுளைப்பற்றி எண்ணும் பொழுதும், பாடும் பொழுதும் அச் சிறுவன் ஆனந்தப் பரவசம் அடைவான். அன்னவனைப் பரமஹம்சதேவர் உள்ளன் போடு பாராட்டி வந்தார்.

பஞ்சவடி பக்கம் சென்ற பரமஹம்சதேவர் தம் அறைக்குத் திரும்பி வந்து சிறிய கட்டிலின் மீது அமர்ந்துகொண்டார். அவரைப் பின் தொடர்ந்து சென்ற மகேந்திரரும் திரும்பி வந்து பரமஹம்சதேவருக்கு எதிரே தரையில் அமர்ந்துகொண்டார். ஆங்கு அமர்ந்திருந்த நரேந்திரன் மற்ற அன்பர்களோடு ஏதேதோ விஷயங்களைப்பற்றி உற்சாகத்தோடு வாதாடிக் கொண்டிருந்தான். அந்த விவாதத்தில் ராம் என்னும் பக்தனும் கலந்துகொண்டான். அவன் கொஞ்சநாள் நோய்வாய்ப்பட்டிருந்து அண் மையில் குணமடையப் பெற்றவனாக இருந் தான்.

பரமஹம்சதேவர்: (மகேந்திரரைப் பார்த்து) "இத்தகைய விவாதங்கள் ஒன்றுக்கும் பயன் படமாட்டா. (ராம் என்னும் பக்தனைப்பார்த்து) நீ இப்பேச்சை நிறுத்துவது நலன். நோய் வாய்ப்பட்டிருந்த நீ இப்பொழுதுதான் ஒரு வாறு குணமடைந்திருக்கின்றாய். இந்நிலையில் இருக்கும் நீ பதைபதைப்புடன் பேசுவது பொருந்தாது. மனக்கிளர்ச்சிக்கு இடந்தருத லும் பொருந்தாது. ஆத்மசாதகர்கள் எப் பொழுதும் அமைதியாகப் பேசவேண்டும். அத் தகைய பேச்சும் மிகைபட இருக்கலாகாது. அபிப்பிராய வித்தியாசத்துக்கு முடிவில்லை. சாதன தசையிலிருந்த அந்நாட்களில் நான் அம்பிகையிடம் இங்ஙனம் பிரார்த்தனை பண் ணினேன்: 'ஓ தாயே, மானுடன் ஒருவன் இதுதான் உண்மை என்கின்றான். மற்றொரு வன் இதுவன்று, அதுதான் உண்மை என்று இயம்புகின்றான். தாயே, உண்மையை உள்ள படி உள்ளத்தினுள் இருந்துகொண்டு எனக் குப் புகட்டியருள்வாயாக."

தத்துவ ஆராய்ச்சி வெறும் நூலறிவாக அமையுமிடத்து அது அகங்காரத்தையும் ஆணவத்தையும் வளர்க்கும்.தத்துவ ஆராய்ச்சி மனபரிபாகத்தை உண்டாக்குமானால் அத்த கைய தத்துவ ஆராய்ச்சியும் ஒருவகை ஆத்ம சாதனமாகும். அதன் அடிப்படை நோக்கம் உண்மையை அறிந்துகொள்ளுதல் பொருட்டே இருக்கவேண்டும். தன்னுடைய பேச்சுத் திற மையை விளம்பரப்படுத்துதற்கோ அல்லது தன் னிடத்திலுள்ள சாஸ்திர ஞானத்தை வெளிப் படுத்துதற்கோ ஆத்ம சாதகன் ஒருவன் எண் ணங்கொள்ளலாகாது. அத்தகைய எண்ணம் செருக்கையும் வீண் கர்வத்தையும் வளர்க் கிறது. உண்மையை அறிந்து கொள்ளத் தெய் வத்திடம் பிரார்த்தனை பண்ணுவது சாலச் சிறந்தது. உண்மையைத் தெளிவாக அறிந்து கொள்ளுதல் பொருட்டுப் பிறரோடு கூடி ஆராய்ச்சி பண்ணலாம். ஆணவம், அகங்காரம் சிறிதுமில்லாது பணிவுடன் கூடியதாக அந்த ஆராய்ச்சி இருத்தல்வேண்டும். அதன் விளை வாக மனத்தெளிவு உண்டாகிறது. தெளிந்த மனது உண்மையை உள்ளபடி அறிகிறது. இதுவே பரமஹம்சரின் கருத்தாம்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

6-6. வேட்டைப்புலப்புலையர் மேவாத வண்ணம் மனக்
காட்டைத் திருத்திக் கரை காண்பது எந்நாளோ?

புலப்புலையர் - ஐந்து இந்திரியங்களாகிய வேடர்கள்

அடவியொன்று அடர்ந்திருக்குமாகில் அதனுள் கொடிய காட்டு விலங்குகள் கவலையற்று இனிது வாழ்ந்திருக்கின்றன. ஆயினும் அவைகள் ஆங்கு இன்புற்று வாழ்ந்திருக்க வேட்டைக்காரர்கள் விடுவதில்லை. அந்த அடவியை அடைந்து அவர்கள் ஆங்கு மறைந்திருக்கும் விலங்குகளைக் கிளப்பி எழுப்பிக் கைப்பற்றுகின்றனர் அல்லது மாய்த்துத் தள்ளுகின்றனர். அந்த அடவிமட்டும் அடர்ந்ததாக இருக்குமாகில் புதிய விலங்குகள் அதனுட்புகுந்து வளர்ந்துகொண்டே வருகின்றன. ஆனல் அக் காட்டை வெட்டி மரமேதுமில்லாத வெறுநிலமாக்கிவிட்டால் விலங்குகள் அங்கு வந்து வாழமாட்டா. வெறுநிலத்தில் வேட்டையாட வேடர்களும் அங்குச் செல்வதில்லை. கொடிய விலங்குகளுக்கு இருப்பிடமாய் அடர்ந்த காடு இருப்பதற்கு நிகரானது பண்படாத மனது. பண்படாத மனத்தில் பொருந்தாத எண்ணங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. அந்த எண்ணங்களைப் பயன்படுத்துவது ஐம்பொறிகளின் தொழில். புலால் உடம்பில் பற்று வைத்திருப்பவன் புலையன் எனப் பகரப்படுகிருன். மனத்தில் உதிக்கும் எண்ணங்கள் புலால் உடம்பைப் பற்றியனவாகவிருக்குமானல் அந்த எண்ணங்கள் கொடிய விலங்குகளுக்கு நிகராகின்றன. கீழான எண்ணங்களில் உழன்றிருப்பது இந்திரியங்களின் பாங்காகும். கீழ்த்தரமான புலன்களில் ஈடுபடும் இந்திரியங்கள் வேடர்களுக்கு நிகரானவைகள். இந்த இந்திரியங்களைத் தூயவைகளாக்குவது வாழ்க்கையின் குறிக்கோள். மனது என்னும் காடுதிருந்தியமைவதற்கு ஏற்பக் கீழ்த்தரமான எண்ணங்கள் என்னும் விலங்குகள் எண்ணிக்கையில் குறைகின்றன. கொடிய விலங்குகள் குறையக் குறைய வேட்டைக்காரர்களுக்கு வேலையில்லை. அதே பாங்கில் கெட்ட எண்ணங்கள் எடுபடுதற்கேற்ப இந்திரியங்கள் வலிவற்றுப் போகின்றன. மனத்தில் மேலான எண்ணங்கள் உதிப்பதற்கேற்ப இந்திரியங்கள் பண்பாடடைகின்றன. அதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்ளுவோம். கண்கொண்டு பார்க்கும் பொருள்களைப் போகத்துக்குரியவைகள் என மனது எண்ணுமாகில் போக நுகர்ச்சிக்கான இந்திரியங்கள் கூத்தாடுகின்றன. அதற்கு நேர்மாருகக் காணப்படும் பொருள்களையெல்லாம் கடவுள் மயமாகக் கண்டு பழகுதல்வேண்டும். அதற்கேற்றவாறு மனது என்னும் காடும் திருந்தப்பெறுகிறது. போக நுகர்ச்சி என்னும் இந்திரியம் அடங்குகிறது. தெய்விகம் தானுகத் திகழ்கிறது. மனம் திருந்தி அமைவதற்கேற்ப இந்திரியங்களின் பொருந்தாத செயல்கள் தாமாகவே அடிபட்டுப் போகின்றன. பொறிவாயில் ஐந்தும் இங்ஙனம் அவிக்கப்பட்டவைகளுக்கு நிகராகின்றன. மனத் தெளிவிற்கேற்ப ஆத்ம சொருபத்தின் காட்சி வந்தமைகிறது. அக் காட்சியே ஈண்டு கரைகாணல் என இயம்பப்படுகிறது. கரை காண்பதும் கடவுளை அடையப் பெறுவதும் ஒன்றேயாம். ஆகவே மானுட ஜன்மத்தில் மனத்தைத் திருத்தி அமைப்பதற்கு நிகரான செயல் வேறு ஏதுமில்லை. இக்கோட்பாட்டை அடிப்படையாக வைத்துக்கொண்டே 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' என்னும் மறைமொழி வந்துள்ளது. மனது முற்றிலும் மாசற்றதாகுமாகில் சிவ சாயுஜ்ஜியமாவது மிக எளிது என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

6-7 உந்து பிறப்பு இறப்பை உற்றுவிடாது எந்தை [அருள்
வந்து உறக்க மனம் இறப்பது எந்நாளோ?

உந்துதல் - வெளிப் படுத்துதல். உற்றுவிடாது-பற்றிப் பிடித்துக்கொள்ளாதபடி

செயல் உற்ற மனத்தைச் செயல் அற்றதாக்குவது ஆத்ம சாதனத்தின் குறிக்கோள். சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். மோட்டார் வண்டியொன்று வலிவு உற்றதாக ஓடுகிறது. ஓடுதற்கு அதற்கு வலிவு தருவது பெட்ரோல்

எண்ணெய். எண்ணெய் முழுதும் முடிவுற்ற பிறகு அதற்கு ஓடுதற்கு வலிவு ஏதுமில்லை. அதேவிதத்தில் மானுடன் ஒருவனுக்குப் பிறப்பு இறப்பு என்னும் நீண்ட பயணம் போய்க் கொண்டிருப்பதற்கு உறுதுணையாவது மனத்தின்வேகம். 'வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க' என்பது ஆப்தவாக்கியம். மனதுக்கு வேகத்தைத் தருவது சங்கல்பம். பெட்ரோல் எண்ணெய் எங்ஙனம் மோட்டார் வண்டிக்கு வேகம் தருகிறதோ அங்ஙனம் சங்கல்பம் என்னும் விருத்திகள் மனத்துக்கு வேகம் தந்து கொண்டிருக்கின்றன. சங்கல்பத்துக்கேற்ற பிரகாரம் புதிய பிறவிகள் வந்து வாய்த்துக்கொண்டேவிருக்கின்றன. மனிதனை வாழ்க்கையில் கொண்டு செலுத்துகிற இயந்திரம் அல்லது கருவியாய் இருப்பது மனம். இந்த மனத்துக்கு வேகம்தருவது சங்கல்பம். சங்கல்பத்தைத் துடைத்துத் தள்ளிவிட்டால் மனத்தின் வேகம் தானாகத் தணிகிறது. வேகம் இல்லாத இடத்து மனத்தின் செயல் தானாக அற்றுப்போகிறது. அதாவது மனோநாசம் தானாக வந்தமைகிறது. இங்ஙனம் மனோநசம் அடைவதற்கு இறைவனுடைய திருவருளைச் சார்ந்திருத்தல் வேண்டும். இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்னும் பொய்யாமொழி வந்துள்ளது. தெய்வப் பற்று ஓங்க ஓங்க உலகப்பற்று என்னும் வேகம் தானாக மனதினின்று தணிந்துபட்டுப் போகிறது. அங்ஙனம் மனது ஒடுங்கிப்போன பின்பு பிறப்பு இறப்பு என்னும் பிணி ஆத்ம சாதகனுக்கு இல்லை. பரத்தில் அவன் ஒன்றுபடுகிறான் என்பது இக்கண்ணியில் அடங்கியிருக்கிற கருத்தாம்.

6-8. புத்தி எனும் துத்திப் பொறி அரவின்
[வாய்த்தேரை
ஒத்துவிடாது எந்தை அருள் ஓங்கு நாள்
[எந்நாளோ

துத்திப்பொறி அரவம் — புள்ளிகளோடு கூடிய படமெடுத்திருக்கும் பாம்பு தேரை— தவளை

பாம்பின் வாயில் அகப்பட்டுக்கொள்ளும் தவளைக்கு விமோசனம் இல்லை. அந்தப் பாம்புக்கு அது இரையாகும். அதே விதத்தில் விஷயங்களில் நாட்டம் வைத்துள்ள புத்தியானது பஞ்சேந்திரியங்கள் வாயிலாக மனிதனைப் பாழ்படுத்தி விடும். உணவைச் சுவைப்பதில் பெரும் பற்றுதல் வைத்துள்ள மீனானது நா என்னும் பொறிக்கு அடிமைப்பட்டுத் தூண்டிலில் அகப்பட்டுக்கொண்டு உயிர் துறக்கிறது. கண்கொண்டு தீ வெளிச்சத்தைப் பார்க்கும் விட்டில் பூச்சி அந்த வெளிச்சத்தில் மயக்குண்டு தீயில் விழுந்து மடிகிறது. ஊறு அல்லது ஸ்பர்ச உணர்ச்சியை நம்புகிற காட்டு யானை கொப்பத்தினுள் சங்கிலி போட்டுத் தன்னைக் கட்ட வருகிற வீட்டு யானைக்கு அடிமைப்படுகிறது. அங்ஙனம் அதன் சுதந்திரத்தை ஆயுளெல்லாம் அது இழக்கிறது. காட்டில் வாழும் மான்கள் ஆங்காங்கு வேடர்கள் கை தட்டி எழுப்பும் ஓசையில் கருத்தைச் செலுத்தி வயிறு உப்பிப் போகின்றன. அதன் பிறகு தடதடவென்று அவர்கள் கிளப்புகிற ஓசையைக் கேட்டு அவர்கள் கையில் போய் அகப்பட்டுக்கொள்கின்றன. மலரில் கிளம்பும் மணத்துக்கு வசப்பட்டு வண்டு ஒன்று அம்மலரினுள் சென்று ஆங்கு அகப்பட்டுக்கொள்கிறது. இங்ஙனம் ஒவ்வொரு இனமும் ஒவ்வோர் இந்திரியத்துக்கு அடிமையாகி அதன் வாயிலாகத் தங்கள் வாழ்வை இழக்கின்றன. இனி ஐந்து இந்திரியங்களுக்கும் அடிமையாக இருக்கிற மனிதனுடைய கதி என்னவது? அப்படி அவன் அடிமையாவதற்குக் காரணம் அவன் படைத்துள்ள விவேகமில்லாத புத்தியேயாம். அதை நம்புபவன் ஒருநாளும் மீள மாட்டான். பாம்பின் வாயில் தவளை அகப்பட்டுக்கொள்வதற்கு நிகராக விவேகமில்லாத சிற்றறிவை நம்பி அதன்பின் மனிதன் செல்லலாகாது. தவளை பாம்பின் வாயில் அகப்படாது தன்னைக் காப்பாற்றிக் கொள்வது போன்று பேரறிவு படைத்துள்ள ஆத்ம சாதகன் சிற்றறிவின்கண் அகப்பட்டுக்கொள்ளாது தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அதற்குமேல் விஷயங்களைச் சார்ந்திராமல் யாண்டும் தந்தையாயுள்ள இறைவனுடைய அருளையே சார்ந்திருந்து உய்வடைவது முறைமை என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

29. வீடு, வாசல், தனதான்யம், ஆடை, ஆபரணம் ஆகிய உலகப் பொக்கிஷங்களில் பற்றுதல் வைக்காதே. அவை யாவும் நிலையற்றவை. அவைகளுள் சிலவற்றைச் செல் அரிக்கும். இன்னும் சில துருப்பிடிக்கும். இன்னும் சில களவாடப்படும். ஏதோ ஒருவிதத்தில் அவையாவும் கைநழுவிப் போய்விடும்.

பக்தியும், கடவுளைச் சார்ந்திருத்தலும், கடவுளுக்கென்றே வாழ்ந்திருத்தலும், அவர் அருளுக்குப் பாத்திரமாவதும் பாரமார்த்திகப் பொக்கிஷங்களாகும். அவைகளில் பற்றுதல் வை. அவைகளைச் செல் அரிக்காது. அவைகள் துருப்பிடிக்கமாட்டா. யாரும் அவைகளைக் களவாடமாட்டார்கள். அவ்விரண்டினுள் உன் மனம் எதனிடத்துப் பற்றுதல் மிகக் கொள்கிறதோ அதனிடத்தே உன் எண்ணம் போய்க்கொண்டு இருக்கும்.

எல்லா உயிர்களுக்கும் அறிவு இருக்கிறது. ஆனால் விவேகம் மனிதனுக்கு மட்டும்தான் உண்டு. அழியாது சாசுவதமாக இருப்பது எது? கால தேச வர்த்தமானத்தில் கட்டுப்பட்டு அழிந்து போவது எது? என்று தீர்மானிப்பது விவேகம் ஆகும். விவேகத்தைக் கையாண்டு நித்தியப் பொருள் எது என்று அறிகின்ற அளவு அநித்தியப் பொருள்களின் மீதுள்ள பற்றுக் குறையும். விவேகத்தைச் சரியாகக் கையாளாதவர்கள் அநித்தியப் பொருள்கள் மீது பற்றுதலை வளர்த்து வருகிறார்கள். புலன் இன்பத்தை அளிக்கக்கூடியதும், புகழைத் தரக்கூடியதும், அந்தஸ்தைத் தருவதும் தங்களுக்குப் பெரும் நலம் தருபவைகளாகின்றன என்று மக்கள் எண்ணுகிறார்கள். புலன் இன்பங்கள் மனிதனுக்கு நிரந்தர சுகத்தைத் தருவதில்லை. அவைகள் சுகத்தைக் கொடுக்கின்ற அளவு துன்பத்தைத் தருபவைகளாகவும் இருக்கின்றன. அந்தஸ்துக்கும் புகழுக்கும் எல்லையே இல்லை. அந்தஸ்தும், புகழும் வரவர மனிதனுக்கு அதிருப்தி ஏற்பட்டுக்கொண்டிருக்கும். புகழும், அந்தஸ்தும் ஒருவனுக்கு ஒருநாளும் திருப்தியைத் தரா. உலகப் பொருள்களின் மீது வைக்கின்ற பற்று துன்பத்தைத் தரவல்லதாக இருக்கிறது. நாம் பற்று வைத்துள்ள பொருள் அழிந்துபோகும் இடத்து அதைக்குறித்து நாம் துயரத்துக்கு ஆளாகவேண்டும். நாம் நேசிக்கின்ற பொருளை மற்றொருவர் நேசிப்பாரானால் அவர் மீது வெறுப்புண்டாகும். உலகப் பொருளைப் பற்றிய சிந்தனை உள்ளத்துக்குக் கலக்கத்தையும், துயரத்தையும் உண்டுபண்ணிக் கொண்டே இருக்கும். ஆகையால் உலகப் பொருளின் மீது பற்றுதல் வைக்காது இருந்து பழகவேண்டும்.

நித்தியப் பொருளாகிய பரம்பொருளிடத்தில் வைக்கும் பற்று உள்ளத்தில் பேரானந்தத்தை உண்டுபண்ணுகிறது. பரம்பொருளின் மீது வைக்கின்ற பற்று ஒருநாளும் துயரத்தைத் தராது. ஆகையால் தெய்வப்பற்றை வளர்ப்பதற்கு மனிதன் சிரத்தையோடு பாடுபடவேண்டும். அநித்தியப் பொருள்களுக்கு இடையில் வாழ்ந்து அற்ப சுகத்தை அனுபவித்துவரும் மனிதன் நித்தியப் பேரின்பத்தைப் பெறுவதை லட்சியமாகக் கொள்ளவேண்டும். தெய்வப் பற்றை வளர்த்துவரும் மனிதன் சத்சங்கத்தை நாடிப்போகின்றான். தெய்வீக எண்ணம் அவனுடைய உள்ளத்தில் உதித்துக் கொண்டே இருக்கும்.

நம்மில் பலருக்குக் கடவுள் தரிசனம் பெறுவதுதான் வாழ்வின் லட்சியம் என்பது புத்திபூர்வமாகத் தெரிகிறது. உலகியல் சுகம் கணநேரத்தில் அழிந்து போகக்கூடியது என்பதும் நம் புத்திக்கு எட்டுகிறது. ஆனால் இந்தப்புத்திக்கு ஒப்ப நாம் வாழமுடிவதில்லை. பல ஜன்மங்களில் நாம் புலன் இன்பத்தை அனுபவித்து வந்திருக்கிறோம். எனவே உலகப் பொருள் இன்பம் தரக்கூடியது என்று எண்ணும் மயக்கம் நம் உள்ளத்தை விட்டு எளிதில் மறைவதில்லை. உலகப் பொருள்களில் உள்ள மயக்கம் நீங்கி உண்மைப் பொருளாகிய தெய்வத்தின்மீது மனம் செல்லும் பொழுதுதான் தெய்வீக இன்பம் என்ன என்பது நமக்குத் தெரியும். தெய்வச் சிந்தனையில் இன்பம் பெறும் பயிற்சியை நம் மனத்துக்கு நாம் தந்தாக வேண்டும். கடவுள் சிந்தனையை வளர்க்கின்ற அளவுதான் உள்ளத்தில் கடவுள் பற்று உண்டாகும். தெய்வ நம்பிக்கையும் தெய்வச் சிந்தனையும் தெய்வப்

பற்றை வளர்க்கின்றன. பக்தர் ஒருவர் "உன்னை மறந்தால் உயிர் வாழேன்" என்று பகர்ந்திருக்கிறார். அவருடைய உள்ளத்தில் தெய்வ நம்பிக்கையும், தெய்வச் சிந்தனையும் எவ்வளவு ஆழ்ந்து இடம் பெற்றிருக்கின்றன என்பதனை அவர் கூற்றில் இருந்து அறிகிறோம். ஈன்ற பசு ஒன்று கன்றுக் குட்டியை விட்டுப் பிரிவதற்கு மிகவும் சிரமப்படுகிறது. கன்றினிடம் இருந்து பிரித்து மற்றமாடுகளுடன் ஈன்ற பசுவை மேய்ச்சல் தரைக்கு ஓட்டிச் சென்றால் சிறிது நேரத்திற்குள்ளாக அது "அம்மா, அம்மா" என்று கதறிக் கொண்டு கன்றுக் குட்டி இருக்கும் இடத்திற்கு ஓடிவந்து விடும். இங்ஙனம், மனமானது தெய்வத்தை விட்டுப் பிரியாது தெய்வத்திடம் ஓடிக் கொண்டு இருக்க வேண்டும்.

"கன்றினுக்குச் சேதா கனிந்துஇரங்கல் போல [எனக்கு
என்றுஇரங்கு வாய்கருணை எந்தாய் பராபரமே"

என்று தாயுமானவர் இறைவனிடம் விண்ணப்பிக்கிறார். உள்ளமானது பரத்தினிடம் செல்வதற்கு அப்படித் தவித்துக் கொண்டிருக்க வேண்டும்.

உலகப் பொருள்களுக்காகத் தவிக்கும் மனதைப் பரத்துக்காகத் தவிக்கும்படி செய்வதுதான் நாம் செய்யவேண்டிய செயலாகும். இந்நிலையை அடைவதற்கு மனம் தளர்ச்சி அடையாது ஊக்கத்தோடு சாதனை புரியவேண்டும். ஊக்கத்தோடு மனம் தளராது முயல்கின்றவர்கள் முடிவில் லட்சியத்தை அடைந்தே தீருவார்கள். குழந்தையொன்று நடக்க முயல்கிறது. அது எத்தனை தடவைகள் கீழே விழுந்தாலும், நடக்கின்ற முயற்சியை விடாது செய்கிறது. கீழே விழுவதைக் குறித்துக் கவலைப்படாது, மீண்டும் மீண்டும் நடக்க எடுக்கும் முயற்சியானது முடிவில் வெற்றியைத் தருகிறது. ஆன்மீகத்துறையில் விடாது முயல்வோமானால் நாம் வெற்றி அடைந்தே தீருவோம். எந்தத் துறையிலும், முயற்சி உடையவன் ஒருநாளும் இகழ்ச்சி அடைவதில்லை. கடவுள்தாம் நிரந்தரமானவர் என்றும், அவர்தாம் நம்மைக் காப்பாற்றுகிறார் என்றும், நாம் உள்ளத்தில் கொள்கிற உறுதிக்கு ஏற்ப அவர் நமக்கு உரியவராகின்றார்.

உலகத்தின்மீதும், உலகப் பொருள்களின் மீதும் கொண்டிருக்கும் ஆசை பொருந்தாத ஆசையாகும். தெய்வத்தின்மீது கொள்கின்ற ஆசைதான் நம்மை உய்விக்கும் ஆசையாகும். தெய்வ ஆசை கொள்கின்ற அளவு நாம் தெய்வத்துக்கு உரியவர்களாகின்றோம். இக்கருத்துக்கள் யாவும் இவ்வுபதேசத்தில் விளக்கப்படுகின்றன.

30. உடலினுள்ளே இருக்கும் ஆன்ம ஜோதி கண் மூலமாக ஒளிர்ந்து கொண்டு இருக்கிறது. முழுதும் ஆன்ம நாட்டத்திலேயே மூழ்கி இருப்பவனுக்கு உடல் முழுவதும் ஆன்ம ஜோதி ஒளிர்ந்து கொண்டு இருக்கிறது.

பொறிகளும், மனதும் தீய வழியில் செல்லுமானால் உடல் முழுதும் இருள் சூழ்ந்து விடுகிறது. உன் வடிவம் ஆன்ம ஜோதியை விளக்குவதற்குப் பதிலாகக் காரிருளை விளக்கிக்கொண்டு இருக்குமானால் அதைவிடப் பேரிருள் என்ன இருக்க முடியும்?

நாம் லட்சிய புருஷர்களாக இருக்கவேண்டும். மனம் லட்சியத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு இருக்கவேண்டும். லட்சியம் உயர்ந்ததாக இருக்கவேண்டும். பரத்தை அடையவேண்டும் என்ற லட்சியந்தான் லட்சியங்களுள் மிக உயர்ந்த இலட்சியமாகும். ஆன்மீகத்தை இலட்சியமாக உடைய மனிதன் சதா ஆன்மீகச் சிந்தனையையே வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆன்மீகச் சிந்தனை ஆன்ம போதத்தை வளர்க்கிறது. ஆன்ம போதம் ஏற்படும்போது ஆன்மீக விழிப்பு உண்டாகிறது. ஆன்மீக விழிப்பைத்தான் "எழுமின்" என்று சுவாமி விவேகானந்தர் பகர்கிறார். மனதை ஆன்மாவிடத்து ஒருமுகப் படுத்துகின்ற அளவு ஆன்மீக விழிப்பு உடையவர்களாக இருக்கின்றோம். மனம் உலக விஷயத்தில் ஒருமுகப்படுகின்ற அளவு வாழ்வு இருள்மயமாகிறது. அப்பொழுது ஆன்மீக ஒளி மறைக்கப்படுகிறது. இஷ்ட தெய்வத்தின் நாமத்தை உச்சரிக்கும்பொழுதும், இஷ்ட தெய்வத்தை உபாசனை செய்கின்றபொழுதும், இஷ்ட தெய்வத்தைத் தியானம் செய்யும் பொழுதும் மனதிலுள்ள அஞ்ஞான இருள் அகல்கிறது. புலன்கள் வழியாகப் போக உணர்வோடு உள்ளத்தில் வாங்கிய சம்ஸ்காரங்களைத் தெய்வச் சிந்தனை தூயதாக்குகிறது.

ஓர் அறைக்கு ஜன்னல் அமைந்திருப்பது போன்று நம் உடலுக்கு ஐந்து இந்திரியங்கள் அமைந்திருக்கின்றன. ஜன்னல் வழியாகப் புற உலகம் அறைக்குள் புகுகிறது. அங்ஙனம் ஐம் பொறிகள் வழியாகப் புற உலக விஷயங்கள் மனதுக்குள் செல்கின்றன. அவ்விஷயங்களின் தொகுப்பே நம்முடைய பண்பாகிறது. நல்ல பதிவுகள் உள்ளே சென்றிருந்தால் நாம் நல்லதைப் பார்க்கின்றோம். கெட்ட பதிவுகள் உள்ளே சென்றிருந்தால் நாம் உலகில் கேட்டைப் பார்க்கின்றோம். ஆகையால் பொறிகளின் மூலம் நாம் ஏற்கின்ற விஷயங்கள் நல்ல பதிவுகளை உள்ளத்தில் உண்டாக்குவதாக இருக்கவேண்டும். வெளி உலகத்தில் பொருள்களினுடைய வடிவங்களைக் காண்பதற்குப் பதிலாக அவ்வடிவங்களுக்கு அடிப்படையாக இருக்கும் உண்மையைக் காணக் கற்றுக் கொள்ளவேண்டும். அப்பொழுது எல்லாப் பொருள்களும் எங்கும் நிறைந்துள்ள இறைவனை நமக்கு ஞாபகமூட்டுவதாக அமைகின்றன. நம் உள்ளத்தில் ஆன்மீக ஒளி உண்டாகும் போது புறத்திலுள்ள பொருள்களெல்லாம் ஆன்மீக ஒளியுடன் விளங்குவதைக் காணலாம்.

ஆன்மீக ஒளியை உள்ளத்தில் காண்பவர்களின் உடலெல்லாம் அவ்வான்மீக ஒளியை வெளிப்படுத்துவதைச் சில சமயம் காணலாம். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களுள் ஸ்ரீமத் பிரேமானந்த சுவாமிகள் ஒருவராவார். அவர் காசியில் 1914ஆம் ஆண்டில் சில நாட்கள் தங்கியிருந்தார். நாள்தோறும் கங்கையில் நீராடிக் காசியிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று தரிசனம் செய்து வருவார். ஒருநாள் மாதா அன்னபூரணியின் ஆலயத்தில் தரிசனம் செய்து முடித்தான பின்பு அர்ச்சகர் அவர் கழுத்தில் அம்பிகைக்குச் சாத்திய பூமாலையை அணிந்தார். அப்பொழுது சுவாமிகளினுடைய உள்ளத்தில் அருள் உணர்வு ஓங்கியது. அவருடைய உடம்பில் ஆன்மீக ஒளி வீச ஆரம்பித்தது. அவருடைய உள்ளம் பரவச நிலையை அடைந்தது. அப்பரவச உணர்வோடு அவர் ஆலயத்தைவிட்டு மெதுவாக வெளியேவந்தார். அருள்நிலையோடு வந்த சுவாமிகளைப் பார்த்த மக்கள் அடக்கத்தோடு விலகிச் சுவாமிகளுக்குச் செல்லவழி விட்டார்கள். அவரைப் பார்த்தவர்களெல்லாரும் ஒருவிதப் பரவசநிலைக்கு உட்பட்டார்கள். கோயிலில் உண்டான பரவச நிலையோடு காசிமாநகரத் தெருவிலும் சுவாமிகள் நடந்துசென்றார். அப்போது அவரைப் பார்த்த மக்கள் எல்லாரும் அசைவற்று மௌனத்தோடு இருந்து வணக்கம் செலுத்தினர்கள். சுவாமிகள் புற உலகை அடியோடு மறந்து கடவுள் சிந்தனையில் மூழ்கியவராகச் சென்று கொண்டிருந்தார். காசியிலுள்ள ராமகிருஷ்ண மடத்தின் வெளிப்புற வாயிலை அணுகியபோது மடத்தினுள்ளே திண்ணையில் நின்று கொண்டிருந்த நிர்பரானந்த சுவாமிகள் அவரைப் பார்த்தார். அப்பொழுது அவர் காசியிலுள்ள ராமகிருஷ்ண மடத்தின் கிளைக்குத் தலைவராக இருந்தார். அவர் சுவாமிகளைப் பார்த்தவுடன் இன்னிசை வாத்தியங்களோடு அவரை வரவேற்க ஏற்பாடு செய்தார். பரவச நிலையில் உள்ளே சென்ற சுவாமி பிரம்மானந்தர் தம் கழுத்திலிருந்த மாலையை எடுத்துச் சுவாமி நிர்பரானந்தர் கழுத்தில் அணிந்தார். சிறிது சிறிதாக அவரிடத்தில் பரவசநிலை மறைய ஆரம்பித்தது. அவர் உடலில் வெளிப்பட்ட தெய்வீக ஒளியும் மங்க ஆரம்பித்தது.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதற்கேற்பச் சுவாமி பிரேமானந்தருடைய அகத்தில் ஏற்பட்ட அருள் ஒளியை அவருடைய உடல் முழுவதும் வெளிப்படுத்தியது. உள்ளம் இருள் சூழ்ந்ததாக இருக்குமானல் உடல் மாமிசப் பிண்டமாகத்தான் இருக்கும். அப்போது உடல் அருவருப்புக்குரியதாகிறது. ஆபாசம் நிறைந்த உடலை அருள் உள்ளம் ஒளி பொருந்தியதாக்குகிறது. உடம்பினுள்ளே உத்தமனைக் காண்பவர்கள் பாக்கியவான்கள். அவர்களுடைய உடல் ஆலயம் ஆகிறது. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்று திருமூலரும் பகர்ந்திருக்கிறார். உள்ளத்தைக் கோயிலாகவும் ஊனுடம்பை ஆலயமாகவும் உருவாக்குவதற்கு உலக வாழ்வைப் பயன்படுத்துவோமாக! தெய்வப்பெற்றி மனிதனுடைய உள்ளத்தில் 'ஓஜஸ்' ஆகவும், உடலில் 'தேஜஸ்' ஆகவும் வெளிப்படுகிறது. தெய்வப்பெற்றியை வளர்த்து உள்ளொளியும் உடல் ஒளியும் உடையவர்களாக விளங்கவேண்டும் என்பது இவ்வுபதேசத்தின் கருத்தாகும்.

நற்பண்புகள்

அஹிம்சை, சத்தியம் ஆகிய இரண்டும் முக்கியமான பண்புகள் ஆகின்றன. காந்தியடிகள் தம் வாழ்க்கையில் இவ்விரண்டு பண்புகளையும் மேற்கொண்டார்.

" ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று "

என்று திருவள்ளுவரும் கொல்லாமையையும், பொய்யாமையையும் வலியுறுத்துகிருர். திருமூலரும் கொல்லான், பொய் கூருன் இயம நெறியில் நிற்பவன் ஆகின்ருன் என்று பகர்ந்திருக்கின்ருர். அஹிம்சை அல்லது கொல்லாமை நடைமுறையில் சாத்தியமா என்பது பலருக்கு எழுகின்ற ஐயமாகும். இயற்கையில் ஓயாது கொலை நிகழ்ந்துகொண்டு இருக்கிறது. இயற்கையே ஒரு கொலைக்களமாக இருக்கிறது. கொல்லாமல் எந்த உயிரும் வாழமுடியாது. ஓர் உயிர் வாழவேண்டும் என்ருல் மற்ருேர் உயிர் மடிந்தாக வேண்டும். இது இயற்கையில் நாம் காண்கின்ற காட்சியாகும். உயிர்கள் சுவாசிக்கின்ற காற்றில் கண்ணுக்குத் தெரியாத உயிர்கள் மடிந்து கொண்டு இருக்கின்றன. உயிர்கள் பருகுகின்ற நீரில் எத்தனையோ உயிர்கள் மடிகின்றன. உண்கின்ற உணவில் உயிர் அழிவு நிகழ்கின்றது. ஆகையால் ஓர் உயிர் வாழ்ந்திருக்க மற்ற உயிர்கள் அழிந்தாக வேண்டும். இது இயற்கையின் நடைமுறையாக இருக்கப் பெரியோர்கள் அஹிம்சையை வலியுறுத்திக் கூறியிருப்பானேன்?

யோகம் என்று சொல்லப்படுவது நடுநிலை எனப்படுகிறது. யோக முறைப்படி உடலுக்குத் தேவையான உணவை எடுத்துக்கொள்ளாவிட்டாலும் குற்றமாகும். உடலுக்குத் தேவையானதை அளவோடு உண்டால் உண்பதில் யோகத்தைக் கடைப்பிடிக்கின்ருேம். வேளாவேளைக்கு உண்ணுமல் இருந்தாலும், அளவுக்கு மேல் உண்டாலும் உண்ணுதலில் யோகத்திலிருந்து பிறழ்ந்தவர்கள் ஆகின்ருேம். அதே போன்று உடலுக்குத் தேவையான உறக்கம் கொடுப்பது யோகம் எனப்படுகிறது. உடலின் தேவைக்கு மேல் உறங்கினுலும், தேவைக்குக் குறைவாக உறங்கினுலும் உறக்கத்தில் யோக நெறியில் இருந்து பிறழ்ந்தவர்கள் ஆகின்ருேம். எனவே நமக்குத் தேவையானதை இயற்கையிலிருந்து எடுத்துக்கொள்வது தர்மமாகிறது. தேவைக்கு அதிகமானதை இயற்கையிலிருந்து எடுத்தால் அது முறை பிசகிய செயலாகிறது. வாழ்க்கைக்கு அவசியமானதை இயற்கையிலிருந்து நாம் பெறுவதற்கு இடையில், இயற்கைக்கு நாம் வழங்குவது நிகழ்ந்துகொண்டே இருக்க வேண்டும். இயற்கையிலிருந்து பெறுவதைக்காட்டிலும் இயற்கைக்கு வழங்குவது அதிகமாக இருக்கவேண்டும். இயற்கையிலிருந்து பெறுவதைக்காட்டிலும், வழங்குவது அதிகமாக இருக்கும்பொழுதுதான் நாம் கொல்லாமையில் நிலைபெற்றவர்கள் ஆகின்ருேம்.

நம் உள்ளத்தில் உயிர்களிடத்து அன்பு ஊற்றெடுத்து வரவேண்டும். உடல் மூலமாகவும், சொல் மூலமாகவும், எண்ணத்தின் மூலமாகவும் உயிர்களுக்குத் துன்பம் விளைவிப்பது சாத்தியமாகும். கீழான உயிர்களுக்கு உடல் மூலம் வருகிற துன்பம்தான் விளங்குகிறது. பண்பாட்டில் மேலே வந்துள்ள உயிர்களுக்குச் சொல் மூலமாக வருகிற துன்பம் தாக்குகிறது. பண்பாட்டில் மேலே வரவர எண்ணத்தின் மூலமாக வருகின்ற துன்பமும் தாக்கவல்லதாக இருக்கிறது. ஆகவே அஹிம்சை அல்லது கொல்லாமையைக் கடைப்பிடிப்பதற்கு உயிர்களிடத்து அன்பை வளர்ப்பது அவசியமாகிறது. நாம் வளர்ச்சி அடைவதில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கின்ருேமோ, அவ்வளவு கண்ணும் கருத்துமாக மன்னுயிர்கள் வளர்ச்சியடைவதிலும் இருக்க வேண்டும். மன்னுயிர்களின் நலன் கருதி உயிரையும் கொடுக்க நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். உயிர்களின் முன்னேற்றத்தில் மகிழ்ச்சி அடைகின்ற மனநிலைதான் அஹிம்சைக்கு அடிப்படையாகின்றது. உயிர்களுடைய முன்னேற்றத்திற்காக நாம் வாழ்கிருேம் என்று உணர்தல் வேண்டும். தான் வாழ்வது தனக்காக அன்று; தான் வாழ்வது மன்னுயிர்களின் வளர்ச்சிக்கு என்ற உணர்வு வந்துவிட்டால் ஒருவன் அஹிம்சா தர்மத்தில் நிலைபெற்றவன்

ஆகின்றான். பிற உயிர்கள் முன்னேறுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்ற ஒருவன் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்க வேண்டும் என்று நினைக்கமாட்டான்.

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி
இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

என்பது தாயுமானவர் வாக்கு. எல்லா உயிர்களையும் நம்முயிர் போல எண்ணுகின்ற மனநிலை வந்துவிட்டால், நம் சொற்கள் எல்லாம் அஹிம்சைக்கு விளக்கமாக அமையும்.

"உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்; தெய்வம் உண்மை என்று தானறிதல் வேண்டும்." இது பாரதியார் வாக்கு. உயிர்களிடத்து அன்பு வைப்பது அஹிம்சை என்ற பண்பை வளர்ப்பதாகிறது. தெய்வம் உண்மை என்று அறிவது சத்தியத்தைக் கடைப்பிடிப்பதாகிறது. உயிர்களுக்குத் தொண்டு புரிந்து உயிர்களிடத்து நாம் கொண்டுள்ள அன்பைப்பெருக்கிக்கொள்ள வேண்டும். அன்பு பெருகுகின்ற அளவு மனத்தில் உள்ள கீழ்மை அகல்கிறது.

மனத்தைக் கீழ்மைப் படுத்துவதில் அழுக்காறு அல்லது பொறாமை முதலிடம் பெறுகிறது. பொறாமை மனிதனை எத்தகைய கொடுஞ்செயலைச் செய்யத் தூண்டுகிறது என்பதற்குத் துரியோதனன் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கின்றான். பாண்டவர்கள் மீது துரியோதனனுக்குப் பொறாமை ஏற்பட்டது. பாண்டவர்கள் வளர்ச்சியில் அவன் சிறிதும் மனம் பொறாதவனாக இருந்தான். கௌரவர்களைவிடப் பாண்டவர்கள் பண்பாட்டில் உயர்நிலை அடைந்து வருவதைப் பார்த்து அவனுக்கு மனம் சகிக்கவில்லை. எனவே அவன் பாண்டவர்களுக்கு இழைத்த கொடுமைகள் அவன் உள்ளத்தில் எழுந்த பொறாமையின் விளைவு ஆகும். பாண்டவர்கள் கௌரவர்களைவிட மேலோங்கி வருவது துரியோதனனுக்கு வருத்தத்தை அளித்தது. அவர்களுடைய வளர்ச்சியைத் தடைப்படுத்தவும், அவர்களை ஒழித்துவிடவும் திட்டம் போட்டான். துரியோதனன் பாண்டவர்களை ஹிம்சைக்குள்ளாக்கியதற்கு அழுக்காறு அல்லது பொறாமையே காரணமாகும். உள்ளத்தில் அழுக்காறு ஏற்படாதிருப்பதற்கு நாம் உயிர்களிடத்தில் அன்பு செலுத்திப் பழகவேண்டும். உயிர்களுக்குப் பணிவிடை செய்வதன் மூலம் அவ்வன்பை முறையாக வளர்க்க வேண்டும். உயிர்களை நம் சொரூபமாக உணர்ந்து பழகும் அளவு உயிர்களுக்கு ஹிம்சை செய்வது நின்றுவிடும். இந்த முறையில்தான் நாம் அஹிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டும். எல்லா உயிர்களையும் நம் உயிர்போல் எண்ணுகின்ற எண்ணம் உயிர்களிடத்து அன்பை உண்டாக்குகிறது. அப்பொழுது உயிர்களுடைய நலத்தில் நாம் கருத்துடையவர்களாக மாறுகின்றோம். உயிர்களுடைய நலத்தில் கருத்துக் கொண்ட உள்ளத்தில் எழுகின்ற பிரார்த்தனை யாவது :

लोकाः समस्ताः सुखिनो भवन्तु ।

"லோகா: சமஸ்தா: சுகினோ பவந்து."

அண்டத்திலுள்ள உயிர்களனைத்தும் இன்புற்று வாழ வேண்டுமென்று நினைப்பதும், பிரார்த்திப்பதும் பண்பாடடைந்த உள்ளத்துக்குத்தான் சாத்தியமாகும். உயிர்களெல்லாம் உயர்நிலையை அடைந்து வரவேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் இடம் பெறுமானால், அது பிரார்த்தனையாக வடிவெடுத்து வருமானால் அவ்வுள்ளம் அஹிம்சை என்ற பண்பில் ஊறி வருவதாகிறது.

'நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்று ஆழ்வார் ஒருவர் பகர்கிறார். திருமூலர்

'சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே'

என்று பகர்கிறார். இறைவனுடைய நாம உச்சாரணை உள்ளத்திலுள்ள தீவினையை அகற்றுகிறது. தாம் செய்த தீவினை அனைத்தையும் போக்குவதற்கு வால்மீகி உச்சரித்த ராம நாமம் பயன்பட்டது. நாரதர் வால்மீகியினுடைய பாபத்தைப் போக்குவதற்கு ராமநாமத்தைத்தான் உபதேசம் செய்தார். ஆரம்பத்தில் 'ராம' என்று உச்சரிப்பதற்கு அப்பாமரனுக்கு முடியவில்லை. 'மரா' என்று உச்சரித்து அது நாளடைவில் 'ராம' என்ற உச்சரிப்பாக மாறிப் பாமரனாக இருந்தவன் ரிஷியாக மாறி அமைகின்றான். இறைவனுடைய நாம உச்சா

ரணை எவ்வளவு மகிமையுடையது என்பதை வால்மீகி வரலாறு விளக்குகிறது. ஆகையால் தான் ஆழ்வார் 'நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணு என்னும் நாமம்' என்று பகர்கிருர். வால்மீகிக்கு எந்தச் சொல் நலத்தைக் கொடுத்ததோ அதே சொல் நமக்கும் நலத்தைத் தரும். நமக்கு நலத்தைத் தரும் சொல்லுக்குத்தான் மந்திரம் என்று பெயர்.

உயிர்களுக்கு நாம் செய்கின்ற நலன்களுள் எல்லாம் மேலான நலன் உயிர்களிடத்துப் பக்தியை வளர்ப்பதாகும். உயிர்களிடத்துப் பக்தி வளர்கின்றவளவு அஹிம்சை கடைப் பிடிக்கப்படுகிறது. இன்றைய உலகுக்குப் பக்தி மிகமிக அவசியமாகிறது. அன்பும் அறிவும் ஒருங்கே வளரும் பொழுதுதான் மனிதனுடைய வாழ்வு பெருவாழ்வாக மாறுகிறது. "அன்பு, அறிவு ஆகிய இரண்டனுள் அன்புக்குத்தான் முதலிடம் தரவேண்டும்" என்று சுவாமி விவேகானந்தர் பகர்கின்ருர். அன்போடு அறிவும் சேர்கிறபொழுது வாழ்வு பூரண வாழ்வாக அமைகிறது. இன்றைக்கு வெறும் புலனறிவை வளர்ப்பதில் மட்டும் உலகெங்கும் கருத்துச் செலுத்தப்படுகிறது. ஹிருதயத்தை மலரச் செய்வதற்கு மக்கள் மறந்து விட்டார்கள். இதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் நமக்கு ஞாபகமூட்டு கின்ற பாங்கில் நடந்து காட்டினர். ''தற்காலக் கல்வி ஹிருதயத்தை மலரச் செய்வதில்லை. ஆகையால் இந்தக் கல்வியை நான் கற்க மாட்டேன். ஹிருதயத்தை மலரச் செய்கின்ற கல்வியை நான் கற்கப்போகின்றேன் '' என்று தற்காலக் கல்விமுறையை அடியோடு புறக் கணித்தார். இது நமக்குப் பெரிய பாடமாகும். புலனறிவு மட்டும் வளர்ந்து ஹிருதயம் சுருங்கிக்கொண்டு வருவதால் மக்களிடையே மண்டைக்கனம் ஏற்பட்டு அஹங்காரம் தடித்து வருகிறது. அன்பை உள்ளத்தில் வளர்க்கத் தெரியாத மக்கள் விலங்கு போன்று நடந்து கொள்கின்ருர்கள். அன்பை வளர்க்கும் பக்திமார்க்கத்தில் மக்கள் தீவிரமாகச் செல்லாவிட்டால் சமுதாயத்தை அழிவினின்று காப்பாற்ற முடியாது. பக்தியை வளர்க்கும் செயலைச் செய்யாது வேறு செயல்களில் இறங்குவோமானல் நாம் காலத்தை வீணுக்கு பவர்களாகின்ருேம். "ஹிருதயத்தை மலரச் செய்யாத கல்வி எனக்கு வேண்டாம். இக் கல்வியைக் கற்பதில் நான் ஈடுபட்டால் எனக்கு அமைந்த வாழ்நாள் வீண் விரயமாய்விடும்'' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை இப் போதனையில் நமக்குப் புகட்டியிருக்கிருர். புலனறிவை வளர்ப்பதோடு ஹிருதயத்தை மலரச் செய்கின்ற பக்தியையும் வளர்ப்பது நம் கடமை என்பதை உணர்வோமாக.

தாய் குழந்தையினிடத்துச் செலுத்தும் அன்பு உலக அன்பில் தலைத்தரமானது. தாயன்பு சுயநலமற்றது. வீதியில் விளையாடிக் கொண்டிருக்கின்ற குழந்தையொன்றை முரட்டுக் காளையொன்று தாக்க வருவதாக வைத்துக்கொள்வோம். அதைத் தாய் பார்த்து விட்டால் தன் உயிரைக் கொடுத்தாவது குழந்தையைக் காப்பாற்ற முயல்கின்ருள். இங்குத் தாயினிடத்துத் தூண்டுதல் தந்தது அன்பா, அறிவா என்ற கேள்வி எழுமிடத்து, அன்புதான் என்னும் விடை வருகிறது. காளையினுடைய பலத்துக்குமுன்பு தன்னுடைய கைவரிசை செல்லுமா என்று ஆராய்ச்சி செய்வதற்குத் தாயின் அன்பு இடம் தருவதில்லை. ஆங்கு அறிவு பின்னணிக்குச் சென்று அன்பு முன்னணியிலிருந்து வேலை செய்கிறது. பக்தன் ஒருவன் எப்பொருளிடத்து அன்பு செலுத்துகின்ருனே, அப்பொருளுக்கு ஏற்படும் துன்பத்தைத் துடைத்துத்தள்ள அவன் முயல்கின்ருன். காளத்தியப்பர் கண்ணப்பருடைய உள்ளத்தைக் கவர்ந்தார். காளத்தியப்பர் மீது அன்பு செலுத்திய கண்ணப்பர் காளத்தியப்பருக்கு நேர்ந்த துன்பத்தைத் துடைப்பதற்குத் தம் கண்ணையே கொடுக்க ஆயத்தமாயிருந்தார். அன்பை வளர்ப்பதற்குப் பணிவிடை செய்து பழகுதல் அவசியமாகிறது. பணிவும் பணிவிடையும் ஹிருதயத்தை மலரச் செய்கின்றன. தற்காலக் கல்வியில் பணிவிடைக்கும், பணிவுக்கும் இடமில்லை. கற்றவர்கள் உலகுக்குப் பயன்படவேண்டியிருக்க, உலகம் இன்றைக்குக் கற்றவர்கட்கு உதவிசெய்ய வேண்டியதாய் இருக்கிறது. கற்றவர்கள் இன்றைக்கு உலகுக்குப் பெரிய பாரமாக இருந்து வருகிருர்கள். தற்காலக் கல்விமுறை சுயநலத்தை வளர்க்கிறது. உயிர்களுக்கு உதவவேண்டும் என்ற

உணர்ச்சியைச் சிறிதும் தற்காலக் கல்வி ஊட்டுவதில்லை. இக்காலக் கல்வி ஹிருதயத்தை மலரச் செய்யாததனால் சமுதாயத்தில் கேடு கள் பல புகுந்திருக்கின்றன. கல்வியில் பணி வும், பணிவிடையும் இடம் பெறுதல் வேண்டும். மாத்ரு பக்தி, பித்ரு பக்தி, ஆச்சாரிய பக்தி, அதிதி பக்தி வேண்டுமென்று வற்புறுத்தப் படுகின்றது. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது சிறுவர்களுக்குப் புகட்டப் பட்டு வந்தது. தாயையும், தந்தையையும் தெய்வமாகப் பாவித்து அவர்களிடம் பணி வோடு நடந்துகொள்வதோடு அவர்களுக்குப் பணிவிடையும் செய்து பழகவேண்டும். அன்னை யும் பிதாவும் முன்னறிதெய்வம் என்ற கருத்து குழந்தைகளுக்கு வழங்கப்படக்கூடாதென்று பாடப் புத்தகத்திலிருந்து அப்பகுதியை நீக்கி விட முயன்றிருக்கிறார்கள். இது கல்விக்குச் செய்யும் பெரிய தொண்டு என்று அவர்கள் நினைக்கின்றார்கள். இதன்மூலம் சிறுவர்களு டைய ஹிருதயம் சுருங்கிப்போய்விடும் என் பதை அவர்கள் எண்ணிப் பார்க்கத் தவறிவிட் டார்கள். சுயநலத்தை வளர்ப்பதும், இந்திரிய போகத்தை வளர்ப்பதும், உடல் உணர்ச்சியை வளர்ப்பதும் ஆகிய கருத்துக்கள் பாடப்புத்த கத்திலிருந்து அகற்றப்படவேண்டும். அவற்றை அகற்றுவதில் கருத்தைச் செலுத்தாது நன்மை பயக்கக் கூடிய கருத்துக்களை நீக்கியிருப்பது சமுதாயத்திற்குச் செய்துள்ள துரோகச் செய லாகும். இத்தகைய செயலைத்தான் ஹிம்சை என்று சொல்லவேண்டும். வாழ்வை எது விரிவடையச் செய்கிறதோ அது உயர்வு ஆகிறது. வாழ்வை எது சுருங்கச் செய் கிறதோ அது தாழ்வு ஆகிறது. சமுதாயத்தை உயர்த்தும் செயல்களையெல்லாம் அஹிம்சை என்று பகரலாம். சமுதாயத்தைத் தாழ்த்தும் செயல்களையெல்லாம் ஹிம்சை என்று பகர லாம்.

உயிர்களிடத்தில் அன்பை வளர்ப்பதுதான் அஹிம்சை எனப்படும். சிலர் அஹிம்சை என்பதற்கு 'புலால் உண்ணுதிருத்தல்' என்று பொருள்படுத்துகின்றனர். புலால் உண்ணு திருப்பவன் உயிர்களுக்கு எவ்வளவோ துன் பங்கள் செய்கின்றுன். எனவே புலால் உண்ணுதிருப்பதுமட்டும் அஹிம்சை எனக் கொள்ளக்கூடாது. உயிர்களின் உள்ளத்தில் அன்பு ஊற்றெடுத்து வளரவேண்டும். உயிர் கள் யாவும் தெய்வசொரூபம் என்று கருதுகிற மனப்பான்மையை வளர்க்கவேண்டும். சிறு வர்களுடைய உள்ளத்தில் அத்தகைய மனப் பான்மையைச் சிறுகச்சிறுக வளர்க்க முயல் வோமானல் அவர்களுக்கு நாம் அஹிம்சா தத்துவத்தைப் புகட்டியவர்களாகின்றோம். இந்த முறையில் எல்லாருடைய உள்ளத்திலும் பக்தி ஊற்றெடுத்து வருவது அஹிம்சா தர் மம் நிலைபெறுவது ஆகிறது.

அஹிம்சைக்கு அடுத்தபடியாக சத்தியம் வருகிறது.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்

என்பது வள்ளுவர் வாக்கு. உள்ளத்தால் பொய்யாது ஒழுகுவோமானல் உலகத்தவர் உள்ளத்துளெல்லாம் இடம்பெறுகிறோம். உயிர் கள் அனைத்தும் ஈசன் மயமாக இருக்கின்றன. உலகைப் பொருள்படுத்துவதற்குப் பொறிக ளும், மனதும் பயன்படுகின்றன. மனத்திற் கேற்ற உலகைத்தான் நாம் காண்கின்றோம். மனம் கெட்டுப்போய்விட்டால் உலகத்திலும் நாம் கேட்டைக் காண்கின்றோம். மனம் நலன் நிறைந்ததாக இருக்குமானல் உலகத்திலும் நலனைக் காண்கிறோம். மனம் திருந்தி அமை யும்பொழுது உலகமும் திருந்தி அமைவதைக் காண்கின்றோம். உள்ளத்தில் இருக்கிற உண் மையை அறிவோமானல் உள்ளத்தால் பொய் யாதொழுகியவர்களாகின்றோம். உள்ளத்தில் தெய்வம் குடிகொண்டிருக்கிறது என்பதைத் தெய்வீக ஒளி பெற்றவர்கள் கூறுகின்றார்கள். உள்ளத்தில் தெய்விகம் குடிகொண்டிருப்பதை உணர்ந்து நடக்கின்றவர்கள் உள்ளத்தால் பொய்யாதொழுகுபவர்கள் ஆகின்றார்கள். உள் ளத்தில் தெய்வீக ஒளிக்குப் பதிலாகக் காமக் குரோதாதிகளுக்கு இடம்கொடுப்பவர்கள் உள் ளத்தால் பொய்யாதொழுகுபவர்களாகமாட் டார்கள். காமக்குரோதாதிகள்நம்உள்ளத்திற்கு உரியவைகளல்ல. அவைகளை வாழ்வின் மூலம் நாம் வரவழைத்துக்கொண்டோம். காமக்குரோ தாதிகளை உள்ளத்தில் வரவழைத்துக்கொண்ட வர் உள்ளத்தினுள்ளே தெய்வத்தைக் காண்ப வர் ஆகார். காமக்குரோதாதிகளை அகற்றி

விட்டுத் தெய்வத்தைக் காண்பவர்கள் உண்மையை உள்ளபடி காண்கிருர்கள். உள்ளொளியைப் பெருக்கி உள்ளத்தில் தெய்வத்தைக் காண்பவர்கள் உலகத்திலுள்ள உயிர்களிடத்திலும் தெய்வத்தைக் காண்கிருர்கள்.

புறப் பொருள்கள் நம் உள்ளத்திலுள்ள இயல்பைத் தூண்டிவிடுகின்றன. குடிகாரன் ஒருவனைப் பார்க்கும்பொழுது குடிக்கிற ஒருவனுக்குக் குடியைப் பற்றிய ஞாபகம் வந்துவிடுகிறது. சூதாடும் ஒருவனைப் பார்க்கும்பொழுது சூதாடும் இயல்புடைய ஒருவனுக்கு உடனே சூதாட்டத்தைப் பற்றிய ஞாபகம் வந்துவிடுகிறது. ஆத்ம சொரூபத்தை முற்றும் உணர்ந்த ஞானியைப் பார்க்கும்பொழுது ஆத்ம சாதகனுக்கு ஆத்மாவைப்பற்றிய ஞாபகம் வருகிறது. உலகத்தவர்களுடைய உள்ளத்தில் தெய்வீக உணர்வைத் தூண்டிவிடுகிற அளவுதான் நாம் அவர்கள் உள்ளத்தில் இடம் பெற்றவர்களாகின்ருேம். தெய்வ ஞாபகத்தை ஊட்டுகின்றபொழுது நாம் சத்தியத்தைக் கடைப் பிடிக்கின்ருேம். உள்ளத்தில் தெய்வத்தை உணர்ந்து அதைப் பிறருக்கும் எடுத்துப் புகட்டுகிறபொழுது நாம் சத்தியம் பேசுகின்ருேம். நாம் தெய்வ சொரூபமாக நம்மை மாற்றி யமைத்தால் உலகத்தவர்களுடைய உள்ளத்துளெல்லாம் இடம் பெற்றவர்களாகின்ருேம். உண்மையிலிருப்பது தெய்வம். பிரபஞ்சமாகக் காண்பது மயக்க நிலை. மயக்க நிலையை அழித்துவிட்டு உண்மையை உள்ளபடி காண்கின்ற பேற்றினை வழங்குகின்றவர்கள் சத்திய நெறி நிற்பவர்களாகின்ருர்கள். அவர்களே சத்தியம் பேசுபவர்களாகிருர்கள். சத்திய சொரூபமாவது வாழ்வின் லட்சியமாகும்.

பிறர் பொருளைத் திருடி வைத்திருப்பவன் திருடன் ஆகின்ருன். தனக்கு உரியது அல்லாததைத் தனக்குரியதாக்குபவன் திருடனுகின்ருன். பிறருக்குரியதைப் பிறருக்குத் தெரியாமல் எடுத்துத் தன்னிடம் வைத்துக்கொள்வது திருடனுடைய செயல். நாம் அனைவரும் திருடர்களாக வாழ்ந்து வருகிருேம். அக்ஞானம் நமக்குரியதன்று. நமக்குரியதல்லாத அக்ஞானத்தை நம்மிடத்தில் வைத்திருக்கின்ருேம். காமம், குரோதம், லோபம் மோஹம், மதம், மாத்சர்யம் என்ற இயல்புகள்நமக்குரியவைகள் அல்ல. அவைகளை நாம் வைத்திருக்கின்ருேம். பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் நமக்குரியவைகள் அல்ல. நமக்குரியனவல்லாத பிரபஞ்சப் பொருள்களை நமக்குரியனவென்று சொந்தம் பாராட்டுகின்ருேம். நம் உடல் பஞ்சபூதங்களின் சேர்க்கையாகும். பஞ்சபூதங்களுக்குரிய உடலை நம் மயமாகக் கருதுகின்ருேம். இங்ஙனம் நமக்குரியனவல்லாதவைகளையெல்லாம் நமக்குரியனவாக வைத்திருப்பதனுல் நாம் திருடர்கள் ஆகின்ருேம். அக்ஞானத்தை நமக்குரியதாக்கியது நம்மிடத்துள்ள தமோகுணம். பிரபஞ்சத்தையும், உடலையும், காமக் குரோதாதிகளையும் நமக்குரியவைகளாக்க நம்மைத் தூண்டி வருவது நம்மிடத்துள்ள ரஜோகுணமாகும். சொரூபத்துக்கு வழிகாட்டியபொழுதிலும் சொரூபத்தை மறைத்து வைத்திருக்கிறது எதுவோ அது சத்வகுணம். மூன்று குணங்களும் நம்மைத் திருடர்களாக ஆக்கி இருப்பது மட்டுமல்லாது நம்மிடமுள்ள ஞானத்தையும் அபகரித்துக்கொண்டு விட்டன. அம்மூன்று குணங்களையும் மூன்று திருடர்களாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு கதையில் அமைத்துக்காட்டுகிருர். வழிப்போக்கன் ஒருவன் வனத்தில் போய்க்கொண்டிருந்தான். அவனை மூன்று திருடர்கள் வழிமறித்து அவனிடமுள்ள பொருளைக் களவாடிக்கொண்டு அவனை ஒரு கயிற்ருல் கட்டிப் போட்டார்கள். கட்டிப்போட்டதோடு திருப்தியடையாது வழிப்போக்கனைக் கொன்றுவிடவும் வேண்டும் என்று ஒரு திருடன் யோசனை கூறினுன். அவனைக் கொல்லக்கூடாது, துன்புற்று அவன் இங்கேயே கிடக்கட்டும் என்று மற்ருெருவன் கூறினுன். அவ்விருவரும் அவ்விடத்தைவிட்டு நகரும்வரையில் அமைதியோடு இருந்து அவ்விருவரும்போனபிறகுமூன்ருமவன் வழிப்போக்கனைக் கட்டிலிருந்து விடுவித்தான். அவனுக்குத் துணையாக இருந்து காட்டைக் கடந்து அவன் செல்ல வேண்டிய ஊருக்கும் வழிகாட்டினுன். இம்மூன்று திருடர்களும் மூன்று குணங்களை விளக்குகிருர்கள். உயிரைப் போக்க விரும்பிய திருடன் போன்று தமோ குணம் நம்மைச் செத்ததற்கு நிகராக்கிவிடுகிறது. ஆத்மீக உணர்வில் நம்மைச் செத்த

தற்கு நிகராகச்செய்வது தமோகுணமாகும். ஆசாபாசங்களால் நம்மைத் தளைத்து நமக்குத் துன்பத்தைக்கொடுத்துக்கொண்டிருப்பது ரஜோகுணம். உலகபந்தத்திலிருந்து நம்மை விடுவித்து முக்திக்கு வழிகாட்டுவது சத்வ குணம். இம்மூன்று குணங்களும் நம்மிடத்திலுள்ளஆத்மஞானத்தை அபகரித்துக்கொண்டு விட்டன.

தமோகுணத்தை வளர்ப்பவன் அக்ஞானத்தைத் தனக்குரியதாக்க முயல்கின்றான். தனக்குரியதல்லாத அக்ஞானத்தைத் தனக்குரியதாகச் செய்துகொள்கின்ற தமோகுணத்தவன் களவு செய்பவனுகின்ருன். ரஜோ குணத்தை வளர்ப்பவன் ஆசையை வளர்க்கின்ருன். ஆசையானது நமக்குரியனவல்லாத பிரபஞ்சப் பொருள்களையெல்லாம் நமக்குரியனவாக்கும்படி நம்மைத் தூண்டுகிறது. எனவே ரஜோகுணத்தை வளர்ப்பவன் களவு செய்தவனுகின்ருன். சத்வகுணம் உடையவன் தன்னிடத்திலுள்ள ஞானத்தை மறைத்து வைத்துக் கொண்டிருப்பதால் அவனும் கள்வனுகின்ருன்.

தமோகுணத்தை வெல்லுவதற்கு ரஜோ குணத்தை வளர்க்க வேண்டும். ரஜோ குணத்தை அழிப்பதற்குச் சத்வகுணத்தை வளர்க்க வேண்டும். சத்வகுணத்தினின்றும் குணாதீதத்துக்குப் போக முயலவேண்டும். உலக வழக்கில் ஒருவருடைய பொருளை அவருக்குத் தெரியாமல் எடுத்துக்கொள்ளும் பொழுது அதைக் களவு என்று சொல்லுகிருேம். ஞானத்துறையில் பிறரிடத்தில் ஞான வளர்ச்சிக்கு நாம் தடையாக நடந்துகொண்டால் அது களவு ஆகிறது. நம்மிடத்தில் சத்வ குணத்தை வளர்த்துப் பிறரிடத்திலும் சத்வ குணத்தை வளர்க்க நாம் உதவுவோமானல் நம்மிடத்திலும் பிறரிடத்திலும் ஞான வளர்ச்சி உண்டாவதற்குத் துணை புரிந்தவர்களாகின்ருேம். அதிகாலையில் எழுந்திருப்பது சத்வ குண வளர்ச்சிக்குத் துணை புரிகிறது. சூரியோதயம் வரையில் தூங்கிக் கொண்டிருப்பது தமோகுணத்தை வளர்க்கிறது. தமோகுணம் அக்ஞானத்தை உண்டாக்குகிறது. சூரியோதயம் வரையில் தூங்குபவன் தன்னிடத்துத் தமோகுணத்தை வளர்க்கின்ருன். சூரியோதயம் வரையில் பிறரைத் தூங்க அனுமதிப்பவன் பிறரிடம் தமோகுணம் வளரத் துணை புரிந்தவனுகின்ருன். பாரமார்த்திகத்துறையில் சூரியோதயம் வரையில் தூங்குபவனும் பிறரைத் தூங்க அனுமதிப்பவனும் கள்வர்களாகிருர்கள். பையன் இரவு ஒரு மணிவரையிலும் சினிமாப் பார்த்துவிட்டுவந்து தூங்குகின்ருன் என்று அவனை ஏழுமணிவரையிலும் தூங்க அனுமதிப்பது அவனிடமுள்ள ஞானத்தைப் பறிப்பதாகிறது. இரவு ஒரு மணிவரையிலும் அவனைச் சினிமாப் பார்க்க அனுமதிப்பதும் தவறு; ஏழு மணிவரையிலும் தூங்க அனுமதிப்பதும் தவறு. அப்படிச் செய்வதானது ஞான வளர்ச்சிக்குத் தடை செய்வதாகிறது. பிறரிடமுள்ள பொருளை அபகரிப்பது மட்டும் களவன்று. பிறர் ஞான வளர்ச்சியடைவதைக் கெடுப்பதும் களவாகின்றது. தமோகுணத்தில் மூழ்கிக்கிடந்த ஒருவனைப் பார்த்துச் சுவாமி விவேகானந்தர் "நீ திருடவாவது கற்றுக்கொள்" என்று போதித்தார். ஏதாவது செயல் செய்து அவன் தன்னிடமுள்ள தமோ குணத்தை வெல்ல வேண்டுமென்று சுவாமி விவேகானந்தர் அவனுக்கு உபதேசித்தார். அந்த உபதேசம் எல்லார்க்கும் பொருந்தாது. தமோகுணத்தில் மூழ்கியிருப்பவன் முன்னேற்றம் அடைவதற்குச் செயல்புரிந்தாகவேண்டும். அவனைச் செயலில் உந்துவதற்கு ஒரு தூண்டுதல் வேண்டும். கீழான மனதைத் தூண்டுவதற்குக் கீழான ஆசை பயன்படுகிறது. கீழான ஆசைக்கு உட்பட்டுச் செய்கின்ற தவருன செயல்கள் துன்பத்தைத் தருகின்றன. துன்பம் அடையும்பொழுது அத்தகைய ஆசை கூடாது என்பதை ஒருவன் உணர்கின்ருன். அப்படி உணர்கின்றபொழுது கீழான ஆசையை மேலான ஆசையாக மாற்ற முயல்கின்ருன். மேலான ஆசைதான் நல்வாழ்வைத் தருகிறது. நல்வாழ்விலிருந்துதான் ஞான வளர்ச்சி ஏற்படுகிறது. நாம் நல்வாழ்வு வாழ்ந்து மனதை நடுநிலையில் வைத்திருப்பது ஞான வளர்ச்சிக்குத் துணைபுரியும். பிறரையும் அத்தகைய வாழ்வு வாழும்படி செய்வது அவர்களுடைய ஞான வளர்ச்சிக்குத் துணைபுரிவதாகிறது. இத்தகைய நல்வாழ்வு வாழ்பவர்கள் கள்ளாமை என்ற நற்குணத்தை வளர்ப்பவர்களாகிருர்கள்.

(தொடரும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-159

911. **ஸதாசிவ குடும்பினீ** சதாசிவ குடும்பினீ — சதா சிவனுருடன் கூடிக் குடும்ப வாழ்க்கை நடாத்துபவள் என்பது இந்த நாமத்தின் பொருள். அகிலாண்டங்களுக்கும் அன்னை பராசக்தி தாயாகவும், அப்பன் சிவனுர் தந்தையாகவும் இலங்கி வருகிறுர்கள். பிரபஞ்சத்தின் அமைப்பை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் இத்தத்துவம் உள்ளபடிவிளங்கும். மானுட குடும்பம் எப்படியோ அப்படியே அகிலாண்டநாயகியின் குடும்பமும் அமைந்திருக்கிறது. மானுட குடும்பத்தில் பெண்ணும் ஆணும் பரஸ்பரமாகத் துணை புரிந்து வாழ்க்கை நடாத்தி வருகிறுர்கள். வண்டிக்கு இரண்டு காளைகளைப் பூட்டி அதை நன்கு செலுத்துவதற்கு நிகர் குடும்பவாழ்க்கை. பூட்டிய காளைகளுள் ஒன்று வலிவுற்றதாகவும் மற்றது வலிவற்றதாகவும் அமையுமானுல் வண்டிப்பயணம் நன்கு நிகழமாட்டாது. அதே விதத்தில் குடும்பத்தை நடாத்தும் ஆடவரும் மகளிரும் ஆற்றலிலும், அறிவிலும், மனப்பாங்கிலும் ஒருவரையொருவர் ஒத்திருப்பது முற்றிலும் அவசியம். இருவருக்குமிடையில் கருத்து வேற்றுமையிருக்குமானுல் குடும்ப வாழ்வு நன்கு நிகழாது. குடும்பத்துக்குத் தேவையான பொருளைச் சேகரித்துத் தருவது கணவனுடைய கடமை. அதை முறையாகப் பயன்படுத்துவது மனைவியின் செயலாகும். மனைவியில்லாத ஆடவனுக்குக் குடும்ப வாழ்வு நடாத்துவது சாத்தியப்படாது. கணவன் இல்லாத கைம்பெண்ணின் நிலைமை பரிதாபத்துக்குரியதாகும். ஓடக்காரன் இல்லாத ஓடம் எப்படி நதியின் மீது நிலைகுலைந்து இருக்குமோ, அதே விதத்தில் கைம்பெண்ணின் வாழ்வு குறிக்கோள் அற்றதாகப் போம். உலக நடைமுறையில் இவ்வுண்மைகளைக் காண்கிறேம்.

சமுதாயத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்து நன்கு நடாத்தும் குடும்பத்துக்கு நிகராக அண்டங்கள் அனைத்துக்கும் தலைவன் தலைவியாக இருக்கும் சிவனும், சக்தியும் ஒன்றுபட்டிருந்து அவைகளை நன்கு நடாத்தி வருகிறுர்கள். வல்லமைகளை வகுத்து வைப்பது சிவன் செயல். அவைகளை நடைமுறையில்கொண்டு வருவது சக்தியின் செயல். உடலுக்கு நிகர் சக்தி. அவ்வுடலில் வீற்றிருக்கும் உயிருக்கு நிகர் ஈசன். உடலும் உயிரும் ஒன்று கூடி இயங்குவதால் உலகின்கண் ஒழுங்குப்பாட்டைக் காண்கின்றேம். பருவங்கள் முறையாக அமைவதும், உயிர்வகைகள் வளர்ந்து வருவதும் சிவசக்தியின் ஐக்கியத்தாலேயாம். அண்டத்தின் அமைப்பில் பஞ்சபூத மயமாயிருக்கும் பகுதி சக்தியின் சொரூபமாம். அதனுள் ஊடுருவி அறிவு மயமாகவும் ஆனந்தமயமாகவும் இலங்குவது சிவசொரூபமாம். சிவசொருபத்துக்கு அன்னியமாக அறிவையோ ஆனந்தத்தையோ காணமுடியாது. அடுத்தபடியாக இந்தஅறிவும்ஆனந்தமும் உடலைக் கருவியாகக் கொண்டே இலங்கி வருகின்றன. உடலின் உதவி இல்லாவிட்டால் உயிர்த்தத்துவம் அறிவு மயமாகவும் ஆனந்த மயமாகவும் தன்னை விளக்கிக்காட்ட இயலாது போம். அண்டங்களின் நடைமுறை முழுதும் இக்கோட்பாட்டுக்கு விளக்கமாக இலங்குகிறது. ஆத்ம சாதகன் ஒருவன் பிரபஞ்சமெங்கும் காண்கிற காட்சிகளை இணைபிரியாத சிவசக்தி மயமாகக் கண்டு பழகுவானுகில் அது நல்ல ஆத்ம சாதனமாகிறது. சாதனத்துக்குரிய இந்த அரிய கோட்பாட்டைச் சதாசிவ குடும்பினீ என்னும் நாமம் நன்கு விளக்கிக் காட்டுகிறது.

912. **ஸவ்யாபஸவ்ய மார்கஸ்தா** ஸவ்யாபஸவ்ய மார்கஸ்தா — இடப்பக்க மார்க்கம் வலப்பக்க மார்க்கம் ஆகிய இரண்டுவித மார்க்கங்களுக்கும் தலைவியாய் இருப்பவள் என்பது இந்நாமத்தின் பொருள். பிரபஞ்ச வாழ்க்கைக்கு இன்றியமையாத சௌபாக்கியங்களை அன்னை பராசக்தி தன் பக்தர்களுக்குத் தாராளமாக எடுத்து வழங்குகின்றுள். அப்படி வழங்குகின்றவள் அவைகள் அந்தப் பக்தனிடத்து நிலைத்திருக்கும்படி பாதுகாப்பையும் கொடுக்கின்றுள். அவற்றிற்கெல்லாம் மேலாகஅவையனைத்தையும்நன்குபயன்படுத்தி அந்தப் பக்தன் முன்னேற்றம் அடைவதற்கான வழிகளையும் வகுத்து வைக்கிறுள். இக்கோட்பாடுகள் யாவும் இந்த நாமத்தில் அடங்கி

இருக்கின்றன.

சூரியன் வடதிசையை நோக்கிப் போகும் காலம் உத்தராயணம் எனவும் தென்திசையை நோக்கிப்போகும் காலம் தக்ஷிணாயனம் எனவும் பகரப்படுகின்றன. இயற்கையில் இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கு ஒப்ப மக்கள் புரிகின்ற சாதனங்களுள் தேவயானம், பித்ருயானம் என இரண்டு பாகுபாடுகள் இருக்கின்றன. இவைகளை முறையே ஞானகாண்டம் எனவும், கர்ம காண்டம் எனவும் பகரலாம். ஞானகாண்டத்தை அனுஷ்டிக்கிறவர்கள் பிரபஞ்ச வாழ்க்கையினின்று தங்களை விடுவித்துக்கொள்ள முயலுகின்றனர். இவ்வையக வாழ்வு நிலையற்றது எனவும் தங்களுடைய வினைப்பயன்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மட்டும் இது பயன்படுகிறது எனவும் அவர்கள் கருதுகின்றனர். உலகப் பற்றை ஒதுக்கித் தள்ளுவது அவர்களின் குறிக்கோள். கடவுள் வழிபாட்டில் ஞானமும், பக்தியும் வேண்டுமென்றே அவர்கள் பிரார்த்திக்கின்றனர். ஆயுள், ஆரோக்கியம் போன்ற உடல் நலன்களை அவர்கள் நாடுவதில்லை. உற்றார் உறவினரிடம் வைக்கின்ற பந்தபாசங்களையும் அவர்கள் ஒதுக்கித் தள்ளுகின்றனர். இது ஸவ்ய மார்க்கம்.

மேலே இயம்பியதற்கு நேர் மாறாக இருப்பது அபஸவ்யமார்க்கம். இவ்வையக வாழ்வில் பற்றை மிக வளர்ப்பவர்கள் இந்த மார்க்கத்தில் போகிறார்கள். பிறவியைத் தொடர்ந்து வளர்ப்பது அவர்களுடைய போக்கு. உலக நலன்கள் அனைத்தையும் ஆர்வத்தோடு அன்னவர்கள் நாடுகின்றனர். ஸ்தல யாத்திரை சென்றால் கடவுள் வழிபாட்டுக்கு மிக்கதாகத் தங்கள் முன்னோர்களுக்குச் சிரார்த்தம் பண்ணுதலில் அவர்கள் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். பித்ருதேவதையைப் பிரீதி படுத்துவது அவர்களின் நோக்கமாகும்.

ஆகவே அவரவர் மனபரிபாகத்திற்கேற்ப மக்கள் வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். அந்தந்த நிலையில் இருப்பவர்களுக்கு அந்தந்த வழிபாட்டுமுறை முற்றிலும் அவசியமாகிறது. ஆதலால் அன்னை பராசக்தி ஒன்றோடொன்று ஒவ்வாத இந்த இரண்டு மார்க்கங்களுக்கும் கிருபை கூர்ந்து ஆதரவு அளித்து வருகிறாள்.

தொன்றுதொட்டு வாமாசாரம் என்னும் வழிபாடும், தக்ஷிணாசாரம் என்னும்வழிபாடும் வழக்கத்தில் இருந்து வருகின்றன. வாமாசாரம் இயற்கையின் உதவியைக்கொண்டு பராசக்தியின் வழிபாட்டில் ஈடுபடுதலாம். கௌணமார்க்கம் எனவும் இது கூறப்படுகிறது. கரணம் தப்பினால் மரணம் என்பது கோட்பாடு. அதற்கொப்ப வாமாசாரத்தில் வெற்றி அடைகிறவன் அக்கணமே அன்னையின் அருளுக்குப் பாத்திரமாகிறான். ஆனால் வழிபாட்டுமுறையில் பிழை ஏதேனும் வருமாகில் அவனுக்குப் பைத்தியம் பிடித்துப்போம் அல்லது அவன் மடிந்துபட்டுப் போவான். ஆபத்து நிறைந்த இந்த வாமாசாரத்தை அனுஷ்டிக்கும் வீரர்கள் மிகச் சிலரேயாம். இனி தக்ஷிணாசாரம் என்பது மிகச் சுலபமானது. அனுஷ்டிப்பதற்கு எல்லார்க்கும் மிக எளியது. சிரமம் ஏதுமின்றி மனிதனுக்கு உடல் வளர்ச்சி தானாக வந்தமைவதற்கு நிகராக வாழ்வாங்கு வாழ்பவனுக்கு ஆத்மீக வளர்ச்சியும் தானாக வந்தமைகிறது. இந்த இரண்டு மார்க்கங்களும் ஒன்றோடொன்று முரண்படுகின்றனவெனினும் அன்னை பராசக்தி இவை இரண்டுக்கும் ஆதரவு அளிக்கின்றாள். தீவிரமாக எந்த மார்க்கத்தில் சென்றாலும் மனிதன் மேன்மை யுறுகின்றான். மந்த அதிகாரியோ வாமாசாரத்தில் ஆபத்துக்கு உட்படுகின்றான். தக்ஷிணாசாரத்தில் அத்தகைய ஆபத்து ஏதுமில்லை.

913. सर्वापद्विनिवारिणी ஸர்வாபத்விநிவாரிணீ — எல்லா விதமான ஆபத்துக்களினின்றும் மக்களைக் காப்பற்றுபவள் என்பது இந்நாமத்தின் பொருள். பிரபஞ்ச வாழ்வு ஆபத்து நிறைந்தது. வாழ்வின் ஒவ்வொரு படித்தரத்திலும் தீங்கு நிறைந்திருக்கிறது. இவ்வையக வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்குகிறது. ஒவ்வொரு படித்தரத்திலும் ஒவ்வோர் உயிருக்கும் கேடுகள் பல முன்னணியில் வந்து நிற்கின்றன. பூமியில் போட்ட வித்து மிக ஆழமாகப் போனால் முளைத்து மேலே வராது. தரைக்கு மேல் இருந்தால் அது பாழ்பட்டுப்போம். தரையினுள் தக்க அளவு ஆழத்தில்தான் அது விதைக்கப்பட வேண்டும். தண்ணீர் பாய்ச்சுதல் மிகைபட்டுப் போனாலும், குறை

பட்டுப் போனலும் அது அழிந்துபோம். இத்தனை விதமான ஆபத்துக்களைச் சமாளித்து அது வளர்ந்து வருவது அன்னையின் அருளாலேயாம்.

இனி ஜங்கமமாகிய உயிர்வகைகளுள் பறவைகளுக்கேற்ற ஆபத்துக்களும், விலங்குகளுக்கேற்ற ஆபத்துக்களும் நில்வுலகில் ஏராளமாயிருக்கின்றன. அவையனைத்தையும் சமாளித்து அந்தந்த உயிர்வகைகள் விருத்தி அடைந்து வருவது பராசக்தியின் அருளாலேயாம்.

இவையாவுக்கும் மேலாக மனிதனுக்கு அமைந்திருக்கின்ற கேடுகளுக்கும், தடைகளுக்கும் அளவில்லை.

வேதனைகளுள் பிரசவவேதனை மிகக் கொடியது. பத்துமாதம் சிசுவைக் கர்ப்பத்தில் வைத்து உருவாக்கிய தாய் அதைப் பெற்றெடுக்கமாட்டாது, படாதபாடுபட்டு மாண்டுபோவதுண்டு; அல்லது பிறக்கும்பொழுதே சிசுவானது உயிரற்றுப் போவதும் உண்டு. தாயையும் சேயையும் பிறவி வேதனையினின்று அன்னை பராசக்தி பெரிதும் மீட்டுவித்து வருகின்ருள். பிறந்த குழந்தை எத்தனை எத்தனையோ அல்லல்களுக்கு உட்படுகிறது. மூச்சுவிடமாட்டாது அல்லல் படுதல், பாலருந்த மாட்டாது அல்லல் படுதல், உடலைச் சரியான பாங்கில் வைத்துக் கொள்ளமாட்டாது அல்லல் படுதல் இத்தனை விதமான விபத்துக்களினின்றும் பிறந்து வந்துள்ள சிசுவை அன்னை பராசக்தி விதவிதமான பாங்குகளில் காப்பாற்றி வருகிருள். உடலைப் பிடித்து வாட்டும் பிணிகள் பல. வறுமை நோய், குளிர்ப் பிரதேசங்களில் தாங்கவொணுத்தனுப்பு ஆகியவைகளினின்று அன்னை வளர்ந்துவரும் சிசுக்களைக் காப்பாற்றி வருகிருள். ஆதி தெய்வீக விபத்து, ஆதி பௌதீக விபத்து, அத்யாத்மிக விபத்து ஆகியவைகளினின்றும் அன்னை பராசக்தி தான் பெற்றெடுத்துள்ள மானுட வர்க்கத்தைக் காப்பாற்றி வருகிருள். வனந்தரங்களிலுள்ள வேங்கை, வரிப்புலி, கரடி, சிங்கம், கொடிய நச்சுப்பாம்புகள் ஆகியவைகளிடத்து வருகின்ற ஆபத்துக்களிடத்திருந்தும் மக்களை அன்னை பராசக்தி காப்பாற்றி வருகிருள். திருடர்கள், கொலைபாதகர்கள், பில்லி சூனியக்காரர்கள் ஆகியவர்களிடத்திருந்தும் அருள்கூர்ந்து அன்னை பராசக்தி மக்களைக் காப்பாற்றி வருகிருள். பஞ்சம், கொள்ளைநோய், பெருவாரியான போராட்டம் ஆகியவைகளினின்று தகுதி வாய்ந்த நல்லுயிர்களை அன்னை பராசக்தி பரிபாலித்து வருகிருள். அக்ஞானத்தை முன்னிட்டு மனிதன் எத்தனையெத்தனையோ விபத்துக்களுக்கும் நெருக்கடிகளுக்கும் ஆளாகிருன். அப்போதைக்கப்போது தேவையாய் இருக்கும் நன்னெறிகளை வழங்கி நல்லாரை அன்னை பராசக்தி காப்பாற்றி வருகிருள். இவையாவுக்கும் மேலாகப் பிறப்பு இறப்பு என்னும் நோயைக் களைந்து தன்மயமாக்கும் அரிய செயலிலும் அன்னை பராசக்தி ஈடுபடுகிருள். பிறவிப் பெருங்கடலோ துக்கம் மிக நிறைந்தது. பிறப்பெடுப்பது துக்கம். வாழ்ந்திருப்பது துக்கம். வாழ்வுக்கு இன்றியமையாத பொருள்களைத் தேடிக்கொள்ளுதலில் துக்கம். பொருத்தமான சூழ்நிலைகளை அமைத்துக் கொள்ளாததனுல் வருகிற துக்கம். வஞ்சிக்கப் படுவதால் வருகிற துக்கம். பொருள் நஷ்டத்தினுல் வருகிற துக்கம். கீர்த்தியை இழப்பதால் வருகிற துக்கம். சத்சங்கம் வாய்க்காததனுல் வருகிற துக்கம். இத்தனை விதமான துக்கங்கள் உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் காலமெல்லாம் மனிதனை வந்துவாட்டுகின்றன. அப்படித் துன்பப்படுகின்றபொழுது அன்னை பராசக்தியைச் சார்ந்திருந்து பழகுதல்வேண்டும். சேரிடம் அறிந்துசேர் என்பது கோட்பாடு. பொருத்தமானபுகலிடம் அன்னைபராசக்தியைச் சார்ந்திருத்தலாம். இப்பேருண்மையை அறிந்து கொள்ளாதவர்கள் பல பிறவிகளில் அக்ஞானத்தால் வருகிற பெருந்துன்பங்களுக்கு ஆளாகிருர்கள். அன்னையைச் சரண்புகுகின்றவர்களே இத்தனைவிதக் கேடுகளினின்று தங்களை விடுவித்துக்கொள்கிருர்கள். ஆக ஸர்வ துக்கநிவாரணியாய் இருப்பவள் அன்னை பராசக்தியே. அவளைச் சரண்புகும் பரியந்தம் மனிதனுக்குத் துக்க நிவாரணம் வாய்க்கமாட்டாது.

“தன்னை மறந்து சகல உலகினையும்
மன்ன நிதங் காக்கும் மகாசக்தி—அன்னை
அவளே துணையென் றனவரதம் நெஞ்சம்
துவளா திருத்தல் சுகம்.”

இங்ஙனம் துக்க நிவாரணத்துக்குரிய வழியைப் பாரதியாரும் பகர்ந்துள்ளார்.

பொதுமக்களுக்கு

ஆற்றவேண்டிய பணி

(1894 ஆம் ஆண்டில் சிகாகோவிலிருந்து மேன்மை தங்கிய மைசூர் மஹாராஜாவுக்குச் சுவாமி விவேகானந்தர் எழுதிய கடிதம்)

சர்வசக்திமானுகிய ஸ்ரீமந் நாராயணன் உங்கள் அனைவர்க்கும் அருள் புரிவாராக. மேன்மை தங்கிய உங்கள் அன்பு உதவியினல் நான் இந்நாட்டிற்கு வந்தது முதல் அனைவர்க்கும் நன்கு அறிமுகமாகி விட்டேன். தர்ம சிந்தனையுள்ள இந்நாட்டு மக்கள் என்னுடைய தேவைகளையெல்லாம் பூர்த்திசெய்து கொண்டிருக்கிறார்கள். இது ஓர் ஆச்சரியமான நாடு. இந்த ஆச்சரியமான நாட்டில் பல அற்புதங்கள் நிகழ்கின்றன. இந்நாட்டில் நாள்தோறும் நடக்கவேண்டிய செயல்களுக்கு வேண்டிய அளவு இயந்திரங்களைப்பயன்படுத்தி வருகிறார்கள். இந்த நாட்டில் இயந்திரங்களைப் பயன்படுத்துவது போன்று வேறு எந்த நாட்டிலும் பயன்படுத்துவதில்லை. எல்லாம் இயந்திர மயமாக இருக்கின்றன. உலகத்தில் உள்ள மக்கள் தொகையில் இருபதில் ஒரு பங்கு மக்கள் இந்நாட்டில் வாழ்கின்றார்கள். ஆனல் உலகத்தில் உள்ள செல்வத்தில் ஆறில் ஒரு பங்கு செல்வம் இங்கு இருக்கிறது. ஆகையால் இவர்களுக்குப் பொருள் பெருக்கத்துக்கும், போகப் பொருளுக்கும் வரையறையே இல்லை. பொருள்களின் விலைவாசி மிகவும் அதிகமாக இருக்கிறது. உலகத்திலேயே தொழிலாளர்களுக்குக் கூலி இங்குதான் அதிகம் எனினும் முதலாளிக்கும், தொழிலாளிக்கும் இடையே பூசல் இருந்துகொண்டே இருக்கிறது.

அமெரிக்க நாட்டு மகளிர்கள் ஏராளமான உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். உலகத்திலேயே இந்த நாட்டில் உள்ள பெண்கள் உரிமை வேறெங்கும் இல்லை. அவர்கள் மெதுவாக எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்று வருகிறார்கள். பண்பட்ட ஆடவர்களைக் காட்டிலும் பண்பட்ட மகளிர்கள் இங்கு அதிகம். ஆனல் பெரிய மேதாவிகளாக ஆண்பாலர்கள்தாம் இருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள ஜாதியைப்பற்றி மேனாட்டவர்கள் குறை கூறுகிறார்கள். ஆனல் இந்தியாவில் உள்ளதைவிடப் பெரிய அளவில் இவர்களிடமும் ஜாதி வேறுபாடு இருக்கிறது. அந்த ஜாதி வேறுபாடு பணத்தை அடிப்படையாகக்கொண்டு அமைந்து இருக்கிறது. பணம் பாதாளம் மட்டும் பாயும் என்ற பழமொழி இங்கு நிரூபிக்கப் பட்டு வருகிறது.

இங்குச் சட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன. இங்குள்ள சட்டங்கள் அளவு வேறெந்த நாட்டிலும் இல்லை. ஆனல் சட்டங்களைப் புறக்கணிப்பதில் இந்நாட்டவர்களைப்போல் வேறு யாருமில்லை. பொதுவாக எடுத்துக்கொண்டால் மேனாட்டவரைக் காட்டிலும் இந்துக்கள் நன்னெறியில் வாழ்கிறார்கள். சமயத்துறையிலும் இங்குப் போலியும் வஞ்சகமும் அதிகம். அமைதியை விரும்புகின்றவர்கள் இவர்களுடைய மூடநம்பிக்கையை வளர்க்கும் மதத்தை வெறுத்து அறிவு விளக்கம் காட்டும் மதத்தை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். வேதக் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில் இவர்கள் மிகுந்த ஆவலுடையவர்களாக இருக்கிறார்கள். நவீன விஞ்ஞானத்தால் நசுக்கப் படாத வேதக்கருத்துக்களை இவர்கள் வரவேற்கிறார்கள். சூன்யத்திலிருந்து இவ்வுலகம் வந்தது, இறைவன் ஒரு காலத்தில் தோன்றிச் சொர்க்கம் என்னும் இடத்தில் அரியாசனத்தில் அமர்ந்து கொடுங்கோல் ஆணை செலுத்துகிறார், முடிவில்லாத நரக வாசம் என்ற கோட்பாடுகளைக் கேட்டுக் கற்றவர்கள் வெறுப்படைந்து இருக்கின்றனர். இப்பிரபஞ்சம் அழிவில்லாதது, ஆன்மா அழிவில்லாதது, உயிர்களிடத்தில் தெய்வம் இருக்கின்றார் என்ற வேதக்கொள்கைகளை மேனாட்டவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குள் உலகத்திலுள்ள கற்றவர்கள் யாவரும் கடவுள் நித்தியப்பொருள் என்பதையும் இப்பிரபஞ்சத்துக்கு அழிவில்லை என்பதையும் ஏற்றுக்கொள்வார்கள். நம் வேதத்தில் சொல்லும் கடவுளுடைய பூரணத்தன்மையைக் கற்றவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். இன்றும் பைபிள் கருத்துக்களுக்கு வேதாந்தக் கருத்துக்

களைக்கொண்டு விளக்கம் தருவதற்கு ஞான வான்கள் முயல்கின்றார்கள். மேனாட்டவர் களுக்கு ஆன்மீகப் பயிற்சி தேவை. நம்மவர் களுக்கு உலகியல் ஞானம் தேவை. இதுதான் என்னுடைய முடிவு.

இந்தியாவில் உள்ள கொடுமைகளுக்கு எல்லாம் அடிப்படையாக இருப்பது ஏழை களின் வறுமை நிலையே ஆகும். மேனாட்டி லுள்ள ஏழைகள் பேய்களாக இருக்கிறார்கள். அவர்களோடு ஒப்பிடும்போது நம் நாட்டு ஏழைகளைத் தேவதூதர்கள் என்று சொல்ல லாம். ஆகையால் நம்நாட்டு ஏழைகளுடைய நிலையை உயர்த்துவது மிக எளிய செயலாகும். நம் நாட்டு ஏழைகளுக்கு நாம் ஆற்றவேண்டிய பணி கல்விப் பணியாகும். அவர்களுக்கு வளமான கல்வியும், அவர்களிடத்தில் தன்னம் பிக்கையை வளர்ப்பதும் முறையாகத் தரப்பட வேண்டும். இப்பெரும் பணியை நம்மக்களும், மஹாராஜாக்களும் செய்து வரவேண்டும். இது வரையிலும் இப்பெரும் பணி பொதுமக் களுக்கு ஆற்றப்படவில்லை. பல நூற்றாண்டுக ளாகப் பொதுமக்கள் தலையெடுக்கா வண்ணம் பிராமணர்களுடைய ஆதிக்சமும், அந்நியரு டைய ஆட்சியும் அவர்களை நசுக்கிவிட்டன. அதன் விளைவாக ஏழை இந்துக்கள் தாங் களும் மனிதர்கள் என்று கருதும் உணர்ச் சியை இழந்துவிடக்கூடிய பயங்கரநிலை உண் டாகி இருக்கிறது. அவர்களைத் தன்மானம் உடையவர்களாக்கும் கருத்துக்களை அவர் களுக்கு வழங்கவேண்டும். அவர்களைச் சுற்றி என்ன நிகழ்கிறது என்பதை அறிய அவர் களுடைய அறிவுக்கண்ணைத் திறக்கவேண்டும். அப்பொழுது அவர்கள் தங்களைத்தாங்களே உயர்த்திக்கொள்வதற்கு வேலை செய்வார்கள். ஒவ்வொருவரும் தம்மைத்தாமே உயர்த்திக் கொள்ளவேண்டும். நாட்டிலுள்ள ஆடவர்கள், பெண்டிர்கள் தங்களைத்தாங்களே உயர்த்திக் கொள்ளப் பாடுபடவேண்டும். தங்களைத்தாங் களே உயர்த்திக்கொள்ளக் கருத்துக்களைத் தரு வதுதான் அவர்களுக்கு நாம் செய்கின்ற உதவி ஆகும். அந்த உதவியை முறையாகச் செய்தால் அதனைப் பின்தொடர்ந்து நல்ல விளைவு தானாகவே உண்டாகும். இரசாயனப் பொருள்களைச் சேர்ப்பது நம்முடைய செயல். அவைகளைச் சேர்த்து விட்டால் அவைகளில் இருந்து பளிங்குபோன்ற பொருள் தானாகவே உண்டாகும். அங்ஙனம் நற்கருத்துக்களைப் பாமரர்களுடைய உள்ளத்தில் புகுத்துவது நம்முடைய பணியாகும். பின் அவை செயல் படுவது தாமாகவே நிகழும். இப்பணியைத் தான் இன்றைக்கு இந்தியாவில் செய்தாக வேண்டும். இந்தக் கருத்து என் மனதில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்துள்ளது. இதை இந்தியாவில் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. நான் மேல் நாட்டிற்கு வந்த தற்கு அதுவே முக்கிய காரணமாகும். பாமரர் களுக்குக் கல்வி தருவதில் ஒரு பெரிய சங்கடம் இருக்கிறது. மாட்சிமை தங்கிய தாங்கள் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் இலவசக் கல்வி பெறுவதற்கு வழிசெய்கிறீர் கள் என்று வைத்துக்கொள்வோம். அப்படிச் செய்தாலும் அது சிறந்த பலனை அளிக்கும் என்று சொல்ல முடியாது. இந்தியாவில் உள்ள ஏழைக் குழந்தைகள் இலவசப் பள் ளிக்கு வருவதைவிட வயலுக்குச் சென்று பெற்றோர்களுக்கு உதவியாக இருப்பதையோ, தாங்கள் வேலை செய்து பொருள் சம்பாதிப் பதையோ பெரிதாகக் கருதுமளவுக்கு அவர் களிடம் வறுமை குடிகொண்டிருக்கிறது.

மலை முகமதுவிடம் வராவிட்டால் முகமது மலையிடம் போவதுதானே முறை. அது போன்று ஏழைச் சிறுவர்கள் கல்விக்கு வரா விட்டால் கல்வி அவர்களை நோக்கிச் செல்ல வேண்டியதுதானே முறை. இந்தியாவில் ஆயி ரக்கணக்கான துறவிகள் மன ஒருமைப்பாட்டு டனும், தியாக மனப்பான்மையுடனும் கிராமம் கிராமமாகச் சென்று மதபோதனை செய்து வருகிறார்கள். அவர்களை ஒன்று கூட்டி மத போதனையோடு லௌகீகக் கல்வியையும் வீடு வீடாகச் சென்று போதிக்கும்படி செய்ய லாம். இருவர் சிற்றூர் ஒன்றுக்குப் புகைப்படக் கருவியுடனும், தேசப்படத்துடனும் சென்றால் அவர்கள் வான சாஸ்திரத்தையும், பூகோளத் தையும் பாமர மக்களுக்குப் புகட்டலாம். பல நாட்டு மக்களின் வரலாறுகளைப்பற்றிப் பாமர மக்களுக்குக் கதையாகக் கூறலாம். நூல்கள் வாயிலாகப் போதிப்பதைவிடச் செவிப்புலன் மூலமாக எளிதில் போதிக்கலாம். இவற்றை

யெல்லாம் செய்வதற்குச் சங்கம் ஒன்று தேவைப்படுகிறது. இந்தச் சங்கத்தைப் பரிபாலிக்கப் பணம் தேவைப்படுகிறது. இந்தத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவர இந்தியாவில் போதுமான மக்கள் இருக்கிறார்கள். ஆனால் அதற்குப் போதுமான நிதி கிடைப்பதில்லை. ஒரு சக்கரத்தைச் சுழல வைப்பது கஷ்டம். சுழல ஆரம்பித்துவிட்டால் வேகம் அதிகரித்து விடும். இந்தியாவில் இப்பணி செய்வதற்குப் போதிய பணம் சேராமையால் உங்களுடைய பேருதவியால் மேனாட்டிற்கு நான் வரவேண்டியதாயிற்று. அமெரிக்கர்கள், இந்திய மக்கள் இருப்பதைப்பற்றியும் இறப்பதைப்பற்றியும் கவலை கொள்ளமாட்டார்கள். அவர்களைப்பற்றி ஏன் சொல்லவேண்டும்? இந்திய நாட்டுச் செல்வந்தர்களே ஏழை இந்தியர்களைப்பற்றிக்கவலைகொள்ளாதுசுயநலத்தையே குறிக்கோளாகக் கொண்டு இருக்கிறார்கள்.

பெருந்தன்மை வாய்ந்த அரசே! இந்த வாழ்வு மிகவும் குறுகியது. உலகக் கீர்த்திகள் எல்லாம் கணப்பொழுதில் மறையக்கூடியவைகள். தமக்கென வாழாது பிறர்நலத்துக்கென வாழ்பவர்களே உண்மையில் வாழ்பவர்கள் ஆகிறார்கள். மற்றவர்களை வாழ்கிறார்கள் என்று கொள்ளாது இறந்தவர்களாகத்தான் கொள்ளவேண்டும். உங்களைப் போன்ற பேருள்ளம் படைத்த அரசிளங்குமாரர்கள், இந்தியாவை உயர்த்தப்பாடுபடுவீர்களானால், பிற்கால மக்கள் உங்களைப் போற்றுகின்ற புகழ்மாலையைப் பெறலாம். துயருறும் கோடிக்கணக்கான இந்திய மக்களுக்கு உங்களுடைய பேருள்ளம் நைந்து உருகவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு இக்கடிதத்தை முடிக்கிறேன்.

இங்ஙனம்,

விவேகானந்த

திருவண்ணுமலையில் தீபதரிசனம்

இவ்வாண்டுக் கார்த்திகை மாதம் 24ம் தேதி திருவண்ணுமலை தீபதரிசனம் நிகழ்கிறது. அன்று பௌர்ணமி ஆகும். சூரியன் அஸ்தமனமானதும் திருவண்ணுமலையின் உச்சியில் அன்று தீபம் ஏற்றிவைப்பார்கள். அன்று ஏராளமான மக்கள் தீபதரிசனம் செய்து உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்வார்கள்.

உள்ளத்தில் ஆத்மஜோதி யாண்டும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. ஆத்மா சுயம் ஜோதியாக இருக்கிறது. அதன் புறச்சின்னமாகத் திருவண்ணுமலையில் கார்த்திகைத் தீபத்தன்று ஏற்றிவைக்கும் விளக்கு அமைகிறது. திருவண்ணுமலை தீபதரிசனம் செய்வது போன்று உள்ளத்தில் உள்ள ஆத்மஜோதியைத் தியானத்தின் மூலம் தரிசனம் செய்யவேண்டும். திருவண்ணுமலையில் ஏற்றிவைக்கும் தீபம் பரமாத்மாவுக்குச் சின்னமாகிறது. கார்த்திகை தீபத்தன்று திருவண்ணுமலை தீபத்தை நோக்கிச் செலுத்தப்படும் சரம் அல்லது அம்பு ஜீவாத்மாவுக்குச் சின்னமாகிறது. திருவண்ணுமலைத் தீபத்தைச் சுற்றி மறைத்துக் கட்டியிருக்கும் திரை அவித்தைக்குச் சின்னமாகிறது திருவண்ணுமலையில் செலுத்தப்படும் அம்பு திரையை எரித்துவிட்டு தீபஜோதியில் ஒன்றுபட்டு விடுவதுபோன்று ஜீவாத்மன் தியானத்தின் மூலமாகவும், ஆத்ம விசாரத்தின் மூலமாகவும் அவித்தை என்னும் திரையை அழித்துவிட்டுப் பரமாத்மனிடம் ஒன்றுபட்டுவிடவேண்டும். கார்த்திகை தீபத்தன்று திருவண்ணுமலை ஜோதி தரிசனம் செய்கின்றவர்கள் இந்தத் தத்துவத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு ஜோதி தரிசனம் செய்து அத்யாத்மலாபம் அடைவார்களாக.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி : (294) தேவர்களும், அசுரர்களும் பால் கடலைக் கடைந்தபொழுது அமிர்தம் கிடைத்த பின்னர் நஞ்சு எவ்வாறு வரக் கூடும் ?

மக்களாகிய நம்முடைய தினசரி வாழ்க்கைக்கு விளக்கமாகத் தேவர்களும் அசுரர்களும் பால் கடல் கடைந்த புராண வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது. புராணத்தில் பகர்ந்துள்ள கதைகளெல்லாம் பெரும்பாலும் கட்டுக் கதைகளேயாம். ஆயினும் அந்தக் கட்டுக்கதைகளுக்கு அடிப்படையாக இருக்கும் தத்துவங்கள் மறுக்கப்படவோ, மாற்றப்படவோ முடியாதவைகளாய் இருக்கும். அத்தகைய புராணக் கதைகளில் ஒன்று பால் கடலைக் கடையும் கதையாகும். உலகில் உள்ள நல்லவர்கள் தேவர்கள் என்றும், கெட்டவர்கள் அசுரர்கள் என்றும் புராணக் கோட்பாட்டில் பாகுபடுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். பால் கடல் என்பதொன்று இல்லை. ஆனால் உலகில் உள்ள நிலம், நீர், காற்று ஆகிய யாவும் உணவு மயமாய் இருப்பதால் அவையாவும் ஒன்று சேர்ந்து பால் கடல் எனத் தொகுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

மனிதன் உண்ணும் உணவு அமிர்தம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. மிருத்யு என்றால் மரணம். அமிர்தம் என்றால் மரணமிலா நிலை. நாள்தோறும் உணவு உண்பதன் வாயிலாக மரணம் ஒத்தி வைக்கப்படுகிறது. அப்போதைக்கப்போது மரணத்தைத் தடுக்கவும், ஒத்திவைக்கவும் உணவு உதவுகிறது. இக்காரணத்தை முன்னிட்டே உணவுக்கு அமிர்தம் என்னும் பெயர் வந்துள்ளது. உலகில் வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் மக்களாகிய நாம் அனைவரும் அமிர்தத்தைப் புசித்து வருகிறோம். அப்படியிருந்தும் நம் எல்லாருக்கும் ஒரு காலத்தில் மரணம் வருகிறது. இந்த மரணமே நஞ்சு என இயம்பப்பட்டிருக்கிறது. வாழ்ந்திருந்த பிறகு மரணம் வருவதால் அமிர்தத்தைப் புசித்த பிறகு நஞ்சு வந்தது என்னும் கதை தத்துவத்துக்கு ஒத்திருக்கிறது.

இனி, அமிர்தம் என்னும் சொல் ஆத்மசொரூபத்திற்கும் பொருந்தியதாகிறது. ஆத்மானுபூதி அடையப்பெற்றவர்கள் மரணமிலாப் பெருநிலையை அடைகின்றனர். அன்னவர்களுக்கு மறுபிறப்பும் இல்லை. அக்கோட்பாட்டை விளக்குதற்கு இக் கதையில் மற்றொரு பகுதி அமைந்திருக்கிறது. பால் கடலைக் கடைந்துகொண்டிருந்த பொழுது விஷம் வந்தது. அதினின்று தங்களை விடுவித்துக் கொள்ளுதல் பொருட்டுத் தேவர்களும், அசுரர்களும் விண்ணுலகம், மண்ணுலகம், பாதாளம் ஆகிய மூவுலகில் எங்கு ஓடியும் தப்பித்துக் கொள்ள அவர்களுக்கு இயலவில்லை. உலகத்தவர்கள் எல்லாருக்கும் விரைவில் அல்லது நாளடைவில் மரணம் உண்டு என்னும் கருத்தை இச்செயல் விளக்குகிறது. எங்கு ஓடியும் தப்பிக்கமுடியாதவர்கள் கடைசியாகச் சிவனார் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர். அந்த விஷத்தை அவர் ஏற்றுக்கொண்டு தஞ்சமடைந்தவர்களைப் பாதுகாத்தார். சிவனை அடைந்தவர்களுக்குப் பிறகு மரணமில்லை. அது நிரந்தரமான அமிர்த சொரூபம். கடவுளைச் சென்றடையும் வரையில் உலக வாழ்வு என்னும் அமிர்தம் முதலில் வந்து, பிறகு நஞ்சு என்னும் மரணம் வருகிறது. ஆனால் பரமனை அடைந்தவர்களுக்கு மேற்கொண்டு பிறப்பும் இறப்பும் அற்றநிலையாகிய அமிர்த சொரூபம் வாய்க்கிறது. இந்த இரண்டு தத்துவங்களும் பாற்கடலைக் கடைதல் என்னும் கதையில் அடங்கியிருக்கின்றன. உலக வாழ்க்கையில்மட்டும் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு முதலில் அமிர்தம் வந்து பிறகு நஞ்சு வருகிறது. பரமனை அடையப்பெற்றவர்களுக்குப் பிரபஞ்ச வாழ்வு எனும் நஞ்சு பொருளற்றதாய்ப் போகிறது. அன்னவர்கள் அடைகின்ற அமிர்த சொரூபமே நித்தியானந்த சொரூபமாம்.

கேள்வி: (295) சமயங்கள் அனைத்துக்கும் வழிபடுவதற்குக் கோயில்கள் இருக்கின்றன. மற்ற சமயத்தவர்கள் கோயிலுக்குள்ளே வழிபாட்டுக்கு நேரே செல்லுகின்றனர். ஆனால் இந்துக்கள் மட்டும் கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்து பிறகு வழிபாட்டுக்குப் போகிறார்கள். அதற்குக் காரணம் யாதோ?

இந்துக்களுடைய தேவாலய அமைப்பு அலாதியானது. மற்ற எந்தச் சமயத்தார்களும் கோயிலை இந்துக்கள் அமைத்து வைத்திருக்கிறபடி செய்யவில்லை. இந்துமதக் கோட்பாட்டுப்பிரகாரம் கோயிலமைப்பில் கருத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. அக்கருத்துக்களை அறிந்துகொண்டால் மக்கள் இந்துமதத்தையே அறிந்துகொண்டவர்கள் ஆவார்கள். கோயிலுக்குள் நுழையும்பொழுது ராஜகோபுரம் முதலில் வருகிறது. அந்த ராஜகோபுரம் மனிதன் படைத்திருக்கும் ஸ்தூல சரீரத்திற்குச் சின்னமாகிறது. ராஜகோபுரத்தில் அமைந்துள்ள துவாரங்கள் மானுட சரீரத்திலுள்ள துவாரங்களுக்குப் புறச்சின்னங்களாகின்றன. சரீரத்தில் துவாரங்கள் பல இருந்தும் மனது என்னும் துவாரத்தின் வாயிலாகவே மனிதன் பரம்பொருளை நாடித் தியானம் பண்ணுவதற்குத் தன் உடலுக்குள்ளேயே மனத்தைச் செலுத்துகிறான். அதற்கு நிகராக ராஜகோபுரத்தில் உள்ளே செல்லுவதற்குத் துவாரம் ஒன்றுதான் இருக்கிறது. அது மனத்தைக் குறிக்கிறது. கோயிலுக்குள்ளே சென்றபிறகு பலிபீடம் முதலில் வருகிறது. ஆங்கு வழிபடுகிறவன் வீழ்ந்து வணங்குவதின் வாயிலாகத் தன்னிடத்துள்ள சிறுமைகளையெல்லாம் பலிகொடுக்கிறான். அதன் பிறகு உட்பிரகாரத்தினுள் அவன் சுற்றி வருகிறான். அப்படிச் சுற்றி வருவது வலம் வருவது எனப்பகரப்படுகிறது. பிராணயாமம் என்னும் சாதனத்தில் காற்றை உள்ளே வாங்குதற்கும், வெளிப்படுத்துதற்கும் ஏற்ற முறைகள் உண்டு. அங்ஙனம் காற்றை வாங்கவும், விடவும் செய்கிற செயல்களுக்குப் புறச்சின்னமாக அமைந்திருப்பது சுற்றி வருவதாம். இக்கோட்பாடு சுற்றி வருகிற எல்லாருக்கும் விளங்குவதில்லை. ஆயினும் பிராணயாமம் என்னும் சாதனத்துக்குப் புறச்சின்னமாக அமைந்திருப்பது பிரதக்ஷிணம் வருவது, வலம் வருவது, சுற்றி வருவது என்னும் செயலாம். ஆத்ம சாதனம் புரிகிறவர்கள் பிராணயாமம் பண்ணிய பிறகே தங்கள் உள்ளத்தினுள் இதய கமலத்தில் இருக்கும் கடவுளை வழிபாடு பண்ணுகிறார்கள். இதே கோட்பாடு இந்துக்களுடைய தேவாலயத்தில் அமைந்திருக்கிறது. கோயில் வழிபாட்டில் அமைந்துள்ள ஒவ்வொரு பகுதியும் ஆத்ம சாதனத்துக்குப் புறச்சின்னமாய் அமைந்திருக்கிறது. அந்த அமைப்பு அலாதியாக இந்து மதத்துக்கே உரியதாம். உலகிலுள்ள வேறு எந்த மதத்திலும் இந்த அமைப்பைக் காணமுடியாது.

கேள்வி: (296) மிகக் கண்டிப்பாய் இருந்தால் கேடுதான் வரும் என்கிறார்கள். இது உண்மையா?

இக்கேள்வி சமுதாய வாழ்க்கையை ஒட்டியது. கண்டிப்பாக இருக்கவேண்டிய இடத்தில் தளர்வுற்றிருந்தால் கேடுதான் வந்தமையும். சலுகை காட்டவேண்டிய இடத்தில் மிகக்கண்டிப்பாகஇருந்தால் அதன் விளைவாகக் கேடே வந்தமையும். மனிதனுக்குச் சமயோசித புத்தி முற்றிலும் தேவை. சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே என்பது முதுமொழி. அறிந்தோ அறியாமலோ சிறுவர்கள் செய்கின்ற சிறிய குற்றங்களுக்கு எச்சரிக்கை செய்து அவர்களை மன்னிப்பது அவசியம். சிறு பிழைக்குக் கடினமான நடவடிக்கை எடுப்பது பொருந்தாது. அப்படிச் செய்வதால் சிறுபிழை செய்துள்ள சிறுவர்கள் கல் நெஞ்சக்காரர்களாக மாறிப்போகின்றனர். தண்டனையின் மூலமாக அவர்களை மேலும் கெடுத்ததே கண்டிப்பின் விளைவாகும்.

சின்னஞ்சிறு வயதிலேயே திருடுதலும், பொய் சொல்லுதலும், பிறர்க்குத் தீங்கு விளைவித்தலும் ஆகிய பெருங்குற்றங்களில் சிறுவர்கள் ஈடுபடுவார்களானால் அவர்களிடத்துக் கண்டிப்பாய் இருந்து அவர்களைத் திருத்தி அமைப்பது முற்றிலும் அவசியம். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பது மற்றொரு முதுமொழி. சின்னஞ்சிறு வயதிலேயே சில தீய செயல்களினின்று திருத்தப்படாதவர்கள் பெரியவர்களான பிறகு யார் சொல்லியும் திருந்தமாட்டார்கள். ஆகவே மக்களை நல்வழியில் நடாத்துவது ஓர் அரிய கலைஞானமாகும். கண்டிப்பாய் இருப்பதும், சலுகை காட்டுவதும் ஒன்றோடொன்று இணைந்திருந்தல்வேண்டும். வருத்தப்படுத்திச் சீர்திருத்துவது சீர்திருத்தமாகாது. மகிழ்வுடன் திருந்தியமைவதற்குக் கையாளுகிறமுறையே கண்டிப்புக்களுள் பாராட்டத்தக்க கண்டிப்பாம்.

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

IX கணையாழி சமர்ப்பணம்

சீதையின் கற்பனைக் குதிரையை எழுப்பித் தட்டிவிட்டுப் பெரும் வேகத்தோடு பறக்க வைத்த அனுமன் அந்த மனோவேகத்தையும் உற்சாக ஊற்றையும் சிறிதும் குறைத்துவிடாமல் பார்த்துக்கொள்ள முற்படுகின்றான். முதலில் மிகச் சுருக்கமாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அனுமன், சீதையினிடமிருந்து தன்னைப்பற்றிய ஒரு கேள்வியை வரவழைத்து, அதற்குப் பதில் கூறும் முகமாக ராமகீர்த்தியைப் பாடி, அவளுடைய உள்ளம் " உய்தல் வந்துற்றதோ?" என்று பாதி உவகை நிலையிலிருந்து முழுமகிழ்ச்சியடையும் வண்ணம் ராமனின் மேனி வண்ணத்தை வர்ணித்து, அதனால் சீதையின் மனம் அனலில் இட்ட மெழுகுபோல் உருகும்படி செய்து, இன்னும் ஒருபடி மேலே சென்று, சீதா-ராமனின் வரலாற்றில் ராமனின் மனம் எவ்வளவு ஈடுபட்டு அந்த நினைவுகளைச் சீதை இல்லாத நேரத்தில் போற்றிப் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றது என்பதைச் சீதை உணரும் வண்ணம் தெரிவித்து, அவளுடைய உவகையை, உள்ளக் கிளர்ச்சியை ஒரு பெரிய நிகழ்ச்சிக்காகத் தயாராக்கி வைக்கின்றான்.

1. கணையாழி தர்சனம்

அனுமன் கூறிவந்த அடையாள மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்த அசோகவனச் சீதையும், கம்பன் பாடல்களின் கருத்து ஓவியங்களில் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்த நாமும் எதிர்பாராத ஒரு நிலையில், இன்னும் என்னென்ன கூறப்போகின்றானோ இந்தப் பல்கலை வல்லுநன் என்று ஆவலுடன் காத்திருந்த நேரத்தில் சொல்லின் செல்வன் தன் செயல் வீரத்தை வெளிக்காட்ட முற்பட்டுத் தன்னிடம் ராமன் கொடுத்தனுப்பிய மோதிரத்தைக் கையிலெடுத்துச் சீதைக்குக் காட்டுகின்றான்.

தான் கூறிவரும் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் சீதையின் மனத்தை அவளுடைய முகபாவத்திலிருந்தே கணித்துக் கொண்டே வந்திருக்கின்றான் மாருதி. மூன்றுவது அடையாள மொழியைச் சொல்லும் போதே தான் எதிர்பார்த்த அளவிற்குச் சீதை உள்ளம் மகிழ்ந்து, நிறைவுபெற்று, தான் அளிக்கப்போகும் அடுத்த செய்தியை ஏற்றுக் கொள்ளத் தயாராகி விட்டதாக அனுமன் கண்டுகொள்கின்றான். உடனே தனக்குத் தானே பேசிக்கொள்கின்றான்:

" மீண்டும் தொடர்ந்து வேறெதுவும் பேச வேண்டியதில்லை; இத்துடன் நிறுத்திக் கொண்டு அடுத்த காரியத்தைச் செய்யலாம். சீதையின் மன நிலையும் இதற்கான பக்குவப் பட்ட நிலையை அடைந்து விட்டது."

இவ்வாறு அனுமன் ஒரு முடிவுக்கு வருகின்றான். அடுத்து அவன் செய்ததைக் கம்பன் கவியில் காணலாம்:-

"மீட்டும் உரை வேண்டுவன
இல்லை" என மெய்ப்பேர்
தீட்டியது; தீட்டுஅரிய
செய்கையது, "செவ்வே
நீட்டு இது" எனநேர்ந்தனன்'
என, நெடிய கையால்
காட்டினன் ஓர் ஆழி;
அது வாள்நுதலி கண்டாள்.

—உருக்காட்டுப்படலம் 63

[மெய்ப்பேர் தீட்டியது-மெய்ப்பொருளாகிய ராமனின் பெயர் எழுதப்பட்ட மோதிரம். தீட்டு அரிய செய்கையது - அருமையான வேலைப்பாடுடையது. ஆழி-மோதிரம். செவ்வே நீட்டு-நேராக முறையாகக் கொடுப்பாய். வாள் நுதலி-ஒளி பொருந்திய நெற்றியையுடைய சீதை.]

அந்த மோதிரத்தில் ராமனின் திருப்பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. வேறுஎங்கும் காணப்படாத, சித்திரத்தில் எழுதுவதற்கு முடியாத வேலைப்பாடுடையது; " நேரடியாகச் சீதையிடம் இதனைக் கொடுப்பாயாக என்று ராமபிரான் சொல்லி அனுப்பினான்" என்று கூறிக் கொண்டே மோதிரத்தைச் சீதையிடம் காண்பிக்கின்றான் காலின் மைந்தன். அவன் கையிலேயே மோதிரம் இருக்கிறது. அதனைப் பார்த்தாள் சீதை.

ராமனுடைய பெயரை "மெய்ப்பேர்" என்கின்றான் கம்பன். இப்பாட்டில் ராமநாமம் உயிர்கள் உய்ய உதவுவதால் மெய்யான பேராகியது. முன்னர் கிஷ்கிந்தா காண்டத்தில் வாலி, தன் மார்பில் தைத்த பாணத்தைப் பிடித்து நிறுத்தி அதில் எழுதியிருக்கும் பெயரைப் பார்த்தபோது கம்பன் பாடியது நம் நினைவுக்கு வருகின்றது.

மும்மைசால் உலகுக்கு எல்லாம்
 மூல மந்திரத்தை, முற்றும்
தம்மையே தமக்கு நல்கும்
 தனிப்பெரும் பதத்தைத், தானே
இம்மையே மறுமை நோய்க்கும்
 மருந்தினை, 'ராம' என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக்,
 கண்களால் தெரியக் கண்டான்.

—கிட்கிந்தா. வாலி வதைப்படலம் 73.

இப்படிப்பட்ட மெய்ப்பெயரைத் தாங்கிய கணையாழியைத்தான் அனுமன் சீதையிடம் காட்டினன். அனுமன் கையிலிருந்த மோதிரத்தைச் சீதை வாங்குவதற்குள் ஒரு நாடகக் காட்சியைத் தோற்றுவிக்கின்றான் கம்பன். கணையாழி கண்ட சீதையின் நிலையை விவரிக்க முனைகின்றான். உவமைகளும் விளக்கங்களும் அவன் மனக்கண்முன் போட்டி போட்டுக்கொண்டு வந்து நிற்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாகச் சொல்லிப் பார்க்கின்றான். ஆனால் எத்தனை உவமைகள் சொன்னாலும் சீதையின் ஆனந்தத்தை அளவிட முடியுமா? எனவே, தன் முயற்சியில் வெற்றிபெறவில்லை என்று கவிஞனே இறுதியில் ஒப்புக்கொண்டுவிடுகின்றான். இவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய கணையாழியையாவது வர்ணிக்கலாமே என்று உவமைகளைத் தேடி அலைகின்றான் கம்பன். அதிலும் திருப்தியடையாமல் மோதிரத்தை வாழ்த்திவிட்டுத் தன் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகின்றான் கவிச்சக்கரவர்த்தி.

2. ஒப்பில்லாத உவமைகள்

கணையாழியைக் கண்ட காகுத்தன் மனைவியின் மனநிலையை ஏழு உவமைகளால் ஒப்பிட்டுக் காட்ட முயல்கின்றான் கவிஞன்.

1. "இறந்தவர் பிறந்த பயன் எய்தினர் கொல் என்கோ?

2. மறந்தவர் அறிந்து உணர்வு வந்தனர் கொல் என்கோ?

3. துறந்த உயிர் வந்து இடைத் தொடர்ந்தது கொல் என்கோ? திறம் தெரிவது என்னை கொல்? இந் நல் நுதலி செய்கை?"

4. "இழந்த மணி புற்று அரவு எதிர்ந்தது என ஆனாள்;

5. பழம் தனம் இழந்தன படைத்தவரை ஒத்தான்;

6. குழந்தையை உயிர்த்த மலடிக்கு உவமை கொண்டாள்;

7. உழந்து விழி பெற்றது ஓர் உயிர்ப் பொறையும் ஒத்தாள்."

— உருக்காட்டுப் படலம் 64-65

இந்த உவமைகள் ஒவ்வொன்றையும் சிறிது விரிவாக ஆராய்வது பயன்தரும். "இறந்தவர் பிறந்த பயன் எய்தினர் கொல் என்கோ?"

ஒவ்வொருவரும் தான் 'பிறந்த பயன்' என்ன என்பதைத் தெரிந்திருத்தல் அவசியம். மனித வாழ்க்கையின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு அதன்படி வாழ்பவர்களே பிறவிப் பயனை எய்தியவர்கள். அப்படியானால் நாம் பிறந்ததன் பயன் என்ன? இந்தப் பிறவியின் நோக்கம் என்ன?

'மனிதப் பிறவி எடுத்திருப்பது கடவுள் வழிபாட்டிற்காகவே' என்பர் பரமஹம்சர்.

இறைவனிடம் "உன்னை மறந்தால் உயிர் தரியேன்" என்று உறுதி கூறுவர் பிறவிப் பயன் உணர்ந்தோர்.

நாவுக்கரசர் பெருமான் பிறவிப்பயன் என்ன என்பது பற்றிப் பல பாடல்களில் தெளிவு படுத்தியிருக்கின்றார். தில்லையம்பலக் கூத்தனின் இனிய நடனத்தைக் காண்பதற்காக "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்கின்றார். "அம்பலக் கூத்தனுக்கு ஆட்பட்டிருப்பதற்காகவே இந்த மனிதப் பிறவி நமக்கு வாய்த்திருக்கின்றது. இதனை நன்கு பயன்படுத்திக் கொள்வீராக!" என்று நம்மைக் கேட்டுக் கொள்கின்றார்:

"வாய்த்தது நம்தமக்கு ஈதுஓர் பிறவி! மதித்திடுமின்!
 பார்த்தற்குப் பாசுபதம் அருள் செய்தவன்;
 [பத்தருள்ளீர்!
 கோத்தன்று முப்புரம் தீவளைத்தான் தில்லை
 [அம்பலத்துக்

கூத்தனுக்கு ஆட்பட்டிருப்பதன்றே நம்தம்
[கூழைமையே ?"
— கோயில்-திருவிருத்தம்-5.

'அறத்தோர் வழி நிற்றலும், அரன் திருவடிகளை வழுத்துவதும், அவன் புகழ் பாடுவதுமே பிறந்ததன் பயன்என்றும், அவ்வாறு செய்யாத நாட்களெல்லாம் பிறவாத நாட்களே என்றும்அப்பர் அடிகள் அறிவுறுத்துகின்றார் :

"துறந்தார்தம் தூநெறிக்கண் சென்றேன் அல்லேன்
துணைமாலை சூட்டநான் தூயேன் அல்லேன்;
பிறந்தேன்; நின்திருவருளே பேசின் அல்லால்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!"
—திருவாவடுதுறை திருத்தாண்டகம் 10.

எனவே மனிதப் பிறவி எடுத்ததன் பயன் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுவதே என்பது தெளிவு. இதனையே கம்பன் 'பிறந்த பயன்' என்று குறிக்கின்றான்.

இனி, 'இறந்தவர்' என்று கம்பன் யாரைக் குறிக்கின்றான் என்பதைப் பார்க்கவேண்டும். 'இறந்தவர்' என்றால் சாதாரணமாக உடலிலிருந்து உயிர் நீங்கப்பெற்றவர்கள் என்று பொருள் கொள்ளலாம். ஆனால் இதே அர்த்தத்தில் மூன்றாவது உவமையிலும் 'துறந்த உயிர்' என்ற தொடர் காணப்படுகின்றது. அப்படியானால் ஒரு விஷயத்தையே கம்பன் முதலாவது உவமையிலும் மூன்றாவது உவமையிலும் சொல்கின்றானா என்ற கேள்வி எழுகின்றது. எனவே 'இறந்தவர் என்பதற்குச் சாதாரணமான உடலிலிருந்து உயிர் நீங்கப் பெற்றவர்' என்ற அர்த்தம் இங்குப் பொருத்தமானதாகத் தோன்றவில்லை. வேறு என்ன பொருளில் கம்பன் இச்சொல்லைக் கையாண்டுள்ளான்? இதற்குச் சரியான விடைகாண ஒரு திருக்குறள் நமக்கு வழிகாட்டுகின்றது:—

"ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"
–திருக்குறள். அறத்துப்பால். ஒப்புரவறிதல் 4.

உலகியல்பை உணர்ந்து நடந்துகொள்ளாதவனை வள்ளுவர் 'இறந்தவனாகவே' கருத வேண்டும் என்கின்றார். உயிரும் உடலுமாக அவன் உலகத்தில் உலவினாலும் முறையான வாழ்வு வாழாததால் அவன் 'இறந்தவருள்' ஒருவனாகவே கருதப்படுவான். எனவே 'இறந்தவர்' என்று கம்பன் குறிப்பிட்டது 'செத்தாருள்' என்று வள்ளுவர் குறிப்பிட்ட கருத்திலேதான் என்று கொள்வதே பொருத்தமானதாகும்.

"பாலையாம் தன்மை செத்தும்,
பாலனும் தன்மை செத்தும்,
காளையாம் தன்மை செத்தும்,
காமுறும் இளமை செத்தும்,
மீளும் இவ்வியல்பும் இன்னே
மேல்வரும் மூப்பும் ஆகி,
நாளும் நாள் சாகின்றாமால்
நமக்கு நாம் அழாதது என்னே"
—குண்டலகேசி 9.

என்ற குண்டலகேசிப் பாடலும் இக்கருத்தை வலியுறுத்தும்.

எனவே 'இறந்தவர்' என்பதற்குப் பிறவிப் பயனை அறியாமல் வீணாகக் காலம் கழித்தவர்கள் என்றும், வாழ்க்கையின் நோக்கத்தை அடைய முயலாதவர்கள் நடைப்பிணத்திற்குச் சமமானவர்கள் என்றும், அவ்வாறு முயலாத நாளெல்லாம் வாழாத நாட்களே என்றும் கொள்வது பொருத்தமானதுதான். வாழ்நாளின் பெரும் பகுதியைப் பிறந்ததன் பயனை இறை உணர்வை அடையப் பயன்படுத்தாத ஒருவன் ஒரு நல்ல நாளில் அவ் இறையுணர்வு வரப்பெற்று வாழ்வின் பயனைத் துய்க்கும் பேறு பெற்றால் அவன் எவ்வளவு மகிழ்ச்சியடைவானோ அவ்வளவு மகிழ்ச்சி சீதை அம் மோதிரத்தைப் பார்த்ததும் அடைந்தாளோ என்று கவியுள்ளம் சீதையின் மகிழ்ச்சியை ஒப்பு நோக்கிப் பார்க்கின்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் பதிப்பித்துள்ள கம்பராமாயணத்தில் இந்தப் பகுதிக்கு எழுதப்பட்டிருக்கும் சிறப்புரையை இங்கு ஒப்பு நோக்குவது மிகுந்த பயன்தருவதாகும்.

"இறைபணி தலைநின்று இறைவனுக்கு அன்பராய் வாழ்ந்து பிறந்தபயன் கொள்ளாது வீணே வாழ்க்கையைக் கழித்தவர்களை 'இறந்தவர்' என்று கம்பர் இப்பாட்டில் கூறுகின்றார். அவர்கள் பிறந்தும் பிறவாதவர்களே ஆவர். அவ்வாறு இறைத்தொண்டு புரிதலுக்கு ஆளாகாதவர்கள் நெடுநாள் வருந்திப் பின் அது கைகூடிய நிலையில் அடையும் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை இல்லை. இவ் இரண்டு நிலைகளுக்கும்

திருநாவுக்கரசர் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றார். அவர் நெடுநாள் இறைவனை மறந்திருந்து வருந்திப் பின் இறைவன் திருவடிக்குத் தொண்டு செய்யும் பேறு பெற்றார். தாம் அன்பற்றிருந்த முன்னைய நிலையையும், அன்புற்றபின் தாம் அடைந்த பின்னைய நிலையையும் ஒரு திருத்தாண்டகத்தில் நன்கு விளக்கியிருத்தல் இங்கு நோக்கத்தகும்:-

அறம் தெரியா வூத்தைவா யறிவில் சிந்தை
 யாரம்பக் குண்டரோ டயர்த்து நானும்
மறந்தும் அரன் திருவடிகள் நினைய மாட்டா
 மதியிலியேன் வாழ்வெலாம் வாளா மண்மேல்
பிறந்த நாள் நாளல்ல வாளா ஈசன்
 பேர் பிதற்றிச் சீரடிமைத் திறத்துள் அன்பு
செறிந்தெழும்பி யூர்மலைமேல் மாணிக்கத்தைச்
 செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.

— திருமுறை 6. பதிகம் 305 பாடல் 8

மற்றும் பிள்ளைலோகாசாரியார் அஷ்டாதச ரகசியத்தில், "பழுதே பல பகலும்போயின என்று இழந்த நாளைக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்க விரகில்லை 'அன்று நான் பிறந்திலேன், பிறந்த பின் மறந்திலேன்' என்ன என்றார் களிறே" என்று எழுதியதும் காணத்தகும்.

"ராமாயணக் கருப்பொருள் ஏட்டில், பிறந்த பயன் எய்துதல் என்பதற்கு 'மனுஷ ஜனனம் எடுத்ததற்குப் பலனான பரமபதத்தை உடனே பெற்றது' என்று வரையப்பட்டுள்ளது."

— சுந்தரகாண்டம் Vol 1 பக்கம் 414-415.

பிறவிப் பயனை இறை வழிபாட்டில் ஈடுபடாமல் வாழ்க்கையை வீணாக்கியவர்கள், மறுமைக்கு உதவும் தவம் முதலிய நற்கர்மங்களைச் செய்யத் தவறியவர்கள், பின்னர் அவ் இறைப் பணியை ஆற்றும் பேறு பெற்றால் அவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையுண்டோ? இதுபோன்றதே கணையாழி கண்ட சீதையின் களிப்பும் என்கின்றான் கம்பன்.

சீதையின் வாழ்க்கையின் நோக்கமே ராமனுக்குப் பணிபுரிவதுதான். அந்த நோக்கத்தைச் சீதை நன்கு நிறைவேற்றி வந்தாள். அரசபோகத்தில் இன்பம் துய்த்திருக்கவேண்டிய சீதை அதனை உதறிவிட்டு உடுத்திய துகிலோடும் உறுதியான மனத்துடனும், ராமனின் கைப்பற்றிக் கானகம் வந்தாள். கானகத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் ராமன் பணியிலேயே இன்பம் கண்டாள். தெளிந்த நீரோட்டம் போன்ற அக்கானக வாழ்க்கையில் ஒரு சோதனை. அழிந்துபடும் சிற்றின்பத்திற்கு நிலைக்களமான, மாயையான ஒரு பொன் மானின் மேல் அவள் மனம் திரும்பிற்று. அதன் விளைவு? தன் வாழ்வின் பயனை ராமன் பணியை இழந்தாள். அம்மட்டுமா? ராமன் பணிக்குத் தன்னையே தியாகம் செய்த இலக்குவனைப் பழிக்கவும் நேர்ந்தது. அது அவளுக்குப் பெரிய இழப்பு. அது நடந்து இன்றுடன் பத்து மாதங்களாகின்றன. தன்னால் ராமனுக்குப் பணிவிடை செய்ய முடியாமல் போயிற்றே என்றும் தன்னால் அவனுக்கு 'எல்லையற்ற இடர்' நேர்ந்து விட்டதே என்றும் நினைத்து அவள் உருகாத நாளில்லை. இனியொரு வாழ்க்கை தனக்குக்கிடைக்குமா என்று ஏங்கி, அது வாய்க்கும் பேறு இல்லை என்று தன் உயிரைப் போக்க முனையும் தறுவாயில் 'இதோ உன் வாழ்வின் பயனான ராமனுக்குப் பணி செய்யும் வாய்ப்புக் கிடைக்கப்போகின்றது' என்று அழைப்பது போன்றிருந்தது சீதைக்கு அனுமன் காட்டிய ஆழி. அதனால் சீதை பெற்ற இன்பத்தை இறந்தவர் பிறந்த பயன் எய்திய போது பெற்ற இன்பமாக இருக்கலாமோ என்று கம்பன் எண்ணிப் பார்க்கின்றான்.

சூதாட்டம்

சூதும் வாதும் வேதனை செய்யும். பிறர் பொருளை முறைதவறிக் கைப்பற்றுவது சூதாட்டம். அப்படிச் சம்பாதித்த செல்வம் நிலைத்திராது. பாபத்தையும் பாதரசத்தையும் ஜீரணம் பண்ணமுடியாது. சூதாட்டம் பொல்லாதது என்பது தொன்றுதொட்டு நிரூபிக்கப்பட்டு வந்திருக்கிறது. பழங்காலத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் பகடை என்ற சூதாட்டம் விளையாடி நாட்டைப் பாழ்படுத்தினார்கள். இக்காலத்தில் நம்மவர்கள் பரிசுச்சீட்டு என்ற சூதாட்டத்தையும் குதிரைப் பந்தயம் என்ற சூதாட்டத்தையும் நடத்தி வருகிறார்கள். இவை கலியின் விளைவு கேடு. நல்லார் இத்தீங்குகளினின்று விலகி இருப்பார்களாக.

வாசுதேவ மனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

ஆத்மாவின் அகண்டார்த்தத்தை யுக்தியினுலும் அறிந்துகொள்ள முயல்வோம். ஸத் என்பது தானுகவே பிரகாசிக்கிறதா? அல்லது வேறென்ருல் பிரகாசிக்கிறதா? தானுகவே பிரகாசிக்கிறது. அதனுல் சத்துத்தான் சித்து என்று ஆகிறது. வேறென்ருல் பிரகாசிக்கிறது என்ருல் அந்த வேறு வஸ்து மற்றொரு சத்தா அல்லது சத்துக்கு எதிரிடையான சுபாவமுள்ளதா? ஸத்துக்கு எதிரிடையான சுபாவமுள்ளதானுல் அது அஸத். அது எப்படி ஸத்தைப் பிரகாசிக்கச் செய்யமுடியும்? அசத் முயல் கொம்புபோன்று இல்லாத பொருள் ஆகும். அந்த வேறு ஒரு வஸ்து சத்பொருள் என்ருல் அதுவும் தானே பிரகாசிக்கிறதா அல்லது வேறென்ருல் பிரகாசிக்கப்படுகிறதா என்கிற கேள்வி வரும். அது தானே பிரகாசிக்கிறது எனில் அந்த ஸத்தேதான் சித்தாகிறது. வேறென்றினுல் பிரகாசிக்கிறதுஎனில் மறுபடியும் முன்போலவே கேள்விகள் வரும். இது முடிவு காண முடியாத கேள்வித்தொடராகவே இருக்கும். பத்து என்ற இலக்கத்தை மூன்ருல் வகுத்தால் 3. 333 என்று முடிவில்லாமல் போய்க்கொண்டிருப்பது போன்று இந்தக் கேள்வியும் முடிவில்லாததாக இருக்கும். ஆகையால் சத் வஸ்து தானே பிரகாசிக்கிறது என்றுதான்முடிவு கட்டவேண்டும். ஆகையால் சத்துத்தான் சித்து, சித்துத்தான் சத்து. இரண்டும் ஒன்றுதான் என்று ஏற்படுகிறது. ஸத்தைக் காட்டிலும் வேருன ஒரு சித்து வஸ்து இருப்பதாக நம்மால் முடிவு கட்ட முடியாது. இதற்குச் சாஸ்திரப் பிரமாணமும் இல்லை. யுக்தியினுலும் நிருபிக்க முடியாது.

தானே பிரகாசிக்கிற அந்த சத் வஸ்து எப்படி ஆனந்தமாகிறது? சத்வஸ்து அத்வைதம், ஏகப்பொருள், அதற்கு அன்னியமாக மற்ருெரு வஸ்து இல்லாதபடியால் அதுவே ஆனந்தரூபம் எனப்படுகிறது. எங்கும் நிறைந்த இரண்டற்ற பொருளில்தான் ஆனந்தம் இருக்கும். அல்பவஸ்துவில் ஆனந்தம் கிடையாது. அத்வைதமான ஸத்வஸ்துதான் பூர்ணமானது. துவைத வஸ்து பூரணமன்று. ஆகவே பூரணமான சத்வஸ்து ஆனந்தரூபம்.

சத்வஸ்து எப்படி அத்வைதமாகிறது எனில் சத்வஸ்து அழியாதது. அழியாத பொருள் ஆதி அந்தமற்றது. ஆதியந்தமற்றபொருளில் காலம் இல்லை. அழியாத வஸ்துவுக்கு அதை மலினப்படுத்த வேறு ஒருபொருள் இல்லை. ஆகையால் இடமும் காரண காரியதத்துவமும் அடிபட்டுப் போகின்றன. இந்த ஸத்பொருள் தான் தானே பிரகாசிக்கிறது. அந்தப் பிரகாசம் தான் இப்பிரபஞ்சமாகத் தோன்றிக்கொண்டிருக்கிறது; அதில் நீக்கமற நிறைந்திருக்கிறது. அது தன்னைத் தானே ரசித்துக்கொண்டு ஆனந்தமுற்றிருக்கிறது. ஆகவே சத்பொருள் அத்வைத வஸ்துவாக இருந்தால்தான் அதற்கு விளக்கப்படுகிற சகல நிர்க்குண, நிராகார, அத்வைத தத்துவங்கள் எல்லாம் சரி, உண்மை என்று ஆகும். ஆகவே யுக்தியின் மூலமும் ஆத்மாவின் சச்சிதானந்தப் பொருளின் அகண்டார்த்தம் நிருபணமாகிறது.

இனி அனுபவத்தில் இந்த உண்மை எப்படி அறியப்படுகிறது என்று அறிந்துகொள்வோம். எல்லாருக்கும் ஆழ்ந்த தூக்கத்தில் ஒரே சுகம் தோன்றுகிறது. அந்தச் சுகம் ஜாக்கிரத, சொப்பன அவஸ்தைகளில் உள்ளதுபோன்று பலதரப்பட்டதன்று. அது ஒரே ரூபமானது, பேதமற்றது, வேறு ஒன்றினுல் பாதிக்கப்படாதது. சுஷுப்தியில் சூரியன் முதலியவைகளின் பிரகாசத்தை எதிர்பாராமல் சுஷுப்தி, ஆனந்தம் தானே பிரகாசிப்பதால் அது சித் ரூபமானது. சுஷுப்தியில் சகல ஜீவன்களும் ஆனந்தமுற்று இருக்கின்றன. 'ஆனந்தமாகத் தூங்கினேன்' என்று ஒவ்வொருவரும் உணர்கிருேம், சொல்கிருேம். இந்த ஆனந்த அனுபவமே ஆத்மாவின் ஆனந்தரூபம் எனப்படுகிறது. இந்திரியங்களின், மனத்தின் துணையின்றி அனுபவிக்கப்படுவதால் இந்த ஆனந்தம் அழியாதது, மாருதது, துக்கமாகப் பரிணமிக்கும் இந்திரியங்களின் இன்பத்தைக்காட்டிலும் அது அலாதியானது, வேருனது. இந்திரியம், மனம் இல்லாததால் அது தானே பிரகாசிக்கிறது.

கேள்வி: சுஷுப்தியில் நம் அனுபவத்தில் சுகமும் விளங்குகிறது, அக்ஞானமும் விளங்குகிறது. இவை இரண்டிற்குள் சுகம் ஸ்வப்பிரகாசமா? அக்ஞானம் ஸ்வப்பிரகாசமா?

பதில்: சுகம்தான் ஸ்வப்பிரகாசம். அக்ஞானம் அன்று. அக்ஞானம் மறைவு ரூபமானதால் அது பிரகாசம் அன்று. ஆகையால் சுஷுப்தியில், ஆத்மானந்தம் தானே பிரகாசித்துக்கொண்டு அக்ஞானத்தையும் பிரகாசம் அடையும்படி செய்கிறது. ஆகவே சத் என்பதன் ஆனந்தம் ஸ்வப்பிரகாசமானது என்று அனுபவத்தினுலும் தீர்மானமாகிறது. ஆகவே சச்சிதானந்தம் என்ற பதத்தால் ஆத்மாவின் அகண்டார்த்தம் (ஏகத்வம் இரண்டற்ற நிலை) குறிக்கப்படுகிறது என்பதை அனுபவத்தாலும் முடிவு கட்டுகிறோம். இங்ஙனம் சுருதி, யுக்தி, அனுபவம் மூன்றினுலும் ஆத்மாவுக்கு ஸ்வகத பேதம் (தன்னுள் வேற்றுமை, பிரிவினை) கிடையாது என்று உறுதியாகத் தெரிகிறது. இப்படி ஸஜாதீய, விஜாதீய ஸ்வகத பேதங்கள் இல்லாததால் வஸ்துவினுல் அளவுக்கு உட்பட்ட தன்மை ஆத்மாவுக்குக் கிடையாது. தேசஅளவு, காலஅளவு, வஸ்துஅளவு (பரிச்சேதங்கள்) என்கிற குறைபாடுகள் ஆத்மாவுக்கு இல்லாததால் ஆத்மா பரிபூரணன் (எங்கும், எப்போதும், எவ்விதத்திலும் நிறைந்தவன்) என்று தீர்மானமாகிறது. ஆக ஆத்மா அகண்டமானது ஏகரஸரூபமானது.

இப்படிப்பட்ட பரிபூரணனை ஆத்மாவுக்குத் துக்கம் என்பது பின்னுல் வந்தடைந்ததே தவிர இதன்சுபாவமானதன்று. இந்தத் துக்கம் சரீரத்தால் வந்தது. சரீரம் கர்மாவினுல் வந்தது. கர்மம் ராகதுவேஷங்களினுல் ஏற்படுகிறது. ராகதுவேஷம் பற்றுதலினுல் உண்டானது. பற்றுதல் அவிவேகத்தால் வந்தது. அவிவேகம் அக்ஞானத்தினுல் உண்டானது என்று அறிந்து அந்த அக்ஞானம் ஞானத்தால் போக்கடிக்கப்பட வேண்டும். ஞானம் விசாரம் செய்வதால் உண்டாகிறது. ஏகாந்த வாசம் விசாரத்திற்கு உற்ற சூழ்நிலை ஆகும். சத்சங்கத்தால் அது வலுவடையும். ஆத்மா சச்சிதானந்த ஸ்வரூபம் என்றும் நமதுசரீரமும் இவ்வுலக வாழ்வும், இப்பிரபஞ்சமும் பொய்யானது, ஜடமானது, துக்கமயமானது என்றும் இந்தப் பிரபஞ்சம் ஆத்மாவின் பேரில் ஆரோபிக்கப்பட்டு (ஒன்றின்மேல் ஏற்றப்பட்ட பொய்த் தோற்றம்) இருக்கிறது. இது வெறுந் தோற்றம் நிலையற்றது என்றெல்லாம் விசாரணை செய்து அதுதான் நீ என்ற தத்துவம் என்ற சுருதிவாக்கியத்தினுல் ஞானம் உதயமாகிறது. முதலில் நான் பிரம்மமாக இருக்கிறேன் अहं ब्रह्मास्मि என்கின்ற பரோக்ஷ ஞானமும் பிறகு அனுபவத்தால் சாக்ஷாத்கார ரூபமான அபரோக்ஷ ஞானமும் ஏற்படுகின்றன. இப்படிப்பட்டவனையே ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியார் மனீஷா பஞ்சகத்தில் "அவன் சண்டாளனுனாலும் பிராம்மணன் ஆனுலும் அவனே குரு என்பது என்னுடைய எண்ணம்" என்று சொல்லியுள்ளார். சாக்ஷாத்காரம் பெற்றவனே பலவித சன்னியாசிகளைக் காட்டிலும் சிறந்தவன், பூஜிக்கத் தகுந்தவன், அவனே பரமஹம்ஸன். இந்த நிலையை அடைய வேண்டி ஒவ்வொருவரும் மேலே சொன்ன வழிகளைக் கையாண்டால் நித்திய, சுத்த, புத்த, முக்த, ஸத்ய, பரமானந்த, அத்விதீய பிரம்மம் ஆவான் என்பது நிச்சயம். இதுவே குருவின் உபதேசம். சாஸ்திரங்களின் உபதேசமும் இதுவே. நமது அனுபவங்கள் புகட்டும் பாடமும் இதுவே. இதற்குமேல் சொல்லுதற்கோ கேட்பதற்கோ ஒன்றும் இல்லை. எதை அடைந்த பிறகு மேலும் அடைவதற்கு ஒன்றுமில்லையோ, எதை அறிந்த பிறகு மேலும் அறிவதற்கு ஒன்றுமில்லையோ, அத்தகைய பிரம்ம நிர்வாணம், சாக்ஷாத்காரம் இதுவே. பிரம்ம நிலைபேறு அடைதலே இந்த மானுட ஜீவிதத்தின் தலைசிறந்த பிரயோஜனம் ஆகும். உலகப் பற்றுள்ளவர்களால் ஆத்மவிசாரம், மத அனுஷ்டானம், பிரயோஜனமற்றது, வேண்டாதது என்று கருதப்படுகிறது. ஆனுல் ஆழ்ந்த லௌகிகனும் வாழ்வின் முடிவில் இவ்வுலகமும், இதன் வைபவமும், மானுடவாழ்வும் எவ்வளவு மதிப்புடையன என்பதை அறிந்துகொள்கிருன். இந்த மானுட வாழ்வில் முடிந்த நன்மை, நிறைந்தநன்மை, காரியசாத்தியமானது அனுஷ்டானத்துக்குரியது ஆத்மவிசாரம், ஆத்மானுபவ உணர்தல் ஒன்றே ஆகும். பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றே. இதை நாம் உணர்ந்து ஆத்மபோதம் பெறவேண்டும். (முற்றும்)

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

16. மேகமும் மாயையும்

ஒளி ஒருவகை ஆற்றலாகும். ஒளியும் வெப்பமும் இணைபிரியாதவைகள். இதைப்பற்றிய ஆராய்ச்சி பௌதிக சாஸ்திரத்தின் இன்றியமையாத பகுதியாகும். நமக்குத் தேவையான வெப்பம் முழுவதும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சூரியனிடமிருந்தே வருகிறது. பூமி சூரியனைச் சுற்றுவதை முன்னிட்டே பருவங்கள் மாறிமாறி வருகின்றன.

சூரியன்நாம் வசிக்கும் இந்த நிலவுலகைவிடப் பன்மடங்கு பெரியது. மேலும் வெகு தொலைவில் உள்ளது. பூமியிலிருந்து சூரியன் வரை மூன்றுமைல் விட்டமுள்ள ஒரு பனிக்கட்டி ஸ்தம்பத்தை வைத்து அதன்மீது சூரிய வெப்பக் கதிர்களைக் குவியச் செய்தால் அந்த ஸ்தம்பம் ஒரே நொடியில் உருகி ஆவியாய்ப் போய் விடுமென்று அறிவியல் அறிஞர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். சூரிய வெப்பக் கதிர்களின் ஆற்றல் அத்தகையது.

சூரியன் தானே சுயமாக ஒளிரும் பொருள். அதாவது அது தன்ஒளிக்குப் பிறரைச் சார்ந்திருக்கவில்லை. ஆனால் சந்திரனோ சூரியனிடமிருந்து பெறுகின்ற ஒளியாலேயே தானும் ஒளிர்வது போல் தெரிகின்றது. சூரியப் பிரகாசம் உலகனைத்தையும் விளக்கிக் காட்டுவது போன்று ஆத்மா நமக்கு உலகனைத்தையும் விளக்கிக் காட்டும் அறிவுப் பிரகாசமாக இருக்கிறது. அதனாலன்றோ நாம் சொல்லும் காயத்ரி மந்த்ரம் சூரியகாயத்ரீ என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

சூரிய வெப்பத்தின் காரணமாக நீர் நிலைகளிலுள்ள நீர் ஆவியாகி மேலே கிளம்பிப் பின்னர் மேகமாக மாறுகிறது. இந்த மேகத்தின்மீது சில்லென்ற குளிர்காற்றுப்படும்போது நீராவி நீர்த்துளிகளாக மாறி அதன் விளைவாக அது மேலிருந்து கீழே மழையாகப் பொழிகின்றது. ஆக, தண்ணீர் மேகமாக மாறுவதற்குச் சூரியவெப்பம் மிக இன்றியமையாதது.

இவ்வாறு உண்டாகும் மேகம் சிலவேளைகளில் சூரியனையே மறைத்துவிடுகிறது. அப்போது வானத்தில் நம் காட்சிக்குச் சூரியன் தென்படுவதில்லை. தன்னைவிடப் பலகோடி மடங்கு பெரியதாகவிருக்கும் சூரியனை ஒரு சிறு மேகம் மறைத்துவிடுகிறது. அந்தோ! அது போன்றுதான் ஆத்மாவின் சந்நிதான விசேஷத்தால் எழும் அற்ப அகந்தையானது ஆத்மாவையே மறைத்துவிடுகிறது. அகங்காரம், மாயை, அஞ்ஞானம், ஜீவபோதம் என்பன யாவும் ஒரு பொருள் தரும் பலசொற்களாம்.

சூரியன் போன்றவர் பரம்பொருள். மேகம் போன்றது மாயை. சூரியனால் தோற்றுவிக்கப்பட்ட மேகம் சூரியனையே மறைப்பது போன்று பரம்பொருளிலிருந்து தோன்றிய மாயை பரம்பொருளையே மறைக்கிறது.

இந்த மாயையைக் கடப்பதற்கு உற்ற உபாயம் யாது என்பது அடுத்த கேள்வி. இதற்குக் கீதையில் கண்ணன் தரும் விடையாவது:

"குணங்களால் ஆகிய என்னுடைய தேவ மாயையானது உண்மையில் தாண்ட முடியாதது. யார் என்னையே சரணடைகிறார்களோ அவர்கள் இம் மாயையைக் கடக்கின்றனர்."

தெய்வத்தின் துணையில்லாது மாயையைக் கடக்கமுடியாது. தெய்வத்தினிடத்துத் தன்னை முழுமையாக ஒப்படைத்து, தெய்வத்தையே சார்ந்து இருப்பவனுக்கு இம்மாயையைக் கடப்பதற்குத் தெய்வம் துணைபுரிகிறார். மற்றவர்கள் இம்மாயையைக் கடக்க இயலாது. மாயையைக் கடப்பது என்பது எளிதன்று.

ஆக, சூரியனை மறைக்கும் மேகத்தைக் காற்று கலைத்துச் சூரியனை நமக்குப் புலப்படச் செய்வதுபோன்று, இறைவனிடம் பரிபூரண சரணாகதிசெய்து அதிலிருந்து எழும் பக்தி என்னும்காற்றால் மாயை என்னும் அஞ்ஞான மேகத்தைக்கலைத்து ஞானசூரியன் ஆகிய பரம்பொருளைக்காண முயல்வோமாக. 'உன் அருள் பெறும் நாள் என்றென்றே வருந்துவனே' என்று நாம் அவருடைய அருள் ஒன்றையே யாண்டும் சார்ந்திருப்போமாக!

ஒரு சிறுமேகம் சூரியனையே நம் காட்சிக்கு எட்டாது மறைத்துவிடுகிறது. அதேவிதத்தில் பரம்பொருள் நம் காட்சிக்கு எட்டாதபடி மாயை மறைத்து விடுகிறது. —ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

சமூக நலன்

(சுவாமி ஸதானந்தர்)

உழைப்பு

ஒரு மனிதனுக்குப் பிதுரார்ஜித சொத்து இல்லாமல் போகலாம். அதனால் ஒரு குறையும் இல்லை. அவனிடத்தில் உழைப்பு இருந்தால்போதும். அவன் செல்வத்தில், பொருளாதாரத்தில் பெருமுன்னேற்றம் அடையலாம். இளமையில் பள்ளி செல்ல முடியாமல் போகலாம். அவனிடத்தில் முயற்சி, சிரத்தை இருந்தால் போதும், அவன் பண்டிதனுக ஆகலாம். ஒரு தேசம் இயற்கை வளம், நிலக்கரி, இரும்பு, எண்ணெய், நதிகள் போன்றவை அதிகம் அல்லது முழுவதும் இல்லாததாக இருக்கலாம். அதனால் குறை ஒன்றும் இல்லை. அந்த நாட்டு மக்கள் உழைப்பாளிகளாக இருந்தால் பொருளாதாரத்தில் ஏற்றம் அடையலாம்; அடைய முடியும். தனி நபருக்கு எது உண்மையோ அது தேசத்துக்கும் உண்மை. மனிதர்களின் தொகை சமூகம் அல்லது தேசம். உழைப்பு மிகப்பெரிய செல்வம். உழைப்பு, முயற்சி, சிரத்தை இருக்கிற அளவுக்குச் செல்வம், உற்பத்தி கூடி, குறைந்து அமையும். ஆகையால் யாரையும் நோக வேண்டாம்; கவலைப்படவேண்டாம். நாம் உழைத்து முன்னேறுவோம்.

உழைப்பைப்பற்றிய பலதவறுன கொள்கைகள் புகுந்துவிட்டன. அவைகளை விலக்கி நாம் நல்லபடியாகப் புரிந்துகொள்வது அவசியம். நமது சரீரத்தை அறிவு வழி நடத்துகிறது; இயக்குகிறது. நீராவியந்திரம், எண்ணெய் ஆகியவைகளால் இயக்கப்படும் யந்திரம், இன்ஜின்கள் இவைகளைப் பாருங்கள். உள்ளே நீராவி, பெட்ரோல், டீசல் ஆகிய சூக்ஷ்மப் பொருள்கள் பெரிய ஸ்தூல யந்திரத்தை இயக்குகின்றன. நமது சரீர உழைப்பும் அங்ஙனம் அறிவினுல் வழிநடத்தப்படுகிறது. Skilled labour, Unskilled labour என்று பிரிக்கிறுர்கள். உழைப்பில் அறிவு அதிகம் புகப்புக சேரச்சேர அந்தக் காரியம் சிறக்கும்; அதிகம் பயனுடையதாக இருக்கும். அறிவு தேவைப்படாத உழைப்பே இல்லை. அதன் அளவையில்தான் வித்தியாசமிருக்கும்.

இரண்டாவது பொறுப்பு கடமை உணர்ச்சி. பொறுப்பு உணர்ச்சிகூடக்கூடக்கண் துஞ்சார், பசிதாகம் அறியார், கடமையே கண்ணுயினர் என்கிற நிலைமைகள் ஏற்படுகின்றன. காரிய சித்திக்கு, லாபத்துக்கு, சேதாரங்களைத் தடுப்பதற்கு இதுவே துணை செய்யும். பொறுப்பற்ற காரியம் ஆகாயத்தில் எய்த குறியற்ற அம்பு போல நிஷ்பிரயோஜனமாகும்.

மூன்ருவது விசுவாசம், அன்புடன் செய்கிற உழைப்பு. இது மானுட நிலையை விட்டுத் தெய்வ நிலைக்கு உயர்த்தும் ஒரு சாதனம் ஆகும். ஆகாத காரியங்களை ஆக்குவிக்கும். தேசத்தொண்டு, சமூகசேவை, பெரியோருக்குப் பணிவிடையாக அது வடிவெடுக்கிறது. இதனுடைய உச்சநிலை சுயநலமற்ற நிலை தியாகமாக வந்தமைகிறது. வெறும் உழைப்பை கர்மயோகமாக, பக்தி சாதனமாகக் கடவுளை அடையும் உபாயமாக ஆக்குவது தியாகம். இதுவே பிரதிபலனை எதிர்பாராமல், பாராட்டுதலை எதிர்பாராமல், வியாபார மனப்பான்மை இல்லாமல் தன்னைப்பற்றிக் கருதாமல் உழைக்கச் செய்கிறது. இதில்தான் ஜீவிதத்தின் மேலான நன்மை வந்தமைகிறது. பொறுப்பும் விசுவாசமும் இருந்தால் தெரியாத தொழில்களும் தெரிந்தவை, மிகப் பழக்கமானவை போன்று ஆகிவிடுகின்றன. மனதில் அவை விளங்குகின்றன. திறமை மிக உண்டாகி விடுகிறது. மன ஒருமைப்பாட்டை உண்டாக்குவதால் காரியம் சிறப்பாக நிறைவேறுகிறது. இப்போது எண்ணிப் பாருங்கள். தேசத்துக்கு வேண்டியது உழைப்பு, அறிவு, பொறுப்பு, விசுவாசம் அன்பு இவையா? அல்லது எண்ணெய், கனிவளம், அல்லது நீர்வளம், வனவளமா? இந்த இயற்கை வளங்கள் நம் கைவசம் இல்லை. அவைகள் அமையலாம் அமையாதும் போகலாம். உழைப்பு, அறிவு, பொறுப்பு விசுவாசம் அன்பு இருந்தால் போதும் நம் தேசம் எவ்வளவோ நன்மை, முன்னேற்றம் அடைந்துவிடும். தேசத்தை மேலும் மேலும் தரித்திர நிலைக்கு உள்ளாக்கும் கொள்கைகளையும், சுலோகங்களையும், முயற்சிகளையும்,

சுய நலன்களையும் விடுங்கள். நமது தேசத்தைத் தற்போது பீடித்துள்ள மிகப் பெரிய பீடை, சாபக்கேடு, சுயநலமே. தனி மனிதன், சமூகம், கட்சி, அரசியல் எங்குமே சுயநலம் தாண்டவம் ஆடுகிறது. இதிலிருந்து விடுபட்டால் அன்றி விமோசனமே இல்லை.

உழைப்பைப் பற்றிய மேலும் சில உண்மைகளை அறிந்துகொள்வோம். ஒரு கூலிக்காரன் மூட்டை தூக்குகிறான், லாரி டிரைவர் லாரி ஓட்டுகிறான், பஞ்சுமில் தொழிலாளி அறுந்த நூலைத் திரித்து விடுகிறான். யந்திரங்களை மேல் பார்க்கிறவன் ஆங்காங்கு எண்ணெய் விட்டுக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறான். அலுவலகத்தில் கிளார்க் வேலை செய்பவன், விழுந்து விழுந்து ஓயாது எழுதுகிறான், கணக்குப் பார்க்கிறான். உள்ளே ஓர் அறையில் சாவகாசமாக ஒருவர் சிந்தனையில் இருக்கிறார். செய்யவேண்டிய காரியம், நிதிநிலையைச் சமாளித்தல், விலைஏற்றம், தொழிலாளி பிரச்சினை, உத்தியோகஸ்தனின் பிடுங்கல், வரவேண்டிய கடன்கள் இப்படி அவர் எதை எதையோ சிந்தித்து முடிவு காண்கிறார். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் பாடம் கற்பிக்கிறார், நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வழக்காடுகிறார், நீதிபதி வழக்கைக் கேட்டுக்கொண்டே இருக்கிறார், இருதரப்பு வாதங்களையும் குறிக்கிறார், ஒருவர் பாடி ஜீவிக்கிறார், இன்னொருவர் பிடில் வாசித்து ஜீவிக்கிறார், ஒருவன் நடிக்கிறான், ஒருவன் விமானம் ஓட்டுகிறான், ஒருவன் கப்பலில் வந்த சரக்குகளைத் தூக்கிச் சுமக்கிறான், ஒருவன் மந்திரியாய் இருக்கிறான், ஒருவன் மந்திரிக்குக் கையாளாய் இருக்கிறான். இதோ பல லாரிகளில் தேசபக்தர்கள் போகிறார்கள். அவர்கள் தொண்டை வெடிக்க எதையோ கத்திக்கொண்டு போகிறார்கள். தேசபக்தி உடையவர்களாக எத்தகைய தேசத் தொண்டில் ஈடுபட்டிருக்கிறார்கள்! எல்லாம் உழைப்புத்தான். ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொருவித சரீர பலம், மன அமைப்பு, அறிவுத் திறமை வேண்டும். ஆயினும் எல்லாம் உழைப்பே.

வயலில் உழுதுவிட்டு உழவர்கள் கூலி வாங்கிக்கொண்டு போய்விட்டனர். வரப்பு வெட்டியவர்கள் வேலையை முடித்துவிட்டுக் கூலி வாங்கிக்கொண்டு போய்விட்டனர். நாற்றுப் பிடுங்கியவர்கள் கூலி வாங்கிக்கொண்டு போய்விட்டனர். நடவு நட்டவர்கள் கூலி வாங்கிக்கொண்டு போய்விட்டனர். நாற்றுச் சுமந்தவன், உரம்போட்டவன், பரம்பு அடித்தவன் எல்லாரும் கூலிவாங்கிக்கொண்டு போய்விட்டனர். காலா காலத்தில் முதல் களை, இரண்டாம் களை எடுத்தவர்கள் கூலி வாங்கிக்கொண்டுபோய் விட்டனர். அறுவடை வந்தது. அப்போதும் கூலியாட்கள் அறுவடைக்குரிய வேலைகளை எல்லாம் செய்துவிட்டுக் கூலிவாங்கிக்கொண்டு போய்விட்டனர். எவ்வளவுபேருடைய உழைப்பால்விளைவு எடுக்கவேண்டியிருக்கிறது. இதில் யாருடைய உழைப்பால் இது விளைந்து வந்தது என்று சொல்வது? இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எல்லார் உழைப்பையும் ஓர் ஆள் இணைத்து, கூலி கொடுத்து, உருப்படியாக்கி இந்த விளைவைக் கொண்டு வந்திருக்கிறான். உதிரியாகக் கிடந்த பாசிகளை ஒரு நூலில் கோர்த்து அதை மாலை ஆக்குவது போன்றது இது. மழை பெய்கிறது; ஸ்தூலமாக எல்லார்க்கும் தெரிகிறது. அந்த நீர் ஆவி எங்கு எப்படி உருவாகி எங்கெல்லாம் சஞ்சரித்து இப்போது இறுகித் தண்ணீராகி இங்குக்கொட்டுகிறது என்கிற விஷயங்கள் எவ்வளவுபேருக்குத் தெரியும்? அதேபோன்று மங்கு மங்கு என்று உடல் உழைப்பது ஸ்தூலமாகத் தெரிகிறது. அதனால்தான் எல்லாம் வந்து விட்டது என்கிற தீர்மானம் சரியன்று. எல்லாருடைய உழைப்பையும் உருப்படியாக்கியது பூமியின் சொந்தக்காரன். அவனது பொறுப்பு, அவனது பாடுகள், பொருட்செலவுகள், அவனது நல்வினைப் பயன் எல்லாம் சேர்ந்துதான் விளைவை உண்டாக்கியிருக்கின்றன. இத்துடன் சேர்ந்து முன் சொன்ன உழைப்புக்கும் ஓர் இடமுண்டு. வெறும் மனித உழைப்புக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதென்றால் பத்துஜோடி மாடுகளை விட்டால் விவசாயம் பண்ணி விளைவுகளைக் கொண்டுவந்துவிடும் என்று சொல்வதற்கு நிகர். அந்த உழைப்பை உருப்படியாக்க வேறு சக்திகள், அம்சங்கள் ஒன்று சேரவேண்டும். இந்தக் கருத்துக்களை நன்கு சிந்தித்துப் பாருங்கள்.

தீர்க்க சிந்தனை இல்லாத எதிர்காலத்தில்

என்ன கெட்ட விளைவுகளை இது கொண்டு வரும் என்று முன்கூட்டிச் சிந்திக்க இடலாத சாதாரண மேல்போக்கான சிந்தனைகள் இன்றைக்கு எவ்வளவு கெட்ட பலன்களை உருவாக்கிவிட்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பாருங்கள். கம்யூனிசம் கம்யூனிசம் என்று கூப்பாடு போடுகின்ற யாருக்குமே அதன் அடிப்படைக் கொள்கையே இன்றைக்குத்தெரியாது. தனி உடைமைகளைப் பொதுவுடமை ஆக்குவது என்பது அதன்பொருள். நாம்அனைவரும் கடவுளின் குழந்தைகள். கடவுளே இத்தனையும் ஆகியுள்ளார் என்கிற கொள்கை உண்மை. இதைப்புரிந்துகொள்ள எத்தகைய மனத்தூய்மை, மனத்தெளிவு வேண்டும். இதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர இன்னும் மேலான பண்பு, தியாகம், சுயநல மற்ற தன்மை வேண்டும். இந்த மனநிலையில் தான் கம்யூனிசம் சாத்தியம். திருடனைப் போலப் பணக்காரனிடத்தில் பலாத்காரமாகப் பிடுங்கிப் பங்கிட்டால் இன்றையபலன்தான் உண்டாகும். மானுட சுயமுயற்சி குன்றிப் போகும். உழைக்காத சோம்பேறிகள் உதவாக்கரைகள் ஆகிவிடுவார்கள்.மானுட அறிவு, சுறுசுறுப்பு, ஆயுள், ஆரோக்கியம், பண்பு, குணநலன், திறமை, நல்வினைப்பயன் இவைகளைப் பங்குபோட முடியாது. ஆனல் உதவாக்கரைகள் பொருளைமட்டும் பங்குபோட முன் வருவார்கள். திருட்டு, பொய், கொள்ளை, கொலை, அழித்தல் ஆகியவைகளை ஜனநாயகம், சுதந்தரம், மனித உரிமை இதைத் தவிர வேறு வழியில்லை (தங்கள் கருத்தை, கஷ்டங்களை அரசாங்கம், உலகம் இவைகளின் கவனத்திற்குக் கொண்டுவர) என்கிற சமாதானங்களில் உள்ளடக்கி அதற்கு ஒரு நியாயம் கற்பிப்பது இன்றைய தர்மானுஷ்டத்தின் அளவை ஆகும். இதனல் இன்றைய சமூக வாழ்க்கை கொடும் புலி வாழும் காடு நன்றே என்கிற நிலையை எட்டிக் கொண்டிருக்கிறது. பேய் அரசுபுரிந்தால் சாஸ்திரங்கள் பிணம் தின்னக் கூறும் என்று பாஞ்சாலியின் மூலம் பாரதியார் கதறுகிறர். உங்கள் வீட்டிலிருந்து பொரி கொண்டுவா எங்கள் வீட்டிலிருந்து உமி கொண்டு வருகிறேன். இரண்டையும் கலந்து ஊதிஊதிச் சாப்பிடுவோம் என்று சொன்னனும் ஒருவன். இது மேற்போக்காகப் பார்க்குமிடத்து, நல்ல எண்ணம் போன்றும், சமரசம் போன்றும் தோன்றுகிறது. ஆனல் உண்மை அப்படியா? ஒன்று உமி, மற்றொன்று பொரி. இரண்டையும் கலப்பானேன், ஊதிஊதிச் சாப்பிடுவானேன்? சிந்தியுங்கள், சிந்தியுங்கள். ஒருபொருளை உற்பத்தி பண்ணுகிற முயற்சியில் தேவைப்படுகிற பல அம்சங்களில் சரீர உழைப்பும் ஒன்று. சரீர உழைப்பை மட்டும் சிலாகித்து மற்ற அம்சங்களைப் புறக்கணித்தால் படிப்படியாக க்ஷீணதசை வந்துவிடும். உழைப்பு மிகப்பெரிய மூலதனம். அது இருந்தால் போதும், முன்னேற்றம் அடையலாம். அதே சமயம் உழைப்பைப் பற்றிய தவருன கொள்கையும் நமது முன்னேற்றங்களை எல்லாம் பாழ்படுத்திவிடும். உழைப்பு மற்ற அம்சங்களோடு சேர்ந்து பலன் தரவேண்டும். சேமிப்பு இல்லாத வாழ்வு உருப்படியாகாது. எல்லா வருமானங்களும், செலவழிக்கப்பட்டால், முதல் பெருக்கப்படாவிட்டால் பெருங் காரியம் எதையும் செய்யமுடியாது. எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய பல கெட்ட விளைவுகளுக்கு ஈடுகொடுக்க முடியாது. ஆகவே உழைத்து உயர் வாழ்வு வாழ்வோம். நம்மிலும் மிக்க உழைப்பாளிகளின் முன்னேற்றத்தைப் பார்த்துப் பொருமைப்படாது திருப்தியுடன் வாழ்வோம். உயிர் வாழத் தேவையான உழைப்பையே யோகசாதனம் ஆக்குவோம். அதன் மூலமே உலகம் பெரு நன்மையடையும். நாம் நன்கு சிந்திப்போம். தனி நலனைவிடப் பொதுநலன் முக்கியம். பொதுநலனில் தனி நலன் அடங்கியிருக்கிறது. பொது நலனுக்கு உழைப்பது என்பது யக்ஞம் ஆகிறது. கடவுள் யக்ஞசொருபம் ஆகிறர். கடைப்பிடிக்கப்பட்டு வரும் நற்குணங்களுக்கு அனுஷ்டானத்தில் உள்ள தெய்வ குணங்களுக்கு யக்ஞம் என்று பெயர். யக்ஞம் என்றல் வெறும் அக்னி வளர்த்தல், அக்னியில் நெய் சொரிதல் போன்ற சடங்குகள் அல்ல. வெறும் வாய்ப் பேச்சு அன்று. தேவாராதனையாகச் செய்யும் செயலே யக்ஞம் ஆகும். ஆகவே நாம் உண்மையாகவே மனம் திருந்தியவர் ஆவோமாக. அதனல் சமூகம் பெரு நன்மை அடையும்.

ஆத்ம போதம்

(திரு V. S. நரசிம்மன்)

ஆச்சாரியர் சங்கரரால் இயற்றப்பட்ட 'ஆத்ம போதம்' என்ற கிரந்தம் பிரகரணம் என்ற பிரிவில் அடங்கும். சங்கரபகவத்பாதர் வேதாந்தத் தத்துவங்களை அனைவரும் எளிதில் அறியும் பொருட்டு இத்தகைய சிறு நூல்கள் பல எழுதி அருளினர். பிரம்மசூத்திரம், உபநிஷத்துக்கள், பகவத்கீதைஆகிய பிரஸ்தானத்ரயத்திற்கு அவர் எழுதிய உரையை (பாஷ்யத்தை) அனைவரும் படித்துணரும் திறம் படைத்தவர் அல்லர். முறையாகச் சாஸ்திரப் படிப்புப் பயின்றோரே அவற்றை அனுபவித்துப் படிக்க இயலும். மக்களில் பெரும்பாலோர் அதற்கேற்ற நுண்ணறிவோ, காலமோ வாய்க்கப்பெற்றவர் அல்லர். எனவே பெரும்பான்மையோர் பயனடையும் பொருட்டே 'பிரகரண கிரந்தங்கள்' இயற்றப் பெற்றுள்ளன. . சாஸ்திரங்களில் கூறப்பட்ட தத்துவங்களில் முக்கியமானவற்றைக் குறிப்பிட்டுக் காட்டி (ஏகதேசம்) வேதாந்த முடிபுகளையே இறுதியில் வலியுறுத்தும் நூல் பிரகரணம் எனப்படும். இந்த இலக்கணத்தைச் சுலோகம் ஒன்று வரையறுக்கின்றது.

शास्त्रैक देश संवद्धं शास्त्रकार्यान्तरे स्थितम् ।
आहुः प्रकरणं नाम ग्रन्थभेदं विपश्चितः ॥

தத்துவத்தை விளக்க எழுதப்பெறும் நூலின் தன்மையையும் நமது சாஸ்திரம் நெறிப்படுத்தியுள்ளது. பிரபந்த சதுஷ்டயம்-நூலிற்கான நான்கு இலக்கணங்கள்-என்பதை அனுசரித்தே கிரந்தம் இயற்றப்படவேண்டும். நமது முன்னோர்கள் விஞ்ஞானக் கண்ணோட்டத்துடனும், சீரிய, வரையறுக்கப்பட்ட நியதியையும் படைத்திருந்தனர் என்பதை இத்தகைய விதி முறைகள் புலப்படுத்துகின்றன. பிரபந்த சதுஷ்டயம் யாவை? 1) वस्तु-வஸ்து. விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயம். நூலின் திரண்ட கருத்து. 2) संबन्ध-சம்பந்தம். எடுத்தியம்பப்படும் கருத்துக்களின் இடையே காணப்படும் தொடர்பு, கோர்வையாக, படிப்படியாக, தர்க்கரீதியாக விஷயம் விளக்கப்படவேண்டும். 3) अधिकारि-அதிகாரி. குறிப்பிட்ட நூலை எந்த நிலையில் உள்ளவர்கள் படித்தால் பயன் பெறலாம். மாணவனுக்கு வேண்டிய அடிப்படைத் தகுதிகள் யாவை? 4) प्रयोजन—பிரயோஜனம். நூலினைக் கற்பதால் மாணவனுக்குக் கிடைக்கும் பயன்.

ஆத்ம போதம் என்ற நூலில் இந்த நான்கு பகுதிகளும் செவ்வனே கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக முதல் சுலோகத்தில் 'அதிகாரி' 'பிரயோஜனம்' என்ற இரண்டுமே விளக்கப்படுகின்றன.

तपोभिः क्षीणपापानां शान्तानां वीतरागिणाम् ।
मुमुक्षूणाम् ऽपेक्ष्योऽयमात्मबोधो विधीयते ॥

तपोभिः (தபோபி:) தவத்தில் ஈடுபட்டுள்ளோர் क्षीणपापानां (க்ஷீணபாபானும்) பாவம் குறைந்தவர்கள், शान्तानां (சாந்தானும்) மன அமைதி உடையோர், वीतरागिणाम् (வீதராகிணும்) பற்று அற்றவர்கள், मुमुक्षूणाम् (முமுக்ஷுணும்) முக்தி பெறவேண்டும் என்ற நாட்டம் கொண்டோர், अपेक्ष्य (அபேக்ஷ்ய) ஆகியோரைக் குறித்து, अयं (அயம்) இந்த आत्मबोधः (ஆத்மபோத:) ஆத்ம போதம் (என்ற நூல்) विधीयते (விதீயதே) வகுக்கப்படுகின்றது.

"தவம் செய்து தங்கள் பாவத்தைக் குறைத்துக் கொண்டோர், மனச் சாந்தியுடன் இலங்குபவர்கள், பற்றற்ற மனம் உடையோர், முக்தி எய்த வேண்டும் என்ற பெரு நாட்டம் உடையோர் ஆகியோரின் பொருட்டு ஆத்ம போதம் என்ற இந்த கிரந்தம் இயற்றப்படுகின்றது."

இந்த சுலோகத்தில் ஆசாரியர் சீடனின் தகுதியை, சரியான அதிகாரியை—அழகாகக் குறிப்பிடுகின்றார். ஆத்ம போதம் என்ற நூலைப் படிக்க விழையும் மாணவன் தவத்தில் மேலோங்கியவனாக இருக்கவேண்டும். தவம் என்ற சொல் 'तप् தப்' என்ற வினைச் சொல்லை அடிப்படையாகக் கொண்டுள்ளது. 'உருக்குதல்' என்று அதற்குப் பொருள். தவம் செய்து, பொன்னை உருக்குதல் போல் தன்னையே உருக்கித் தீய, கீழான இயல்புகளைச் சுட்டெரித்து, நல்ல பண்பாடு அடைந்தோரே வேதாந்த விசாரத்திற்கு, ஆத்ம போதத்திற்குத் தகுதி உடைய அதிகாரிகள் ஆவர். தவத்தின் மூவகை இலக்கணத்தைப்

பகவத்கீதையில் காணலாம். (அத்தியாயம் 18, ஸ்லோகம் 14, 15, 16).

(*a*) சரீர தவம்: தேவர்கள், அந்தணர்கள், குருமார்கள், அறிஞர்கள் ஆகியோரைப் போற்றுதலும், வழிபாடு செய்தலும்; அகம், புறம் ஆகியவற்றில் தூய்மை, நேர்மை, பிரம்மச்சரியம், கொல்லாமை ஆகிய நற்பண்புகள் காயத்தால் செய்யப்படும் தவம் ஆகின்றன.

(*b*) வாக்தவம்: மற்றவர் மனம் நோகும்படி பேசாது இருத்தல், உண்மையைப் பேசுதல், மனம் மகிழும்படி கூறல், நலந்தரும் சொல்லையே பேசுதல், தினந்தோறும் வேதம், சாஸ்திரம் படித்தல் ஆகியவை வாக்கினல் செய்யப்படும் தவம் ஆகின்றன.

(*c*) மானச தவம்: மனம் அமைதியோடு இருத்தல், அன்போடு இருத்தல், மௌனம், தன்னடக்கம், இதய சுத்தி ஆகியவை மனதினல் செய்யப்படும் தவம் ஆகின்றன.

இத்தகைய தவ வாழ்வை மேற்கொண்ட சான்ருேர் தங்கள் நடைமுறை வாழ்வில் புண்ணிய கருமங்களேயே செய்வர். தங்களேக் கீழ் நிலேக்குத் தள்ளும் செயல்களே மேற்கொள்ள மாட்டார்கள். நமது பண்பைப் பாழ்படுத்தும் செயல்கள் பாவச்செயல்கள் ஆகின்றன. ஆகவே क्षीणपापाः பாவத்தைக் குறைத்தவர்கள் என்ற தொடர் சீலம் நிறைந்த பெரியோரைக் குறிக்கின்றது. கர்மத்தின் தன்மையை உணர்ந்து, செய்யும் கர்மம் தன்னேப் பந்தத்திற்கு உட்படுத்தாத வண்ணம் அதனேக் கர்ம யோகமாக மாற்றி, அதன் விளேவுகளால் பாதிக்கப்படாத கர்மயோகிகளும், தவசிரேஷ்டர்களுமே அதிகாரிகள் என்பது புலப்படுகின்றது.

சாதனேயின் துவக்கத்தில் இருப்பவரது மனம் எளிதில் சஞ்சலம் அடையும்; தியானத்தில் அமரும்போதுதான் அவர்கள் சிந்தனே தறிகெட்டு ஓடும். இப்படி அவதிப்படுவதற்குப் பதிலாக, தியானம் செய்யாது இருப்பதேமேல் என்று கருதும் அளவிற்கு மனம் படாதபாடு படுத்தும். தியான முறையில் பலகாலம் பயின்ருேர் தியானத்தின் மூலம் விவரிக்க இயலாத அமைதியும், ஆனந்தமும் பெறுவர். அவர்கள் மனநிலேயை शान्तानां சாந்தானும் என்ற சொல் குறிக்கின்றது.

வேதாந்த தத்துவங்களேப் பயின்று தம்முடைய நடைமுறை வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி வாழ்வோர் ஆசையென்னும் புயல்காற்ருல் அலக்கழிக்கப்படமாட்டார்கள். தங்களுடைய தேவைகளேக் குறைத்து, எளிய வாழ்க்கையை வாழ்ந்து உலக நாட்டம் அடியோடு அகற்றப்பட்டுச் சாந்தத்துடன் இலங்குவர். வேண்டத்தகாத விருப்போ, அந்த எண்ணம் ஈடேருவிடில் விளேயும் வெறுப்போ அவர்களிடம் காணப்படமாட்டா. எனவே அவர்களே वीतरागिणाम् (வீதராகிணும்) 'ஆசைகள் அற்றவர்கள்' என்று ஆசாரியர் குறிப்பிடுகின்ருர்.

இதுவரை குறிப்பிட்ட நற்பண்புகள் அனேத்தும் வாய்க்கப் பெற்ற சீடனேக் காண்பது மிகவும் அரிதே. ஆயினும் இத்தகைய தகுதிகள் மட்டும் போதா; ஞானத்திற்கு மிகவும் இன்றியமையாதது मुमुक्षुत्वं முமுக்ஷுத்வம் என்ற குணம் ஆகும்.

ஹிந்து பண்பாட்டிற்கும், மேனுட்டுத்தத்துவ முறைக்கும் உள்ள அடிப்படையான வித்தியாசத்தை நாம் உணரவேண்டும். மேனுட்டில் தத்துவ ஞான ஆராய்ச்சி, விஞ்ஞான ஆராய்ச்சியினின்றும் வேறுபட்டதன்று. Pursuit of knowledge உண்மையை உணர்வதே இவற்றின் நோக்கம். தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் குறிப்பிட்ட சாதனே நெறியினே மேற்கொள்ளவேண்டும் என்ற நியதி கிடையாது. ஆனல் நமது பண்பாட்டின்படி வேதாந்தம் படித்தால் மட்டும் போதாது; அதற்கேற்ப வாழ வேண்டும். சாஸ்திர ஆராய்ச்சி நமது அறிவைக் கூர்மைப்படுத்துவதற்காக மட்டும் அன்று (not an intellectual gymnastics). ஆத்ம ஞானத்தை அடையப் பயன்படும் நூலறிவே கொள்ளத்தக்கது. விவேக சூடாமணியில் ஆசிரியர் கூறுகின்ருர்:

वाग्वैखरी शब्दझरी शास्त्रव्याख्यान कौशलम् ।
वैदुष्यं विदुषां तद्वत् भुक्तये न तु मुक्तये ॥

"வாக்குச்சாதுர்யம், அலங்காரமாகச் சொற்களேக்கையாளும் திறமை, சாஸ்திரங்களே விமர்சனம் செய்யும் புலமை ஆகியவை 'முக்திக்கு' ஒருவனே எடுத்துச் செல்லமாட்டா. அவை உணவை வேண்டுமானுல் அவனுக்குக்கொடுக்கும்."

ஆகவே முக்தி அடையவேண்டும் என்ற

வேட்கை 'முமுக்ஷுத்வம்' தலையாய இலக்கண மாக இந்தச் சுலோகத்தில் குறிப்பிடப்படுகின் றது. 'சாதன சதுஷ்டயம்' என்று வேதாந்த அதிகாரிக்கு நான்கு இலக்கணங்கள் கூறப்படு கின்றன. நித்யாநித்ய வஸ்து விவேக: இஹாமுத்ரபலபோக விராக:, ஶமதமாதி ஷட்ஸம்பத் முமுக்ஷுத்வம் வாசுதேவ மன னம் என்ற நூல் முமுக்ஷுத்வத்தை இவ்வாறு வரையறுக்கின்றது: தீப்பற்றி எரியும் வீட்டில் இருக்கும் ஒருவன் மனைவி, மக்கள், செல்வம் ஆகிய அனைத்தையும் விட்டு வெளியேறித் தன்னுயிரைக் காக்க எவ்வாறு துடிப்பானே அதுபோன்றே பிறப்பு இறப்பு என்னும் சக்க ரத்தில் சிக்காது சம்சாரக் கடலைக் கடக்க வேண்டும் என்ற வேட்கையே முமுக்ஷுத்வம் ஆகும்.

இதுவரை விளக்கம் தரப்பட்ட சொற்கள் அனைத்தும் அதிகாரியின் லட்சணத்தைக் குறிப்பவைகளாக அமைந்துள்ளன என்பதைக் கண்டோம். 'தகுதி வாய்ந்த அதிகாரிகளை உத்தேசித்து ஆத்ம போதம் என்ற நூலை எழுதுகின்றேன்' என்று ஆசாரியர் முதல் சுலோகத்தில் நூலின் பெயரைக் குறிப்பிடு கின்றார். கூர்ந்து நோக்குமிடத்து 'ஆத்ம போதம்' என்ற சொல் நூலை மட்டுமின்றி, இதனைப் படிப்பதால் விளையும் பயனையும்-ப்ரயோஜந, பிரயோஜனம் – சுட்டிக் காட்டுவதைக் காணலாம். இந்தக் கிரந்தத்தைச் சரியான முறையில் குருவின் மூலம் பாடம் கேட்டு, சிந் தித்து, தெளிவுபெற்று அதன்மூலம் அடையும் பயனே ஆத்மாவைப் பற்றிய ஞானமாகும். எனவே கிரந்தத்தின் பெயர் அது புகட்டும் மெய்ஞ்ஞான அறிவிற்கும் பொருந்துகிறது.

பழனியாண்டவர் மலையில் ஐக்கிய வழிபாடு

திரு S. விசுவநாதன் அவர்கள் பிரான்ஸில் இருபது ஆண்டுகள் ஆசிரிய ராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றபின் பாண்டிச்சேரியில் வசித்து வந்து 1975ஆம் ஆண்டு காலமாகிவிட்டார். அவர் தம் வாழ்நாளில் சம்பாதித்த சொத்து முழுதை யும் சத் காரியங்களுக்குப் பயன்படுத்தத் தீர்மானம் செய்து தபோவனத்திடம் ஒப்படைத்தார். அவர் ஒப்படைத்த சொத்திலிருந்து அவர் விருப்பப்படி கல்விக் காகவும், தர்மசக்கர சகாய சந்தாவுக்காகவும் தபோவனம் செலவு செய்துகொண் டிருக்கிறது. பழனியில் ஆண்டுதோறும் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமிக்கு அபிஷேக ஆராதனையும், பக்தர்களுக்கு அன்னதானமும் செய்யவேண்டுமென்பது அவரு டைய விருப்பங்களுள் ஒன்றாகும். தபோவனம் சென்ற ஆண்டு முதல் அவருடைய இவ்விருப்பத்தை நிறைவேற்றி வருகிறது. இவ்வாண்டு டிசம்பர் மாதம் 1ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று திருப்பராய்த்துறை ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுலப்பள்ளி எட்டாம் வகுப்பு மாணவர்களையும், திருப்பராய்த்துறை விவேகா னந்த உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு மாணவ மாணவியர்களையும், திருவேடகம் விவேகானந்த மேல்நிலைப்பள்ளி மாணவர்களையும் பழனிக்கு அழைத்துச் சென்று ஸ்ரீ தண்டாயுதபாணி சந்நிதிமுன் ஐக்கிய வழிபாடு செய்ய ஏற்பாடாகியுள்ளது. அன்று ஸ்ரீ தண்டாயுதபாணிக்கு அபிஷேகமும் ஆராதனையும் நிகழும். உச்சிக்கால பூஜைக்குப் பின் A. சேனாபதி M. P. நிர்வாகத்திலுள்ள சங்கராண்டாம்பாளையம் பட்டக்காரர் மடத்தில் பக்தர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படும். அன்று நிகழும் ஐக்கிய வழிபாட்டிலும், சமாராதனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்பர் களும் தாய்மார்களும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். பகல் 10-30 மணியிலி ருந்து 11-30 மணிவரையில் பழனியாண்டவர் சந்நிதியில் ஐக்கியவழிபாடு நிகழும்.

குறிப்புகள்

திருச்செந்தூரில் கந்தர்சஷ்டி.

கலியுகவரதன் என்று கார்த்திகேயன் அழைக்கப்படுகின்றார். சிவனுடைய ஒளிப் பிழம்பில் அவர் தோன்றியதால் அவர் சிவனாரின் அம்சமாவார். சுப்பிரமணியருக்கு வள்ளி, தெய்வயானை என்ற இரண்டு சக்திகள் இருக்கின்றார்கள். குகன் என்றும், முருகன் என்றும், குமரேசன் என்றும், ஷண்முகன்என்றும், வேலாயுதன் என்றும், தண்டபாணி என்றும் அவருக்கு வேறு பெயர்களும் அமைந்திருக்கின்றன. மயில் அவருக்கு வாகனமாகவும், சேவல் அவருக்குக் கொடியாகவும் அமைந்திருக்கின்றன. மயிலும் சேவலும் அகங்காரத்துக்கும் மமகாரத்துக்கும் சின்னங்களாகின்றன. அகங்காரமும், மமகாரமும் மனிதனைக் கீழ்மைப் படுத்துகின்றன. ஆனால் அகங்காரம் மமகாரங்களின் கொடுமைகளைக் கொன்று வீழ்த்தியவனுக்கு அவை அழகு செய்கின்றன. அகங்கார, மமகாரங்கள் சூரபத்மனென்னும் அசுரனாக வடிவெடுத்தன. சுப்பிரமணியர் சூரபத்மனைக் கொன்றபொழுது அவன் மயிலும் சேவலுமாக வடிவெடுத்து வந்து சுப்பிரமணியருக்குத் தொண்டு செய்யும் பணியை ஏற்றான். சுப்பிரமணியர்போன்று தன்னிடத்திலுள்ள அகங்காரம் மமகாரங்களைக் கொன்றவனுக்கு அவை கொடுமை செய்வதற்குப் பதிலாக அழகு செய்கின்றன. முருகக் கடவுள் அன்று சூரசம்மாரம் செய்ததுபோன்று இன்று நாம் ஒவ்வொருவரும் சூரசம்மாரம் செய்தாகவேண்டும். சூரனைச் சம்மாரம் செய்த நாள் கந்தர் சஷ்டி நாளாகும். ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதம் தீபாவளிக்கு அடுத்து வரும் சஷ்டியாக அந்நாள் அமைகிறது.

கந்தர்சஷ்டியைச் சுப்பிரமணியர் ஸ்தலங்களிலெல்லாம் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் திருச்செந்தூரிலும், பழனி மலையிலும், திருப்பரங்குன்றத்திலும், இலங்கையில் யாழ்ப்பாணத்துக்கருகிலுள்ள கதிர்காமத்திலும், உடுப்பியிலும் கந்தர்சஷ்டி விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. சிறப்பாகத் திருச்செந்தூரில் கந்தர்சஷ்டி விரதம் ஆயிரக்கணக்கான மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

கந்தர்சஷ்டி விரதம் ஆறுநாட்கள் அனுஷ்டிக்கப்படுகிறது. கந்தர்சஷ்டியின் ஆறுநாட்களும் சிலர் உணவு உட்கொள்வதில்லை. துளசியும், எலுமிச்சைப்பழரசமும், தீர்த்தமும் உட்கொண்டு ஆறு நாட்கள் செந்திலாண்டவனை வழிபட்டு வருகிறார்கள். இன்னும் சிலர் ஒருநாளைக்கு ஒருவேளை மட்டும் உணவை ஏற்றுக்கொண்டு ஆறு நாட்களையும் வழிபாட்டில் கழித்து வருகிறார்கள். திருச்செந்தூரில் இங்ஙனம் ஆறு நாட்கள் கந்தர்சஷ்டி விரதத்தை ஆயிரக்கணக்கான மக்கள் அனுஷ்டித்து வருகிறார்கள். உபவாசம் என்றால் சமீபத்தில் இருப்பது என்பது பொருள். கந்தர் சஷ்டி விரதத்தில் அம்மக்கள் செந்தூர்ஆண்டவன் சமீபத்திலேயே இருந்து ஆறு நாட்களையும் அவருடைய வழிபாட்டில் கழித்து வருகிறார்கள். ஆலயத்தைச் சுற்றிலும் உள்ள பிரகாரங்களில் பலர் தங்கிக்கொள்கின்றார்கள். ஆலய நிர்வாகத்தினரால் கட்டப்பட்டுள்ள விடுதிகளிலும், மண்டபங்களிலும்விரதம் இருப்பவர்கள் தங்குகிறார்கள். ஆறுநாட்களும் எளிய தூய வாழ்க்கைவாழ்ந்து வருகிறார்கள். படுப்பதற்கு ஓலைப்பாயைப் பயன்படுத்துகிறார்கள். பரந்தகடலில்குளித்து உடலைத்தூய்மைப்படுத்திக்கொள்கிறார்கள். உள்ளத்தில் செந்திலாண்டவனை நினைத்து உள்ளத்தைத் தூய்மைப் படுத்திக்கொள்கிறார்கள். பலர் குடும்பசகிதமாகவிருந்து குடும்பத்திலுள்ள அனைவருமே தங்களைத் தூய்மைப்படுத்திக்கொள்கிறார்கள்.

ஆலயத்தில் கந்தர்சஷ்டியின் ஆறுநாட்களும் ஆராதனை காலை மூன்றரை மணிக்கு ஆரம்பித்து இரவு பத்துமணி வரையிலும் நிகழ்ந்து வருகின்றது. காலை மூன்றரை மணிக்கு மூல ஸ்தானம் திறக்கப்படுகிறது. முருகன் பள்ளியெழுச்சி பக்தியோடு அன்பர்களால் பாடப்படுகிறது. வள்ளியம்மையின் சந்நிதியின்முன் அமர்ந்து பள்ளியெழுச்சி பாடுபவர்களின் உள்ளத்தில் ஆன்மீக உணர்வு தலையெடுப்பதுபோன்று ஆங்கு அமர்ந்து கேட்டுக்கொண்டிருக்கின்ற பக்தர்கள் உள்ளத்திலும் ஆன்மீக உணர்வு தலை

யடுக்கிறது. அதிகாலை மூன்றரை மணியிலிருந்து நாலரைமணி வரையிலும் பள்ளியெழுச்சி பாடுவதும், செந்திலாண்டவனைப்பள்ளி அறையிலிருந்து மூலஸ்தானத்துக்குப் பக்தி பாடலோடு கொண்டுபோவதும், முருகனுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் மந்திரம் சொல்லிச் செய்வதும் மனதைத் தூய்மைப்படுத்துவதற்குச் சிறந்த உபாயங்களாக அமைந்திருக்கின்றன. அதன் பிறகு அபிஷேக ஆராதனையும், யாகசாலை பூஜையும் அமைத்திருக்கிறார்கள். அப்பூஜா முறைகள் மக்களுடைய உள்ளத்தை முருகன்பால் திருப்பி விடுகின்றன. நண்பகல் ஒரு மணிக்கு யாகசாலை பூஜை முடிந்ததும் ஜயந்திநாதனைச் சப்பரத்தில் வைத்து நாதஸ்வர இன்னிசையுடனும், அருணகிரிநாதர் இயற்றிய "வீரவாள் வகுப்பு, வேல் வகுப்பு" பாட்டுக்களுடனும் பிரகாரத்தில் பவனிவரும் காட்சி உள்ளத்தை உருக்குவதாக இருக்கிறது. பக்தி உணர்வோடு பவனி வந்து சந்நிதியின் நேர் உள்ள வெளி மண்டபத்தில் சப்பரத்துடன் ஜயந்திநாதனை எழுந்தருளப் பண்ணுகிறார்கள். அப்பொழுது நான்கு திசைகளிலும் மக்கள் கூட்டம் நின்று கொண்டு முருகனுடைய நாமங்களைச் சொல்லி தீபாராதனையைத் தரிசிக்கும் காட்சி உண்மையிலேயே உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் தெய்வீகஉணர்வைத் தட்டி எழுப்புகிறது. அப்பொழுது எங்குப் பார்த்தாலும் பக்தர்கள் நிறைந்திருப்பது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. கடலில் அலைகள் எங்கும் எழுந்திருப்பது போன்று கடற்கரையில் பக்தர்கள் தலைகள் இருப்பதைக் காணலாம். இக்காட்சியைக் காண்பவர்கள் "இதென்ன அலையா! தலையா!" என்று சொல்லி ஆச்சரியப்படுகின்றார்கள். கந்தர்சஷ்டியின் ஆறுவது நாளாகிய சூரசம்மாரத்தன்று கடற்கரை முழுவதும் பக்தர்களுடைய தலைகளாக இருக்கும் என்று அன்றைய கூட்டத்தை விமர்சனம் செய்கிறார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர்பகவானும், பக்தர்களும், பாகவதமும் சாமான்யமானவைகள் அல்ல என்று சொல்லுகின்றார். பக்தர்களைக் காண்பது பகவானைக் காண்பதற்கு நிகர் என்று சொல்லுகிறார். திருச்செந்தூரில் கந்தர்சஷ்டி விரத ஆறுநாட்களும் பகவானையும், பக்தர்களையும், பகவத் பெருமையையும் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருக்கலாம்.

மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றையும் தூய்மைப்படுத்துவதே தவமாகும். சரீரத்தை இறைவனை வணங்குதல் என்னும் செயலில் ஈடுபடுத்தும் பொழுது அது சரீர தவமாகும். கடலில் நீராடி திருச்செந்தூர் ஆலயத்தின் வெளிப் பிரகாரம் முழுவதையும் அங்கப்பிரதட்சணமாகச் சரீரத்தால் உருண்டு வழிபாடு செய்கிறவர்கள் நூற்றுக்கணக்காக இருக்கிறார்கள். காலையில் ஆறரை மணிக்கு இவ்வழிபாடு ஆரம்பித்து ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கு அங்கப்பிரதட்சணமாக வரும் காட்சி அருள் காட்சியாக அமைந்திருக்கிறது. சரீரத்தை முற்றும் மறந்து முருகனுடைய சிந்தனையில் முருகனுடைய விபூதியால் மேனி முழுவதும் பூசப்பட்டு அங்கப்பிரதட்சணம் செய்கின்றவர்கள் சரீர தபஸ் பண்ணுகின்றார்கள். முருகனுடைய பெருமையைப் பாடியும் முருகனுடைய நாமங்களைச் சொல்லியும் அச்சரீர தபஸ் செய்கின்றவர்களைப் பக்தர்கள் தொட்டும், பார்த்தும் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்கிறார்கள்.

இவ்வாண்டு வாக்கு மயமான தபசுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஓம் நமோ சரவண பவாய என்ற மந்திரத்தை ஆயிரக்கணக்கான பக்தர்கள் சேர்ந்து ஜபம் பண்ணினார்கள். இது வாக்கு மயமான தவமாகிறது. ஆலயத்தின் உள்ளும் புறமும் ஒலிபெருக்கி அமைத்து வைத்திருந்தமையால் ஓரிடத்தில் செய்த ஜபம் ஆலயத்தின் உள்ளும் புறமும் எங்கும் 'ஓம் நமோ சரவணபவாய' என்ற அருள் ஒலி மயமாகவிருந்தது. இந்த ஜபயக்ஞம் காலையில் ஒருமணி நேரமும், மாலையில் ஒரு மணி நேரமும் நிகழ்ந்தது.

விரதம் அனுஷ்டிக்கிறவர்கள் பலர் மௌன விரதம் இருந்தார்கள். மற்றவர்கள் பகவத் சிந்தனையில் ஈடுபட்டிருந்ததனால் பக்தர்கள் அனைவரும் மனத்தினாலும் தவம் செய்தவர்களாகிறார்கள். சில நிமிடங்கள் தியானத்துக்கும் ஏற்பாடு பண்ணினால் அது நல்ல மனோதவமாகும். ஒரு குறிப்பிட்ட நேரம் எல்லா இடங்களிலும் உள்ள பக்தர்கள் நிமிர்ந்து உட்கார்ந்து நெஞ்சத்தில் முருகனை

நினைத்து, முருகச் சிந்தனையில் சில நிமிடங்கள் மூழ்கி இருப்பார்களானால் ஆங்கு அருள் பன்மடங்கு ஓங்கும் என்பது திண்ணம். இப்படி நாள்தோறும் அமர்ந்து தியானம் செய்வதற்கு வழிவகுப்பார்களானால் அது சிறந்த வழிபாடாக அமையும்.

இங்ஙனம் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றையும் தவத்தில் ஈடுபடுத்திச் சஷ்டிவிரதம் இருப்பவர்கள் தங்களைப் பண்படுத்துகிறார்கள். சஷ்டியின் ஆறுநாட்களும் சிரத்தையோடு இத்தகைய தவத்தில் ஈடுபட்டு வருபவர்கள் தங்களிடத்திலுள்ள அசுர இயல்பை அழித்துத் தள்ளுபவர்கள் ஆகிறார்கள். தவத்தில் ஈடுபடுகிற அவர்களுக்கு ஐம்பொறிகளும் மனதும் ஆற்றலும் தெளிவும் உடையனவாகத் திகழ்கின்றன. அப்பொழுது அவர்களிடத்தில் அருள் உணர்வு ஓங்குகிறது. அவ் அருள் உணர்வுதான் முருகக்கடவுள் ஆகிறார். ஆறுவது நாளாகிய கந்தர்சஷ்டியன்று முருகன் சூரனைச் சம்ஹாரம் செய்ததுபோன்று ஆறு நாட்கள் சிரத்தையோடு விரதம் இருப்பவர்கள் அருள் உணர்வு என்னும் குமரனைப் பெற்றுத் தங்களிடத்தில் உள்ள அசுர இயல்பு என்னும் சூரனைச் சம்ஹாரம் செய்தவர்கள் ஆகிறார்கள்.

முருகனுடைய பெருமைகளையும், வரலாறுகளையும், தத்துவங்களையும் சொற்பொழிவின் வாயிலாக மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சொற்பொழிவாளர்கள் மக்களுடைய மனதைத் தெய்வத்தின்பால் திருப்புவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பது அவசியம். உலக வியவகாரங்களை அவர்களுக்கு ஞாபகப் படுத்துவது விரதமிருப்பவர்களுடைய மனதின் பக்குவத்தைக் கலைப்பதாகிறது. எனவே சொற்பொழிவாளர்கள் தெய்வீக விஷயங்களையே மக்களுக்கு இனிய முறையிலும்,எளிய முறையிலும், தெளிவான முறையிலும், கவர்ச்சிகரமான முறையிலும் எடுத்துச் சொல்லி மக்களுடைய உள்ளத்தின் பக்குவத்துக்குத் துணை புரியவேண்டும்.

பக்தர்கள் இன்னும் சில சீர்திருத்தங்களைச் செய்துகொள்வதில் சிரத்தை காட்டுவார்களானால் ஆறுநாட்கள் விரதமிருப்பதில் திருச்செந்தூரில் அருள்நிலையை வளர்ப்பதோடு, தங்களிடத்திலும் அருள் சக்தியை ஓங்குவிப்பதில் கருத்தைச் செலுத்தியவர்களாவார்கள்.

விரதகாலத்தில் ஆலயப் பிரகாரத்துக்குள் தங்கியிருக்கும் பக்தர்கள் பிரகாரத்துக்குள் வழிபாட்டு நிகழ்ச்சிகள் நடக்கும்பொழுது படுத்து உறங்குவதைத் தவிர்க்கவேண்டும். ஆலயத்தின் உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்வதைத் தங்கள் கடமையாக உணரவேண்டும். வழிபாட்டு நேரங்களில் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாது அமைதியோடு நின்று சுவாமி தரிசனம் செய்யப் பழகிக்கொள்ளவேண்டும். இத்தகைய பாங்கில் வழிபாட்டுமுறை சீர்திருந்தி திருச்செந்தூரில் ஆண்டுதோறும் இக் கந்தர்சஷ்டி விழாச் சிறப்புடன் நிகழ்ந்து உண்மையான ஆன்மீக உணர்வு மக்களிடத்தில் ஓங்கிவர எல்லாம் வல்ல முருகப்பெருமான் அருள்புரிவாராக!

செய்திகள்

நிகழ்பவை

சேலம் ஸ்ரீ சாரதாகல்லூரியில் நவம்பர் மாதம் 21 சனி, 22 ஞாயிறு, 23 திங்கள் ஆகிய மூன்று நாட்களிலும் சிறப்பு வழிபாடு நிகழும். இவ்வழிபாட்டில் அன்பர்களும் தாய்மார்களும் மூன்று நாட்களிலுமோ அல்லது வசதிப்படும் நாட்களிலோ கலந்துகொள்ளலாம். அன்பர்களும், தாய்மார்களும் தங்குவதற்கு இடவசதி தனித்தனியாக அமைக்கப்பெறும். உணவுக்காக நாள் ஒன்றுக்கு ரூபாய் ஆறு வீதம் நேரில் செலுத்தலாம். கலந்துகொள்ள விரும்புபவர்கள் கலந்துகொள்ளும் நாட்களைக் கடிதத்தின்மூலம் முன்கூட்டியே திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்துக்குத் தெரிவிப்பது நல்லது. நிகழ்ச்சிமுறை ஐப்பசி மாதத் தர்மசக்கர இதழ் அட்டையின் இரண்டாம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

13-12-81 ஞாயிற்றுக்கிழமை சேலம் ஜில்லா மேட்டூர் தாலுகா சின்னத்தண்டா ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுல உயர்நிலைப்பள்ளியில் நிகழும் ஆண்டு விழாவில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் கலந்துகொண்டு பேசுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை பிரசார விலை ரூ. 16-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ... 6-00
இராமாயணம் ,, ... 5-00
தினசரி தியானம் ,, ... 4-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ,, ... 5-50
கர்மயோக விளக்கம் ... 10-00
ஞானயோக விளக்கம் ... 8-00
ராஜயோக விளக்கம் ... 8-00
பக்தியோக விளக்கம் ... 6-00
பரமஹம்சரின் பெருமை ... 6-00
விவேகானந்த விவரணம் ... 4-00
விவேகானந்த உபநிஷதம் ... 4-00
கடவுளின் வடிவங்கள் ... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I ... 3-50
அனுஷ்டான வேதாந்தம் ... 3-00
எதிர்கால இந்தியா ... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் ... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ... 2-50
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம் ... 2-00

தாயுமானவர் இயற்றிய

கருணாகரக் கடவுள் விரிவுரை ... 3-50
பரிபூரணானந்தம் ௸ ... 3-00
சின்மயானந்த குரு ௸ ... 3-00
ஆனந்தமானபரம் ௸ ... 3-00
சுகவாரி ௸ ... 3-00
மௌனகுரு வணக்கம் ௸ ... 3-00
எங்கும்நிறைகின்றபொருள் ௸ ... 2-50
பரசிவ வணக்கம் ௸ ... 1-00

பஜனைப் பாடல்கள் ... 2-50
கண்ணன் என்னும் கடவுள் ... 2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்) ... 1-50
விபீஷணன் சரணாகதி ௸ ... 1-50
பரமஹம்சர் பாமாலை ... 1-50
அமரநாத யாத்திரை ... 1-25
சந்நியாசி ... 1-25
இறைவணக்கம் ... 1-00
குழந்தைகளின் களிக்கூடம் ... 1-00
சகோதரி நிவேதிதை ... 1-00
காயத்ரீ ... 1-00
இராவண தத்துவம் ... 1-00
வாலி மோட்சம் (நாடகம்) ... 1-00
தவப்புதல்வர்கள் ,, ... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி ,, ... 1-00
தானவீரன் கர்ணன் ,, ... 1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம்... 1-00
பிரஹ்லாதன் ,, ... 1-00

மார்க்கண்டேயன் (நாடகம்) ரூ. 1-00
தபோபலன் ,, ... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும் ... 1-00
நோய்க்கு இடம் கொடேல் ... 1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்) ... 0-80
நன்மக்களைப் பெறுதல் ... 0-80
பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்) ... 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ... 0-75
*ஆத்ம சக்தி ... 0-75
*ஆலய வழிபாடு ... 0-75
*சக்தி தத்துவம் ... 0-70
*சிவதத்துவம் ... 0-70
*மனிதனது நிஜசொரூபம் ... 0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் ... 0-60
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ... 0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும் ... 0-60
*சூரிய நாராயணன் ... 0-50
*முருகக்கடவுள் ... 0-50
*விஷ்ணு தத்துவம் ... 0-50
தெய்வீக மகிமைகள் ... 0-50
சைவன் யார்? ... 0-50
கர்மகாண்டம்எது?ஞானகாண்டம்எது? 0-50
*கணபதி ... 0-40
வர்ணாச்ரம தர்மம் ... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்... 0-30

The Bhagavad Gita (10th Imp.) ...20-00
Sri Lalitambika Sahasranama Stotram...10-00
The Indian National Education ... 8-00
Ramakrishna Lives Vedanta ... 8-00
Facets of Brahman or The Hindu Gods ... 5-00
Daily Divine Digest (DELUXE) ... 4-50
Daily Divine Digest (Ordinary) ... 2-50
Mahabharata (with plastic cover) ... 6-00
Ramayana (do) ... 4-00
The Man Making Message of Vivekanada (with plastic cover) ... 4-00
Sri Vishnu Sahasranama Stotram ... 4-00
The Bahagaved Gita (Small Size) ... 4-00
Siva Sahasranama Stotram ... 3-50
Bheeshma The Superman ... 3-50
Hinduism Hosts Christianity ... 3-00
Holy Bible—In the Light of Vedanta ... 1-50
Reminiscences of Master Mahashaya ... 1-50
*Introducing the Gita ... 1-50
The Garland of Paraaparam ... 1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami ... 1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதைக்கு ரூ. 3-25ம் மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் ரூ. 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ ராமகிருஷ்ணமடம்-ராமேஸ்வரம்

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் தேதி ஸ்ரீ ராமநவமி அன்று இம்மடாலயம் துவக்கப்பெற்றது. அன்று முதல் அங்கு மஹேஸ்வரபூஜை முறையில் அன்னம் வழங்குதல் நடைபெற்று வருகிறது. செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் எல்லா வேளைகளிலும் 4173 பேர் உணவு ஏற்றுக் கொண்டனர். அதற்கான உணவுச் செலவு ரூ. 9147-50. உண்டியல் மூலமும், அன்பர்கள் நேரில் தந்ததுமாக செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் நன் கொடை வரவு ரூ. 5222-00. மூலதனமாக வைத்துக்கொண்டு வட்டியை மட்டும் செலவிடுமாறு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் வந்த தொகை ரூ. 7001-00. இம்மடாலயத்திற்கு தேவையாயுள்ள ஜலவசதி, கக்கூஸ் வசதிக் கான கட்டடவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அக்டோபர் மாதம் முடிய ஆகியுள்ள கட்டடச் செலவு ரூ. 96, 190-70.

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

பொருளாதாரத்தில் எந்தநிலையில் உள்ளவர்களுக்கும் தர்ம சக்கரம் கிடைக்க வேண்டும் என்கிற நோக்கத்துடன் சகாய சந்தா, சாதாரண சந்தா, டிபாசிட் சந்தா, சர்க்கார் நூல்நிலையங்களுக்கு இலவசமாக அனுப் புதல் ஆகிய முறைகளை நடைமுறையில் வைத்துள்ளோம். பேப்பர், மை, கூலி ஆகியவைகளின் விலை உயர்வுக்கு இடையில் சந்தாவைக் கூட்டாமல் இரண்டு ஆண்டுகளாக அதே நிலையில் நிர்வகித்து வருகிறோம்.

மதமாற்றம், சமூகத்தில் காணப்படும் தர்மானுஷ்டானக் குறைவு இவைகளுக்குப் பரிஹாரமாக மக்கள் மனதில் நல்ல உணர்வுகளைத் தூண்டி பக்தி வழியில் வழிநடத்துவதற்கு ஒரு நல்ல உபாயமாகவும் தர்ம சக்கரம் மக்களில் பலபேருக்குக் கிடைக்கவேண்டும் என்றும் கருதுகிறோம். நம் அன் பர்களில் பலரும் இக்கருத்தைத் தெரிவிக்கிறார்கள். ஆகவே நம் சந்தாதாரர் கள் தாங்களே தர்ம சக்கரத்தைப் பயன்படுத்தவும் மற்றவர்களுக்குத் தந்து படிக்க உதவுமாறும், புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தந்து உதவு மாறும் வேண்டுகிறோம்.

Edited by SWAMI NITHYANANDA,

Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.